கல்கி

KALKI 4.12.83 ரூ- 1-20







கே. ராகவன்
தலைவர் சங்கர் நகர் பொதுநலச் சங்கம்

பம்மலின் அவலங்கள்

''பம்மலில் உள்ளவர்கள் அனுமதியின்றி வீடு கட்டியிருக்கிறார்கள்; அவர்களுக்கு அரசு பாதுகாப்புத் தரவில்லை என்று புலம்பி என்ன பிரயோசனம்?' என்ற ரீதியில் அமைச்சர் நெடுஞ்செழியன் சட்டசபையில் பேசியது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலிருக்கிறது' என்கிறார்கள் முகமூடி திருடர்களால் பாதிப்புக்குள்ளான பம்மல் வாசிகள்.

முகமூடித் திருடர்கள் காரணமாக ரொம்பப் பிரபலமடைந்து விட்டது பம்மல். கொள்ளையடிக்கப்பட்ட மூன்று சகோதரர்களின் வீடுகளும் ஒரே காம்பவுண்டுக்குள் உள்ளன. அது அமைந்துள்ள 27—வது தெருதான் சங்கர் நகரின் கடைசி சாலை.

ஆற்றங்கரையில் ஓர் அணங்கு
வண்ணப்படம் : மணி

பண நஷ்டம் ஒருபுறமிருக்க மூன்று குடும்பத் தலைவிகளுக்கும் மனக்கஷ்டம் வேறு. மூவருக்கும் தாலிச்சரடு கொள்ளை போயிருக்கிறது. எந்த நகை போனாலும் கிடைத்தாலும் என் தாலிச் சரட்டில் சேர்த்திருந்த ராகவேந்திர சுவாமி டாலர் கண்டிப்பாகத் திரும்பக் கிட்டும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது என்கிறார் ஜெயலட்சுமி சம்பத். கை, காது, மூக்கு, கழுத்து அனைத்திலும் இருந்த நகைகளை மிரட்டிக் கழற்றித் தரச் சொல்லிக்கொண்டு போயிருக்கிறார்கள். மூன்று வீடுகளிலும் இருக்கும் குடும்பங்களிடையே ஓர் ஒற்றுமை:— பீரோவோ, அலமாரியோ அதைத் திறக்கும் சாவி தயாராக அதனதன் சாவித் துவாரத்திலேயே இருக்கிறது — இன்றைக்கும்!

சங்கர் நகர் பொது நலச் சங்கத் தலைவர் கே.ராகவன் அமைச்சரின் கருத்தை மறுத்துக் கூறினார்:

விவசாய நிலமாக இருந்த இந்தப் பகுதியை வீடு கட்டும் மனையாக மாற்ற முடிவு செய்து ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனம் வாங்கி மனைகளாகப் பிரித்து விற்றிருக்கிறது. இதற்கு செங்கல்பட்டு மாஜிஸ்திரேட்டின் ஒப்புதல் கிடைத்திருக்கிறது. டைரக்டரேட் ஆஃப் டவுன் பிளானிங் சம்மதமும் கிட்டியிருக்கிறது.

சங்கர் நகருக்குப் பக்கத்தில் உள்ள மலையில் கல் உடைக்கும் பணி நடைபெற்று வந்தது. மைன் ஸேஃப்டி ஆக்ட் என்ற பாதுகாப்புச் சட்டப்படி கல் உடைக்கும் இடத்திலிருந்து முந்நூறு மீட்டருக்கு யாரும் தங்கக் கூடாது. அப்படி இருக்கும்போது டவுன் பிளானிங் இயக்ககம் வீட்டுமனைகளுக்கு அனுமதி வழங்குவானேன்? கட்டப்பட்டு விட்ட வீடுகளுக்கு ஒரு கோயில் இருந்தால் நல்லது என்று முடிவு செய்து அப்பணி தொடங்கிய நேரத்தில் இது மதப் பிரச்னையாகி மலைக்கு மறுபுறத்தில் இருந்தவர்களிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியது. இச்சமயத்தில் தான் டவுன் பிளானிங் டைரக்டரேட் ஒப்புதல் திடீரென்று ரத்தாயிற்று. நாங்களும் இந்த அநீதியை எதிர்த்து மனுக்களை அனுப்பிக் கொண்டேயிருந்தோம்.

கல் உடைக்கும் தொழிலிலுள்ள நிபுணர்கள் மலைப்பகுதியைச் சோதித்து இது கல் உடைக்கத் தகுதியான இடமல்ல என்று முடிவு செய்து அரசுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். அரசும் இனி கல் உடைக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தது. ஆனால் சட்டத்துக்குப் புறம்பாக இன்னும் கல் உடைத்து லாரிகளில் ஏற்றி அனுப்பப்படுகிறது. இதே நேரத்தில் வீடு கட்டத் தடை உத்தரவும் நீடிக்கிறது. (முதலில் தந்த அனுமதி பிறகு ரத்தான காரணத்தால்.) இந்த அநீதிகளின் விளைவாக எங்களுக்குக் கிடைக்க வேண்டிய சர்வ சாதாரண வசதிகள் கூடக் கிடைக்கவில்லை. தெரு விளக்குகள், குடிநீர், வடிகால் வசதி, நல்ல சாலை போன்ற ஏதுமில்லை. ஆனால் வீட்டு வரி, தண்ணீர் வரி, நூலக வரி, பூங்கா வரி, சுகாதார வரி போன்ற அனைத்தையும் வசூலித்து வருகிறார்கள்.

எத்தனை விண்ணப்பங்கள் எழுதிப்போட்டும் கூட போலீஸ் அவுட்போஸ்ட் கிடையாது. டெலிபோன் இல்லை. அவசரத்துக்கு ஃபோன் பண்ணவும் போலீஸ் புகார் தரவும் பல்லாவரம் போக வேண்டும். பம்மலுக்கு ரோந்து சுற்ற இரண்டு போலீஸ்காரர்கள் வருகிறார்கள். அவர்கள் இங்குள்ள 24 காலனிகளை ஒரு தடவை சுற்றிவர மூன்று நாட்களாகும்.

தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாயத்துக்களிலேயே அதிக வருவாயுள்ள பஞ்சாயத்து என்று பார்த்தால் பம்மல் இரண்டாவது இடம் வகிக்கிறது. அதற்கே இந்தக் கதி என்றால்...

பேட்டி: சலன்





மகன் சுவாமிநாதனுடன்

தனி ஆவர்த்தனம்

“மிருதங்க சக்ரவர்த்தி படம் வெளியான சமயம். பெங்களூரிலிருந்து வந்து சென்னை சென்ட்ரலில் ரயிலிலிருந்து இறங்கியதும், நண்பர் போர்ட்டரைக் கூப்பிட்டு மிருதங்கங்களை எடுத்துக் கொள்ளச் சொன்னார். ‘மிருதங்கச் சக்ரவர்த்தி வந்திருக்காருடா!’ என்று சக போர்ட்டரிடம் சொல்லிக் கொண்டே அவற்றை எடுத்துக் கொண்டார் போர்ட்டர். நண்பர் அவர்களிடம், ‘இவர்தான்யா மிருதங்கச்சக்ரவர்த்தி படத்திலே சிவாஜி சாருக்கு மிருதங்கம் வாசிச்சிருக்கார்!’ என்று தெரிவித்தார். அவர்களுக்கு ஏக மகிழ்ச்சி. கூலித் தொகையைக் கூட வழக்கத்தை விடக்குறைவாகவே வாங்கிக் கொண்டார்கள்!’’ என்று சிரித்தபடி சொன்னார் திரு. உமையாள்புரம் சிவராமன்.

சிவராமன் வக்கீலுக்குப் படித்தவர். மிருதங்கமா – வக்கீல் தொழிலா என்ற முக்கியமான பிரச்னை எழுந்த போது முன்னதையே தேர்ந்தெடுத்தார். ‘‘வாழ்க்கையில் எதையும் நான் முன்னதாக நிச்சயித்துக் கொண்டதில்லை. அதுபோலவே, எனக்குத் தொழில் மிருதங்கம் வாசிப்பது தான் என்று ஆரம்பத்திலேயே தீர்மானித்துக் கொள்ளவில்லை. ‘உனக்கு நிறைய விருப்பம் இருக்கிறது இதில். இதையே தொழிலாக வைத்துக் கொள்’ என்றார் என் தகப்பனார். என் வாழ்க்கையில் நல்லவை யாவற்றையும் நான் பெற என் தகப்பனார் தான் முக்கிய காரணம் என்று சொல்லுவேன்!

‘‘மிருதங்கம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தது. அதையே தொழிலாகச் செய்து கொண்டது எல்லாம் தெய்வச் செயலான காரியம். என் தகப்பனார் ஒரு டாக்டர். அவரிடம் கட்டி ஒன்றை ஆபரேஷன் செய்து கொள்ள வந்தார் ஒரு பெரியவர். அப்போது எனக்கு வயது ஐந்து. ஆபரேஷன் செய்து கொண்டவர் உமையாள்புரம் கோதண்டராமையரின் சகோதரி மகன். ஆருபாதி நடேச ஐயர் என்று பெயர். மிருதங்க வாத்தியத்தில் மகா மேதை. அப்பா சொற்படி அவரிடம் மிருதங்கம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். (அன்றைக்கே பள்ளிக் கூடத்திலும் சேர்ந்தேன்.) ஏழு வருடம் குருகுலவாச முறைப்படி அவரிடம் கற்றுக் கொண்டேன். பத்தாவது வயதில் கும்பகோணம் காளஹஸ்தீசுவர சுவாமி கோயிலில் என் மிருதங்க அரங்கேற்றம் நடந்தது.’’

இதற்கெல்லாம் முன்னால், சிவராமனின் தந்தை வழிப்பாட்டி சாவித்திரி அம்மாள், பேரப்பயலுக்கு ஒருநாள் கும்பேசுவர சுவாமி கோயில் வாசலில் உள்ள கடையொன்றிலிருந்து ஒரு கஞ்சிரா வாங்கிக் கொடுத்தாராம். தம்முடைய தாள ஞானத்துக்கு இதுதான் ஆதி காரணம் என்று பவ்யமாகத் தெரிவித்தார் சிவராமன்.

‘‘படிப்பு வந்தால் கலை வராது; கலை வந்தால் படிப்பு ஏறாது என்று சொல்வதுண்டு. கலையும் கல்வியும் சேர்ந்து ஒரு தனி மனிதனிடம் பரிமளிக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை!’’ என்றார் படிப்பையும் மிருதங்கப் பயிற்சியோடு தொடர்ந்த சிவராமன்.

‘‘எட்டாவது படிக்கும்போது உமையாள்புரம் திரு. கோதண்டராமய்யர் அவர்களை



✕ குரு தஞ்சாவூர் வைத்தியநாதய்யர் படத்துக்கு அருகில்

என்னைத் தஞ்சாவூர் வைத்தியநாதய்யர் என்ற மிருதங்க வாத்திய மேதையிடம் கொண்டு போய்ச் சேர்த்தார். நூற்றுக் கணக்கான சிடர்களைத் தயார் செய்து, இன்றைய மிருதங்க வாத்தியக் கலையை உருவாக்கித் தந்தவர் இவர். பாட்டுக்கு, வர்ணத்துக்கு, பல்லவிக்கு, தனி ஆவர்த்தனத்திற்கு எல்லாம் இப்படி இப்படி வாசிக்க வேண்டும் என்று வழிவகுத்துத் தந்த மேதை. இவரிடம் ஒரு வருடம் பயின்றேன். என் பிற்கால குருவான பாலக்காடு மணி ஐயர் அவர்கள் கூட இவரது சிடர்தான். இந்த மேதையின் படத்தை 'மிருதங்க சக்கரவர்த்தி' படமாக்கும்போது தயாரிப்பாளர்கள் எடுத்து வரச் சொன்னார்கள். திரைப்படத்தில் — அதுவும் மிருதங்க வாத்தியத்தின் பெருமையைக் காண்பிக்கும் படத்தில் — என் குருநாதரின் படம் இடம் பெறச் செய்ததை என் பாக்கியமாகவே கருதுகிறேன்!

''பாலக்காடு மணி ஐயர் அவர்களிடம் ஒரு வருடம் கற்றுக் கொண்டேன். நான் ஒன்பதாவது படிக்கிற சமயம்! ''இனி நீ கச்சேரிகளுக்கு வாசிக்கலாம்!'' என்று சொல்லி விட்டார். பிறகு பி. ஏ. வரை கும்பகோணம் (சாக்கோட்டை) ரங்கு ஐயங்கார் அவர்களிடம் பாடம். அப்புறம் கும்பகோணம் ராஜப்பா ஐயர் அவர்களிடமும் கற்றுக் கொண்டேன். ஒரு விசேஷம் என்னவென்றால், எனக்குக் குருவாக வாய்த்தவர்களிடம் சிடராயிருந்தவர்களும் எனக்குக் குருவாக இருந்திருக்கிறார்கள்!

''1955—ல் பி. ஏ. டிகிரி வாங்கினேன். 'நீ சென்னைக்குப் போ. நிறையக் கச்சேரிகள் வரும். உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது!' என்றார் என் குரு பாலக்காடு மணி ஐயர் ஒரு முறை தஞ்சாவூர் வந்திருந்தபோது. சென்னை வந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்தேன். ஜஸ்டிஸ் மோகன், ஜஸ்டிஸ் இஸ்மாயில், வழக்கறிஞர் வி. பி. ராமன் எல்லாம் எனக்கு அப்போது பேராசிரியர்கள். 'ஹிந்து' ரகுநாதய்யர் என்னிடம் மிருதங்கத்தில் கான்ஸன்ட்ரேட் பண்ணு. இந்தப் படிப்பு எவ்வளவு தூரம் உனக்கு உபயோகப்படும் என்று எனக்குத் தெரியவில்லை!' என்றார். அதோடு நிற்கவில்லை. 'மிகச் சிறந்த மிருதங்கக் கலைஞனாகப் புகழுடன் விளங்குவாய் நீ!' என்று ஆசி அளித்தார். சில வருஷங்களுக்குப் பிறகு அவரைச் சந்திக்கிறபோது, 'எப்படி? நான் சொன்னது சரியாயிருக்கிறதா?' என்று கேட்டார்.

''1958—ல் பி. எல். டிகிரி வாங்கி எம். எல். சேர்ந்தேன். ஐ. ஏ. எஸ். போன்ற நிர்வாகத் துறைப் பரீட்சைகள் எழுதவும் என்னைத் தயார் செய்து கொண்டேன். அப்போது தான் என் வாழ்க்கையில் முக்கியத் திருப்பம் நிகழ்ந்தது. என்னால் எம். எல் தொடர முடியவில்லை...

''1951—இல் பெரம்பூர் சங்கீத சபா காரியதரிசி, பிரபல சங்கீத வித்துவான் சாத்தூர் சுப்பிரமணியம் அவர்களிடம், 'பையன் பிரமாதமா வாசிப்பான்; நீங்கள் வந்து பாடுங்கள்!'' என்று சொன்னார். லால்குடி வயலின். கச்சேரி முடிந்ததும், வீணை வித்துவான் காரைக்குடி சாம்பசிவ ஐயர், 'எப்படி இருக்கிறது பையனின் வாசிப்பு?' என்று சாத்தூராரைக் கேட்டார். அவர் அடைந்த திருப்தியில், சாத்தூரார் செய்த கச்சேரிகள் எல்லாவற்றுக்கும் நான் வாசித்தேன் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்! அதேபோல, கும்பகோணத்தில் தியாகராஜ சுவாமிகள் உற்சவத்தின்போது, செம்மங்குடி அவர்கள் கச்சேரி. நான் மிருதங்கம் — முதன் முதலாக அவருக்கு வாசிக்கப் போகிறேன். ஆனால் எதிர்பாராத காரணத்தினால் நான் அவருக்கு வாசிக்க முடியாமல் போய்விட்டது. அதனால் தானோ என்னவோ, அதற்கெல்லாம் சேர்த்து வைத்துச் செம்மங்குடி அவர்களுக்கு, பிற்காலத்தில் ஏராளமான கச்சேரிகளில் மிருதங்கம் வாசிக்கும்படி அமைந்தது! அரியக்குடி, ஜி. என். பி., மகாராஜபுரம் விசுவநாதய்யர் முதல் இன்றைய சிறந்த வித்துவான்கள் வரை எல்லாருக்கும் வாசித்திருக்கிறேன். இந்தப் பெரியவர்களுக்கு

✕ தந்தை, மனைவி, மகள்களுடன்



எல்லாம் என் கலை வாழ்க்கையில் மிக உயர்ந்த இடம் உண்டு. அவர்களுக்கு என் நன்றியை நான் அவசியம் சொல்லவேண்டும்.''

இந்தப் பின்னணியில், இளம் வித்துவான்களை ஊக்குவிப்பதில் தம் பங்கைத் தெரிவித்தார் சிவராமன்:

''நான் சிறு பையனாயிருக்கும்பொழுது எப்படி இவர்கள் என்னை முன்னுக்குக் கொண்டு வந்தார்களோ, அதேபோல, நன்றாகப் பாடும் இளம் வித்துவான்களுக்கு இன்று நான் மிருதங்கம் வாசித்து ஊக்குவித்து முன்னுக்குக் கொண்டு வருவதில் எனக்கு மிகுந்த அக்கறை உண்டு. சமீபத்திய உதாரணம் வேண்டுமானால் மாண்டலின் ஸ்ரீனிவாசனுக்கு நான் வாசிக்கிறேன். என் தகப்பனார் சொல்வதுண்டு. ஒருவரிடம் உயர்ந்த வித்தை இருந்தால் அவர் பிரபலமானவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான் வாசிக்க வேண்டும். என் உற்சாகத்தையும் ஒத்துழைப்பையும் முழு அளவுக்குக் கொடுக்க வேண்டும். என் குரு தஞ்சாவூர் வைத்தியநாதய்யர் அவர்கள் மாதிரி, தனக்குத் தெரிந்த வித்தையின் எல்லா நுணுக்கங்களையும் அந்தத் துறையில் அக்கறையுள்ளவர்களுக்குச் சொல்லித் தர வேண்டும் ,என்ற கொள்கை உடையவன் நான்.''

தெற்கேயும் வடக்கேயும் உள்ள இரண்டு இசைக் கலைஞர்களின் பரந்த மனசைக் காண்பிக்கிற நிகழ்ச்சிகள் இரண்டைத் தெரிவித்தார் சிவராமன்:

''இந்திராகாந்தி திடீரென்று பார்லிமெண்ட்டுக்கு இடைத்தேர்தல் நடத்துவாரா?'' என்று 'எமர்ஜென்ஸி புகழ்' 'பன்ஸிலாலை' ஒருவர் கேட்டபோது அவர் இப்படிச் சொல்லியிருக்கிறார்: ''இடைத்தேர்தல் 1984—ல் நடத்தினால் அது இ.காங்கிரசுக்குத் தற்கொலையாக முடியும்!''

''இயல்பாக நடக்க வேண்டிய 1985—ல் நடத்தினால்?'' என்று மறுபடி கேட்டதற்கு அவர் அளித்த பதில்: ''அது இ.காங்கிரசுக்கு இயற்கையான மரணமாக இருக்கும்!''

ஆதாரம்: ஸண்டே.
சம்பத் குமாரி



''பம்பாயில் செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்களின் கச்சேரி. நான்அங்கே மிருதங்கம் வாசித்தேன். ரசிகர்கள் சிலர் அப்போது எனது வாசிப்பை நன்றாகக் கேட்க வேண்டும் என்று செம்பையிடம் விருப்பம் தெரிவித்தனர். 'அப்படியே செஞ்சுடறேம். நீங்க கவலைப்பட வேண்டாம்!' என்று அவர்களிடம் அறிவித்து விட்டு, 'சிவராமா, இன்னிக்கு நான் சொல்ற இடத்தில் எல்லாம் நீ தனி ஆவர்த்தனம் வாசிக்கணும்!' என்றார். அன்றைய கச்சேரியில் எனக்கு ஐந்து முறை தனி ஆவர்த்தனம்! 'உங்களுக்கெல்லாம் திருப்திதானே? வாசிச்சது போதுமா?' என்று சபையோரைக் கேட்டுவிட்டு, என்னை மனந்திறந்து பாராட்டி ஊக்கப்படுத்தினார்.

''தபலா வாத்தியக் கலைஞர் கிருஷ்ண மகராஜ், தம் தகப்பனார் நினைவாக வாரணாசியில் ஓர் இசை விழா நடத்தினார். பகல் 12 மணி. கச்சேரிக்குத் திரளான கூட்டம். மேடையில் சம்பிரதாயமாக அறிமுகம் செய்து விட்டு, 'மேரா சோட்டா பாயி' என்று என்னைத் தழுவிக் கொண்டார். அந்த அறிமுகத்திலேயே மக்கள் பரவசமடைந்து, 'ஜெய் காசிவிசுவநாத்' என்று கோஷமிட்டார்கள். சாதாரணமாக காசி மகாராஜா வந்தால்தான் அப்படிக் கோஷம் செய்வார்களாம். அன்றைக்குத் தன்னை மீறிய உற்சாகத்துடன் மக்கள் கோஷமிட்டபோது இந்த இசைக்கலை எத்தனை பெரிய காரியத்தைச் சாதிக்கிறது என்று உண்மையிலேயே மகிழ்ந்து போனேன்!''

சென்ற ஆண்டு லண்டனில் ஃபெஸ்டிவல் ஆஃப் இந்தியா கலைநிகழ்ச்சிகளின் இறுதி நாள் அன்று நடந்த தாள வாத்தியக் கச்சேரியை மிகவும் ரசித்துக் கேட்டவர்கள்: ராஜீவ்காந்தியும், ட்யூக் ஆஃப் க்ளஸெஸ்டரும். 'உங்கள் விரல்கள் எப்படி இவ்வளவு விரைவாய் இயங்குகின்றன? எப்படி இவ்வளவு மாறுபட்ட ஒலிகளை இதில் எழுப்புகிறீர்கள்?' என்றெல்லாம் வெகு ஆர்வத்துடன் இருவரும் இடைரக் கேட்டார்கள். அன்றைக்கு விசேஷப் பரிசாக ஒரு வெள்ளி டாலர் அளித்தார்களாம். ஒருபுறம் எலிஸபெத் அரசி; மற்றொரு புறம் சார்லஸும் டயானாவும்!

தாம் செய்த மிகச் சிறந்த பணி என்று சிவராமன் கருதுவது—

''ரசிகர்கள் மிருதங்க வாசிப்பின் பல்வேறு சிறப்புக்களை அறிந்து கொள்ளும்வகையில், நான் பல இடங்களில் நிகழ்த்திய லெக்சர் — டெமான்ஸ்ட்ரேஷன். இதுதவிர I. I. T. பேராசிரியர் பலராமன் அவர்களுடன் ஃபைபர்கிளாஸ் மிருதங்கம் அமைத்து, வெற்றிகரமாகக் கச்சேரிகளில் கையாண்டதையும் சொல்லலாம்.''

சிவராமனுக்கு நிறைய சீடர்கள். மகன் சுவாமிநாதன் — ப்ளஸ் டூ மாணவர் — இப்போதுதான் அரங்கேறியிருக்கிறார்.

பேட்டி: சாருகேசி, தமயந்தி

மேலட்டை வண்ணப்படம், புகைப்படங்கள் 'சுபா'



குழந்தைக் குலத்தை

நூற்றுக் கணக்கான குழந்தைகளின் முகங்களில் புன்னகை மலரும்; இதயங்களில் ஆனந்தம் பொங்கும்; கண்கள் பனிக்கப் பாலகர்கள் உங்களை வாயார வாழ்த்து வார்கள்.

வெகு எளிதாக நீங்கள் குழந்தைக் குலத் தின் நன்றியைப் பெறலாம்.

ஒரு பள்ளிக் கூடத்துக்கு ஒரு ஆண்டுக்கு கோகுலம் பரிசளிப்பதெனத் தீர்மானி யுங்கள். சந்தாத் தொகை ரூ. 24 எங்களுக்கு கிடைக்கச் செய்யுங்கள். உங்கள் அன்பளிப்பு என்று குறிப்பிட்டு அந்தப் பள்ளிக்கு மாதா மாதம் கோகுலம் அனுப்புகிறோம்.

உங்களுக்குச் செலவு 24 ரூபாய்தான். ஆனால் அத்தொகை ஓராண்டில் நிகழ்த்தப் போகிற சாதனையைப் பாருங்கள்: மாதா



மாதம் கோகுலத்தை நூற்றுக்கணக்கான குழந்தைகள் பள்ளியில் பகிர்ந்து கொண்டு படிக்கும்போது அவர்களிடையே நட் புணர்ச்சி வளரும். பொது அறிவு விசாலப் படும்; நற்குணங்கள் மிகும். ஆரோக்கியம் பெருகும். பொழுது போக்காகவும் இருக் கும்!

உங்கள் பெயர், விலாசத்தோடு உங்கள் அன்பளிப்பைப் பெறுகிற பள்ளியின் பெயர் விலாசமும் கல்கியில் பிரசுரமாகும்.

'அதென்ன, ஒரே ஒரு பள்ளிக்குத்தான் நான் அன்பளிப்பாக சந்தாத் தொகை உங்க ளுக்கு அனுப்ப வேண்டுமா?' என்று கேட்ப வர்களுக்கு:

உங்கள் பொருளாதார வசதிக்கு ஏற்ப இரண்டு மூன்று அல்லது நான்கு பள்ளிகளை கூடத் தேர்ந்தெடுத்து அதற்கேற்ப சந்தாத் தொகை அனுப்பி பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை மகிழ்விக்கலாம். அல்லது ஒரு பள்ளிக்கே இரண்டு அல்லது மூன்று பிரதிகள் கிடைப்பதற்கு வழி செய்யலாம்



சென்னை, கதீட்ரல் ரோடு, 67–ம் நெம் பர் இல்லத்தில் வாழும் திரு. எம். ராஜா எழுதுகிறார்:—

மின்மினிக் கதைகளிலிருந்து பிருந்தா வனம் வரையிலும் சிறுவர் பெரியவர் பாகு பாடில்லாமல் ஆர்வத்துடன் படிக்கக்கூடிய கதை கட்டுரைகளைத் தாங்கி வரும் கோகு லத்தின் சேவை செழித்து வளரட்டும்.

சென்னை அனாதை இல்லங்களில் உள்ள சிறுவர் சிறுமியர் கோகுலத்தின் இனிமை யைச் சுவைக்க வேண்டாமா? அவர்களுக் கும் கோகுலம் கிடைக்க ஆண்டுச் சந்தாக்கள் அனுப்பியுள்ளேன்.

மகிழச் செய்யுங்கள்

திரு. எம். ராஜா வழிகாட்டுகிறார்.

கோகுலம் வாங்கிப் படிக்க வசதியற்ற பல்லாயிரக்கணக்கான குழந்தைகளின் ஒரு பகுதியினருக்கேனும் திரு. எம். ராஜாவைப் போலவே உதவ நீங்களும் நிச்சயம் ஆசைப் படுவீர்கள்.

டிராஃப்ட், மணி ஆர்டர்களை ''நிர்வாகி, கோகுலம்'' என்ற பெயருக்கு, ''கல்கி காரியாலயம், சென்னை–600 032'' என்ற விலாசத்துக்கு அனுப்பவும். 'செக்' எனில் பாங்க் கமிஷன் ஒரு ரூபாய் சேர்த்துக் கொள்ளவும்.

மிகக் குறைந்த செலவில் குழந்தைக்குலத் துக்கு மிக உன்னதமான, நிரந்தரப்பயன் தரும் பணியை மிக எளிதாக நிறைவேற்ற உங்களுக்கு ஒரு நல்வாய்ப்பு. உடனே செயல் படுமாறு அழைக்கிறோம்.

அழ. வள்ளியப்பா,
கௌரவ ஆசிரியர், கோகுலம்.
கி. ராஜேந்திரன்,
ஆசிரியர், கல்கி.

டேப் அரசியல்– சில புதிய தகவல்கள்

மொய்லி டேப் விவகாரத்துக்குப் பிறகு பங்களூர் சென்று மக்களுடன் பேசும்போது சீக்கிரத்திலேயே நம் மனத்தில் பதிகிற விஷயம் ஜனதா ஆட்சியிடம் மக்களுக்கு நம்பிக்கை குறைந்து வருகிறது: ஆனால் ஹெக்டேயிடம் மக்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது என்பதுதான். பால்விலை ஏறியிருக்கிறது. பஸ் கட்டணம் உயர்த்தப் பட்டிருக்கிறது. மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மக்கள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். ஹெக்டே ஊழல் செய்ய மாட்டார் என்ற நம்பிக்கை தான். இந்த நம்பிக்கையும் தவறானது என்று இ. காங்கிரஸ்காரர்கள் கூறுகின்றனர்.

ஊழல் குற்றச்சாட்டுகள்

தற்சமயம் பத்திரிகையாளர்களிடம் மிகவும் பரபரப்பாக உள்ள பெரும் ஊழல் விவகாரம், பெங்களூர் வளர்ச்சி குழுமத்தில் 100 கோடி மதிப்புள்ள வேலையை டெண்டர் போடாதவர்களுக்குக் கொடுத்ததுதான். இந்த விஷயம், மக்களிடம் இன்னும் பிரபலமாகவில்லை. ''கட்சித் தாவலை ஊக்குவித்தவரே ஹெக்டே தான்'' என்றும் இ. காங்கிரஸார் குற்றம் சாட்டுகின்றனர். 223 பேர் கொண்ட சட்டசபையில் 62 பேர்தான் ஜனதா. மீதி 31 பேர் கர்நாடகா கிராந்தி ரங்காவைச் சேர்ந்தவர்கள். தேர்தலுக்குப் பிறகு இணைந்தவர்கள்.

○ பைரே கவுடா (டேப் ரிகார்டருடன்)





○ ஹெக்டே

இந்த 31 பேர்களில் 12 பேருக்கு மந்திரி பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது.

சுயேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜனதாவை ஆதரிக்கும் 9 உறுப்பினர்களுக்கு வாரியங்களின் தலைவர்கள் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது ''இது ஒருவகை லஞ்சம் தான்'' என்கிறார்கள் காங்கிரஸார்.

ஜனதா ஆட்சி நிலைக்குமா?

பாரதீய ஜனதா கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள் போன்றவற்றின் ஆதரவோடு ஆட்சி நடந்து கொண்டிருந்தாலும், சுயேச்சைகளின் ஆதரவு மிகவும் முக்கியமான ஒன்று. ''75 சதவீத சுயேச்சை உறுப்பினர்கள் காங்கிரஸில் டிக்கெட் கிடைக்காததால் போட்டியிட்டு வென்றவர்கள். அவர்களை இழுப்பதற்கு (விலைக்கு வாங்குவதற்கு?) எங்களுக்கு உரிமை இருக்கிறது'' என்கின்றனர் காங்கிரஸார். இப்படி வெளிப்படையாக இவர்கள் பேசுவதைக் கேட்க நமது ஜனநாயகம் எத்தனை இழிநிலைக்கு வந்து விட்டது என்ற வருத்தம் மேலோங்குகிறது. கடந்த பத்து மாத காலமாக 4 முறைகள் சட்டசபை நடந்தும், ஒரு முறை கூட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரத் தைரியம் இல்லாதவர்கள் தான் ஹெக்டே மந்திரிசபை நிலையில்லாதது என்று அடிக்கடி சட்டசபைக்கு வெளியே பேசி வருகிறார்கள்.

பைரே கவுடா

கோலார் மாவட்டத்தில் உள்ள ஓசக்கோட்டை என்ற தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். சுயேச்சையாக, காங்கிரஸ்காரராக, கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவராக என்று பல்வேறு நிலைகளில், சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவிகளுக்கு அலைபவர் என்று பத்திரிகை



○ டெல்லியிலிருந்து வந்த நோட்டுக்கள்

யாளர்களால் பேசப்படுபவர். தற்போது, பங்களூர் குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக இருப்பவர். மாதத்திற்கு இரண்டு முறைகள் வீரப்பா மொய்லியை (அவர் பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவராக இருப்பதால்) சந்தித்துப் பேசுபவர். இவர் பணத்தை வாங்கிக் கொண்டு, டேப் செய்து வெளியிட்டது, இவரது புத்திசாலித்தனமா? அல்லது முதல்வர் ஹெக்டேயின் ஆலோசனையா? கர்நாடக அரசியலைக் கரைத்துக் குடித்தவர்கள் காங்கிரஸின் இந்த அசிங்கமான வேலையை வெளிப்படுத்த ஏற்பாடு செய்தவர் ஹெக்டேதான் என்கின்றனர்.

பணம் கைமாறியதா?

''சந்தேகமே இல்லை'' என்கிறார்கள், மக்களும், காங்கிரஸ்காரர்களும். கிட்டத்தட்ட மூன்றரைக் கோடி ரூபாய் இதற்காக டெல்லியில் இருந்து வரவழைக்கப்பட்டு இருப்பதாகவும் பேசிக் கொள்கிறார்கள். காங்கிரஸ் தலைமையினால் பைரேகௌடாவுக்குக் கொடுக்கப்பட்ட தொகை பத்து லட்சம் என்றும், ஆனால் கொடுத்தவர் 8 லட்சத்தை எடுத்துக் கொண்டு, 2 லட்சத்தைத் தான் கொடுத்தார் என்றும் சொல்கிறார்கள்.

மொய்லி டேப் உண்மையா?

''நிச்சயமாக அது என் பேச்சு இல்லை, மிமிக்ரி'' என்கிறார் மொய்லி. நான் பேசியதாகச் சொல்லப்படும் டேப்பில், பணத்தைப் பற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை'' என்கிறார். இப்போது என்னதான் வாதத்திற்காக மொய்லி பேசினாலும், அவர் பணம் கொடுத்தது உண்மை தான் என்று பெயர் குறிப்பிட விரும்பாத காங்கிரஸ் தலைவர்களே சொல்கிறார்கள்.

காங்கிரஸில் உட்கட்சி சண்டை

இது எல்லா மாநிலத்திலும் வியாபித்து இருப்பது போல் இங்கும் இருக்கிறது. கே. எச். பட்டீல், ஸ்ரீகண்டையா, குண்டுராவ் போன்றவர்கள் வீரப்ப மொய்லியின் நடத்தையைக் கண்டு வெறுப்புற்று இருக்கிறார்கள். இந்த மாதிரியான விஷயத்தில் மொய்லி மாட்டிக் கொண்டது அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்து இருக்கிறது. ஆனால் வெளிக் காட்டிக் கொள்ள முடியவில்லை. 'தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருப்பதால் தன்னை அரசியலில் இருந்து ஒழித்துக் கட்ட முற்பட்ட வகுப்பினரான காங்கிரஸ்காரர்களே முயல்கிறார்கள்' என்று மொய்லி சொல்லி இருக்கிறார்.

பங்காரப்பா கைங்கர்யம்

அவரும் அவர் பங்குக்கு, வஸந்த பங்கேரா என்ற பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏவைத் தனது கட்சிக்கு வலை போட்டு (விலை போட்டு?) வைத்திருந்தாலும், பி. ஜே. பி. கட்சியினர் அந்தத் திட்டத்தை உடைத்து விட்டார்கள். வஸந்த பங்கேரா சொல்லும் கடத்தல் நாடகத்தை நம்ப யாரும் தயாராக இல்லை. பங்காரப்பா இதைப்பற்றி மூச்சுவிட மறுக்கிறார்.

ROUND UP

ஒரு கவேச்சையான புலனாய்வு நடத்தினால் ஒழிய உண்மை தெரிய வாய்ப்பில்லை. காங்கிரஸின் இந்தச் செயலைக் கண்டு மக்கள் வெறுப்புற்றுப் போயிருக்கிறார்கள். தேர்தல் வந்தால் கூட ஜனதா, தற்போது உள்ளதை விட இரண்டு மடங்கு இடத்தைப் பெறலாம். இந்த டேப், பண விவகாரத்தில் மக்களின் அனுதாபத்தைப் பெற்று விட்டது ஜனதா கட்சி —அல்ல— அல்ல— பெற்று விட்டார் முதல்வர் ராமகிருஷ்ண ஹெக்டே.

-ப்ரியன்

படங்கள்: பாபுராஜ்

○ வஸந்த பங்கேரா




○ வீரப்ப மொய்லி




நீ ஒன்னும் பயப்படாதே!.. புலியின் பசிக்குப் புல்லுக் கட்டு கொண்டாந்திருக்கேன்!
பொருளாதாரக் கொள்கை
லொள்!.. லொள்!.. குரைப்பேன்.. கடிப்பேன்! குதறுவேன்!.. கிழிப்பேன்!.. லொள்!
கர்நாடக அரசு
நம்ம வாத்தியாரு படா கில்லாடி! இன்னிக்கு இல்லேன்னு எப்பவாவது ஒரு நாளைக்கு கள்ளு, சாராயத்தை ஒழிச்சே புடுவாரு!

கல்கி
1983 டிசம்பர் 4
ருத்ரோத்காரி கார்த்திகை 18
மலர் : 42 இதழ் : 18





சோகம்! சோகம்?

புதுதில்லியில் நடக்கும் காமன்வெல்த் நாடுகளின் ஆட்சித் தலைவர்கள் மாநாடு சுருக்கமாகச் சோகம் (CHOGM) என்று அழைக்கப்படுகிறது. 'இப்படி மக்களின் வரிப்பணத்தை ஏகமாகச் செலவு செய்து மாநாடு நடத்துவதால் என்ன பயன் விளையப் போகிறது?' என்று மக்கள் கேட்பதில் தவறில்லை. இம்மாநாட்டுக்கு வரும் பெரும் தலைவர்கள் 72 மணி நேரம் இளைப்பாற 44 கோடி ரூபாய் செலவிட்டு கோவாவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 'இது ஏழை நாடு என்று வந்திருப்பவர்களுக்குத் தெரியாதா? அவர்களை ஏமாற்றுவது போல் இதென்ன டாம்பீகம்?' என்றும் வரி செலுத்தும் ஒவ்வொரு குடிமகனும் கேட்க உரிமை உண்டு.

நியாயமான இந்தக் கேள்விகளுக்கு நியாயமான பதிலும் இருக்கிறது. செய்யப்படுகிற செலவெல்லாம் இந்தியாவில்தான்; நமது செல்வம் நம் நாட்டை விட்டு எங்கேயும் ஓடிப்போய் விடவில்லை. மேலும் தான் கஞ்சியோ கூழோ குடித்தாலும் கடன்பட்டாவது வந்திருக்கும் அதிதி மனம் மகிழ உபசரிப்பது நமது பண்பு. இப்போது வந்திருப்பவர்களோ காமன்வெல்த் நாடுகளின் ஆட்சித் தலைவர்கள். அவர்களை வரவேற்று விருந்தோம்புவதில் அற்பப் புத்தியைக் காட்டத் தேவையில்லை.

மக்களுடைய வரிப்பணத்தை அரசு செலவழிப்பதில் தவறேயில்லை. செலவு செய்வதற்காகத் தான் வரி வசூலே செய்யப்படுகிறது. ஆனால் செலவாகும் பணத்தினால் நற்பயன்கள் விளைய வேண்டும். சோகம் மாநாட்டினாலும் ஏராளமாகப் பயன்கள் விளைய வாய்ப்புண்டு. ஆனால் அந்த வாய்ப்புக்களை எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறோம் என்பதுதான் கேள்விக்குறி!

உதாரணமாக, கோவாவில் செலவாகிற ஏராளமான பணம், சில நிரந்தர அபிவிருத்திகளைச் செய்திருந்தால், அதன் விளைவாக எதிர்காலத்தில் ஏராளமான அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கோவாவுக்கு வருவார்களேயானால், நாம் இப்போது செலவிடுவதற்கு மிக அதிகமாகவே அந்நியச் செலாவணி சம்பாதித்து விட முடியும்.

புதுதில்லியிலும் கோவாவிலும் நடக்கும் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றாலும் எத்தனையோ நற்பயன்கள் விளையக்கூடும். உதாரணமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தங்கள் பாதுகாப்புச் செலவினங்களைக் குறைக்கப் பிராந்திய பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்து கொள்ளலாம் என்றும் அதே நேரத்தில் பொருளாதார அபிவிருத்தியும் காண அரசாங்க கண்ட்ரோல்களைத் தளர்த்தி சுதந்திரத் தொழில் வர்த்தகக் கொள்கைக்கு முக்கியத்துவம் தரலாம் என்றும் அருமையான யோசனைகளைக் கூறியுள்ளார் பிரிட்டிஷ் பிரதமர். 'இவர் என்ன சொல்வது, நாம் என்ன கேட்பது?' என்றில்லாமல் விசால மனத்துடன் யோசனையை ஏற்றுக் கொள்கைகளை மாற்றிக் கொண்டால் இங்கே பொருளாதார ரீதியில் அற்புதங்கள் நிகழும்.

அணு ஆயுத உலகப் போர் பற்றிய அச்சம் காமன்வெல்த் தலைவர்கள் அத்தனை பேருக்கும் உள்ளது. இம்மாநாட்டின் விளைவாக ஓர் உச்ச கட்டக் குழு அமைந்து அத்தனை நாடுகள் சார்பிலும் இக்குழுவினர் ருஷ்ய, அமெரிக்க அதிபர்களை நேரில் சந்தித்து ஒரு குரலாகப் பேசினால் அந்தச் சக்தி மிக்க குரலை வல்லரசுகளால் அலட்சியப்படுத்த முடியாது.

இதுபோன்ற நற்பயன்கள் விளைந்தால் சோகம், ஆனந்தமாகும்; இல்லையேல், சும்மா கூடிப் பேசிக் கலைவதுதான் காரியம் என்றால் சோகம் சோகம்தான்!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அபிமானவல்லி

கி.ராஜேந்திரன்



அத்தியாயம் 5

ஓவியக் கூடம்

அபிமானவல்லி தீட்டிய ஓர் ஓவியம் போலவே செக்கர் வானம் திகழ்ந்த நேரத்தில் அவள் மாளிகை முகப்பை நெருங்கினான் ஆதித்தன். அவனுக்கு முன்னும் பின்னும் வேல் நுனியில் புலிக் கொடி ஏந்திய சில அணுக்கப் பேரரையர்கள். அவர்கள் ஆரோகணித்திருந்த அராபிய உயர் ஜாதிப் புரவிகள் வேகம் காட்டின என்றாலும் அவற்றின் அசைவுகளில் இருந்த அழகு காரணமாகப் பரபரப்பு தோன்றவில்லை. பாங்கு புலனாயிற்று. குதிரைகள் ஒரு நிலைக்கு வருமுன்னரே துள்ளி இறங்கிய மெய்க்காவலர்களுள் இருவர் மன்னர் பாதங்கள் பூமியை மிதிக்கும் போது அருகிலிருக்க விரைந்தனர். வேறு இருவர் மாளிகைக் காவலரிடம் அடங்கிய குரலில் உரையாடி விசாரணை நடத்தினர். வேறு நால்வர் மாளிகைக்குள் நுழைந்து நாலு திசைகளுக்கும் பரவித் துரித நோட்டம் விட்டு விட்டு மறுபடி வெளியே வந்து நின்று கொண்டனர். அரசனின் பாதுகாப்பு கருதி இயங்கிய அவர்களின் போக்கில் தலையிடாததுடன் அவர்களுக்குப் போதிய அவகாசம் தரவும் கருதித் தாமதிப்பவன் போல் நடந்து கொண்ட ஆதித்தன் அந்தத் தருணத்தைப் பயன்படுத்தி மேலுத்தரீயத்தால் தன் முகம் கழுத்து தோள்கள் முதலான பகுதிகளை வியர்வையும் தூசியும்போக அழுந்தத் துடைத்துக் கொண்டான். அபிமானவல்லியை அணுகும் போது 'பளிச்' சென்று இருக்க வேண்டும் என்ற அவன் ஆர்வத்தைக் கண்டும் காணாதது போல் நடித்த மெய்க்காவலர்கள் புன்னகையை ஒளித்தனர். நிதானமாகப் புரவியிலிருந்து கீழே இறங்கினான் ஆதித்தன். மாளிகையின் வரவேற்பு கூடத்தை அடைந்து மயிலாசனத்தில் அவன் அமர்ந்த போது அத்தனை பெரிய கூடத்தில் அவனும் அபிமானவல்லியும் மட்டுமே இருந்தனர்.

மன்னரோ மற்றவர்களோ வந்ததையோ மன்னரைத் தவிர மற்றவர்கள் திரும்பச் சென்றதையோ சற்றும் உணராதவள் போல அபிமானவல்லி தூரிகையால் திரைச்சீலையில் வண்ண ஓவியம் தீட்டிக் கொண்டிருந்தாள். முன்னர் அறங்கூர் அவையில் அவளை முற்றிலும் கரிய நிற உடையில் பார்த்திருந்த ஆதித்தன் அதற்கு நேர் மாறாகக் கறுப்புக் கரையுடன் கூடிய தூய வெண்ணிற உடையில் இப்போது கண்டான். ஒரு மல்லிகை மாலையென வாரி எடுத்து அணிந்து கொண்டு விடலாம் போலத் தோன்றியது. இத்தனைக்கும் அவள் பின்புறத்தைத்தான் இப்போது அவன் கண்டான். மார்புக் கச்சின் முடிச்சுக்குக் கீழே தந்த நிற முதுகுப் பகுதியும் அது குறுகி மீண்டும் விரியத் தொடங்கிய இடத்திலிருந்து அவள் பின்புற எழிலை மறைத்த வெண்துகிலும் ஒரு கிறக்கத்தை ஏற்படுத்தின. உடையின் விளிம்பில் இருந்த கறுப்புக் கரை அவள் அங்கங்களின் வடிவழகுகளைக் கோடிட்டுக் காட்டுவது போல் அமைந்திருந்தது. கூடத்தில் சூழ்ந்திருந்த மெல்லிய நறுமணம் மறைவாயிருந்த தூபத்திலிருந்து எழுவதா அல்லது அவள் மென்னுடலிலிருந்தே புறப்படுவதா என்பதை நிர்ணயிக்க முடியவில்லை.

அதேபோல் அரசன் வந்தமர்ந்து சற்று நேரமாகியும் அவள் திரும்பிப் பாராமல் இருந்தது கலைப் படைப்பில் அவள் ஆழ்ந்து போயிருந்ததாலா அல்லது அவன் மீதிருந்த கோபத்தாலா அல்லது அவள் அழகைச் சற்று நேரம் ரசிக்க அவனுக்கு வாய்ப்புத் தரும் நோக்கிலா என்பதையும் அனுமானிக்க முடியாமல் திணறினான் ஆதித்தன். ''அபிமானவல்லி'' என்று அன்பு ததும்ப அழைத்தான்.

திடுக்கிட்டவளாக அவள் திரும்பி நோக்கினாள். கரத்தில் பற்றியிருந்த தூரிகை நழுவித் தரையில் வண்ணச் சித்திரங்களை ஏற்படுத்தியது. இப்போது அவள் முன் அழகு வெள்ளைப் பூந்துகிலின் பின்னே கற்பனைக்கு அதிக இடம் வைக்காத அளவில் மறைக்கப்பட்டுக் காட்சியளித்தது. மன்னரே வந்திருக்கிறார் தன்னைத் தேடி என்ற எண்ணத்தில் மலர்ந்த முகத்தை அடுத்தகணத்தில் மறுபடி சோகம் கப்பிக் கொண்டது.

வேறு திசையில் வதனம் திரும்பித் தாழ்ந்தது.

பெருமூச்செறிந்தான் ஆதித்தன்.

''வல்லி இத்தனை நாட்களாகியும் நீ என்னை மன்னிக்கவில்லை என்று தெரிகிறது.''

''பிரபோ பெரிய வார்த்தைகளைப் பயன்படுத்துகிறீர்கள்; தங்களை மன்னிக்க நான் யார்?'' என்று அபியானவல்லி கேட்டபோது கண்களில் திரண்ட முத்துக்கள் அவள் ஆபரணங்கள் ஏதும் அணியாத துறையை இட்டு நிரப்பின.

''பெண்ணே! என் இன்னுயிர் நண்பனைத் தண்டிக்க நேர்ந்ததில் எனக்கு ஏற்பட்ட வருத்தம் காதலனைப் பிரிய நேர்ந்ததில் உனக்கு ஏற்பட்டுள்ள துயரத்துக்குச் சிறிதும் குறைந்ததல்ல. ஆனால் ராஜநீதி நிலைக்க வேண்டுமல்லவா?''

''பிரபோ! தங்கள் நீதி எனக்குப் புரியவில்லை. சாத்தனை விக்கியண்ணன் கொன்றார் என்றால் அவருக்கு மரண தண்டனை விதித்திருக்க வேண்டும்; கொல்லவில்லை எனில் அவரை விடுவித்திருக்க வேண்டும். இரண்டுமின்றி அவருக்குப் பத்தாண்டு சிறைவாசம் என்றால் அது கொடுமை. ஒருவரை அணுஅணுவாகச் சித்திரவதைக் குள்ளாக்குவதைவிட ஒரு வழியாகத் தூக்கிலே தொங்கவிடுவது மேல்... ஐயோ! கடந்த ஏழெட்டு நாட்களாக அவர் சிறையில் என்னென்ன துன்பங்களை அனுபவிக்கிறாரோ!''

''வல்லி! ராஜ நீதி என்பது நீ எதிர்பார்ப்பது போல் ஒற்றையா இரட்டையா விவகாரமல்ல. விக்கியண்ணன் சாத்தனைக் கொன்றதை யாரும் கண்ணால் பார்க்கவில்லைதான். எனினும் கையும் களவுமாகப் பிடிபட்டான் என்பது போல் கொலை நடந்த இடத்தில் பிடிபட்டிருக்கிறான் விக்கியண்ணன். ஆனால் அவன் சாத்தனை உன் கட்டிலில் பார்த்ததும் உணர்ச்சிவசப்பட்டுச் செய்த காரியம் அது என எண்ண இடமிருக்கிறது. அப்படி அவன் உணர்ச்சி வசப்பட்டதில் நியாயமும் இருக்கிறது. அதனால் தண்டனையைக் குறைக்க வேண்டிய கட்டாயம் எனக்கிருக்கிறது.''

''மன்னர் பிரானே நான்தான் அவையில் உங்களிடம் மன்றாடினேனே 'கொலையைச் செய்தது நான்தான்! விக்கியண்



னை விடுவித்து விடுங்கள்!' என்று கெஞ்சினேனே! நீங்கள் கருணை காட்டவில்லையே! தண்டனையை எனக்கு மாற்றி அவரைக் காத்தருள வில்லையே!'' அன்றைய நினைவில் இன்று விம்மினாள்.

மன்னன் எழுந்து அவள் அருகில் வந்து இடக்கரத்தின் விரல்களால் முகவாயைத் தாங்கி உயர்த்தி, தனது மேலுத்தரியத்தால் கண்ணீரை ஒற்றி எடுத்தான். ''வல்லி! காதலனை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்ற பெருநோக்கில் உன்மீது நீயே பழிசுமத்திக் கொண்டு பேசியதை அவையில் வெண் சாமரம் வீசும் சேடிமுதல் அதிகரண அதிகாரிகள் வரை யாருமே நம்பாத போது என்னால் எப்படி நம்ப முடியும்? உன் கோமளமான இதயத்தை இப்படி நோகச் செய்ய வேண்டியிருக்கிறதே என்று எவ்வளவு வேதனைப் பட்டேன் தெரியுமா?'' ஆதித்தன் அவள் கண்களை ஏக்கத்துடன் நோக்கினான்.

''பிரபோ! தாங்கள் வந்த காரியத்தை வினவாது என் துயரையே சொல்லிக்கொண்டிருக்கிறேன்.''

''முதல் நோக்கம் உனக்கு ஆறுதல் கூறுவதுதான்.''

''யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? நீங்களும்தான் மனம் சமாதானமடையாமல் தவிக்கிறீர்கள்.''

''ஆம் வல்லி! நம் இருவருக்குமே ஆறுதல் தேவைதான். அதை ஒருவருக்கொருவர் வழங்கிக் கொள்ளலாம் என்று நம்பித்தான்...''

பேசியவாறே அவள் தலையை வருடி மெல்லத் தன் பக்கம் சாய்க்க ஆதரவு தேடி இயல்பாக அவன் நெஞ்சில் முகம் புதைத்தாள். அச்சமயம் அவளுக்குப் பின்னால் இதுவரை மறைந்தும் மறையாமலுமிருந்த ஓவியம் இப்போது தெற்றென அவன் கண்களுக்குப் புலனாயிற்று.

''ஆறுதல் சொல்வதோடு நீ வரைந்து வரும் வண்ண ஓவியங்களைப் பார்க்கலாம் என்ற எண்ணமும் உண்டு'' என்றான் ஆதித்தன்.

''அரசே! எனது வாழ்க்கை அனுபவங்களையே நான் ஓவியமாக்குகிறேன். அவை தாம் உயிரோட்டமுள்ளவையாய் அமைகின்றன.''

''தெரிகிறது வல்லி! சிறைக் கூடக் கம்பிகளுக்குப் பின்னால் விக்கிரமனின் ஏக்கமும் துயரமும் மிக்க முகத்தை இந்த ஓவியத்தில் பார்க்கும் போதே புரிந்து கொண்டேன்'' என்றான் ஆதித்தன். ''ஆனால் நீ தீட்டியிருப்பது போல் அவன் சிறைக் கதவுக் கம்பிகளைப் பற்றிக் கொண்டு நிற்க முடியாது. வெளிச்சமே புக முடியாத பாதாளச் சிறையில் கிடந்து வாடுகிறான்.''

''ஐயோ!'' என்று அலறி விலகி நின்றாள் அபிமானவல்லி. ''இரவு பகல் கூடப் புரியாமல் சதா இருள் சூழ்ந்திருக்குமே! இதென்ன கொடுமை!''

''வல்லி! நீ அதைப் பற்றி அதிகம் நினைத்துப் பாராமல் இருப்பது நல்லது. நான் கூட உன் சித்திரத்தில் உள்ள தவறைச் சுட்டிக் காட்ட அவசரப்பட்டிருக்க வேண்டாம். உனக்கு இந்த விவரம் தெரியவராமலே இருந்திருக்கலாம். போகட்டும், உனது மற்ற ஓவியங்களைக் காண்போமா?''

சித்திரக்கூடத்துக்கு அவனை அழைத்துப் போனாள் அபிமானவல்லி. ஆதித்தன் அங்கிருந்த பல சிற்பங்களைப் பல கோணங்களில் எட்ட இருந்தும் கிட்டச் சென்றும் விமர்சனப் பார்வையுடன் நோக்கினான். ஒன்றை ''ஆகா! அற்புதம்'' என்று பாராட்டினானென்றால் இன்னொன்று மிக நேர்த்தியாக அமைந்திருந்தாலும் அதில் ஓரிரு குறைகளும் இருப்பதைச் சுட்டிக் காட்டினான். பிறிதொன்றில் ''வண்ணச் சேர்க்கை சரியில்லை; இளிப் பச்சைக்குப் பதில் இலைப் பச்சையைப் பயன்படுத்தியிருக்கலாம்'' என்று கருத்துத் தெரிவித்தான்.

அங்கே ரதி மன்மதச் சித்திரங்கள் இருந்தன; நடன நங்கையொருத்தியின் பல்வேறு கரணத் தோற்றங்கள் படமாகியிருந்தன. தெய்வத் திருவுருவங்களும் பல காணப்பட்டன. இவற்றுக்கு இடையிடையே பாடம் செய்த தோலிலும் பதப்படுத்தப்பட்ட துகிலிலும் அவளுடைய வாழ்க்கை அனுபவங்களும் வண்ண ஓவியங்களாகியிருந்தன. தந்தையும் மகளுமாக யாத்திரை சென்றார்கள் ஒரு படத்தில்; ஒரு கோயில் உருவாகி வரும் இடத்தில் சிற்பிகள் பலர் வேலை செய்து கொண்டிருந்தார்கள் இன்னொரு படத்தில்; விக்கிரமனும் அபிமானவல்லியும் காதலர்களாகக் குதூகலித்தார்கள் வேறு சில சித்திரங்களில்; திருப்புறம்பயம் கோயில் உருவாகிக் கும்பாபிஷேகம் நடக்கும் காட்சியை ஓர் ஓவியத்தில் காண முடிந்தது.

சாதனைப் புத்தகம் செய்த சாதனை

இந்த ஆண்டு 'கின்னஸ்' சாதனைகள் புத்தகம் (30வது பதிப்பு) உலகெங்கிலும் 23 மொழிகளில் வெளியாகி 5 கோடி பிரதிகள் விற்பனையாக இருக்கிறது. இது ஒரு உலக சாதனை ஆதலால் இந்த வருட 'கின்னஸ்' புத்தகத்தில் இதுவும் சாதனைகளில் ஒன்றாகக் குறிக்கப்பட்டு உள்ளது.

ஆதாரம்: ஹிந்து

அனுப்பியவர்: கே. ராபின்சன்.



பின்னர் விக்கியண்ணன் சேர நாடு செல்வதையும் இவள் ஏக்கத்துடன் விடை கொடுத்து அனுப்புவதையும் சேர நாட்டில் யானைகளைப் பழக்க அவன் பயிற்சி பெறுவதையும் ஏராளமான யானைகளுடன் திரும்பி வருவதையும் இவன் மாளிகையின் மேன் மாடத்துக்குள் அவன் தாவிக் குதிப்பதையும் காவலர்களிடையே சிக்குவதையும் அறங்கூர் அவையில் வழக்கு நடப்பதையும் பல்வேறு சித்திரங்கள் வரலாறு ஆக்கின.

''கடைசியாக அவனைச் சிறைக்குப்பின்னே வைத்தும் ஓவியம் தீட்டி விட்டாய்! உன் வாழ்க்கைச் சரித்திரமே இந்த ஓவியங்களில் அடங்கி விட்டிருப்பதைப் பார்க்கிறேன்!'' என்றான் ஆதித்தன்.

அலையாக விம்மித் தணிந்தாள் வல்லி. ''பிரபோ! இந்த ஓவியங்கள் கூறும் கதையின் முடிவு என்னவாக இருக்கப் போகிறது என்பதை எண்ணும்போது எனக்குக் கவலை அதிகரிக்கிறது. தாங்கள் எந்த நோக்கத்தில் விக்கியண்ணனை யானைகளுடன் பழகவும் யானைகளைப் பழக்கவும் தெரிந்து கொண்டு வருமாறு சேர நாட்டுக்கு அனுப்பினீர்களோ நான் அறியேன். எதுவானாலும் விக்கியண்ணன் சிறைப்பட்டதன் மூலம் உங்கள் திட்டத்துக்கு இடையூறு ஏற்பட்டிருக்கும். அதற்கு அடிப்படையில் நான்தானே காரணம் என்பதை எண்ணும்போது என் மீதே எனக்கு வெறுப்பு கொந்தளித்து உடலைச் சுட்டெரிக்கிறது!''

அவள் தோள்களைப் பற்றி நடுங்கிய கொடி உடலுக்குத் தைரியமூட்டினான் ஆதித்தன். ''வல்லி! உன் கதையை ஓவியங்களிலே பார்த்தேன். என் கதையைச் சொல்கிறேன் கேட்கிறாயா?''

''பிரபோ! தங்கள் வாழ்க்கை திறந்த ஏடு. அதன் நிகழ்ச்சிகள் எல்லாமே தங்கள் வீரத்தையும் செங்கோன்மையையும் கருணையையும் கலை உள்ளத்தையும் செப்புவன. அனைத்துமே நாடறிந்த சம்பவங்கள். நான் புதிதாகக் கேட்டறிய என்ன இருக்கிறது?''

''நாட்டு மக்கள் மேலெழுந்தவாரியாகத் தான் எதையும் பார்க்கிறார்கள். அதன் பின்னணியில் உள்ள உணர்ச்சி மோதல்கள் அவர்களுக்கு எப்படித் தெரியும்?''

''பிரபோ! அத்தகைய அந்தரங்கங்களையா என்னுடன் பகிர்ந்து கொள்ளப் போகிறீர்கள்?''

''ஏன் பயமாயிருக்கிறதா?''

''பாதுகாப்புத் தரத் தாங்கள் அருகிலிருக்கும்போது எனக்குப் பயமென்ன சுவாமி! மன்னரின் அந்தரங்கங்களைக் கூடப் பகிர்ந்து கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கிறதே என்ற வியப்பும் பெருமிதமும்தான்.''

''அப்படியானால் கேள் வல்லி!'' என்று கூறிய ஆதித்தன் இதற்குள் அவள் பின் தொடர ஓவியக் கூடத்திலிருந்து வரவேற்புக் கூடத்துக்குத் திரும்பியிருந்தான். மறுபடி அவன் மயிலாசனத்தில் அமர அவள் தரையில் உட்கார்ந்து மடித்த முழங்கால்களைக் கரங்களால் சுற்றி வளைத்துக்கொண்டு கதை கேட்கும் ஆர்வத்துடன் முகத்தை உயர்த்தினாள்.

* * *

இரவு பகல் புரிய வராத மையிருட்டில் காலை மாலை போன்ற எதுவும் தெரியாத நிலையில் இருந்தான் விக்கியண்ணன். என்றாலும் பாதாளச் சிறையிலிருந்து ஒவ்வொரு நாளும் ஒரு நாழிகை நேரம் வெளியே வந்து காலைக் கடன்களை முடித்துத் திரும்ப அனுமதிக்கப்பட்டானாதலால் ஒன்று, இரண்டு, மூன்று என நாட்களைக் கணக்கிட்டு வந்தான். இன்னும் சில தினங்களில் இந்தக் கணக்கும் மறந்து போகும், பித்துப்பிடித்து விடும் என்று அவனுக்குத் தெரிந்தே இருந்தது. எதையும் பார்க்காமல், பேசாமல், கேட்காமல் காரிருளில் கிடந்துழல்வதெனில் புத்தி பேதலிக்காமல் என்ன செய்யும்? மாலையில் கேழ்வரகுக் கூழ் ஒரு சிறுபானையில் நிரப்பிக் கயிற்றைக் கட்டி இறக்கினார்கள். அப்போது ஒரு வெளிச்சக் கீற்று உயரே தெரியும். அதைப் பார்க்கக் கண் கூசும். காலையிலே மேலே ஏறி வர ஒரு நூலேணியை இறக்கினார்கள். அப்போது கழிவுப் பொருள் அடங்கிய சட்டியையும் கூழ் வந்திறங்கிய மண்பாண்டத்தையும் சுமந்து கொண்டு உயரே வர வேண்டும். ஒரு நாழிகைக்குள் பாதாளச் சிறைக்குத் திரும்புமாறு விரட்டினார்கள் காவலர்கள்.



ஆபீசுக்கு மகள் காவல்;
மகளுக்கு அப்பா காவல்!

திருவனந்தபுரம் விகாஸ் பவனில் உள்ள விவசாய இலாகாவில் இரவுக் காவலராக சைலட் என்ற இளம்பெண் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் திருமணம் ஆகாதவர். தந்தை பெயர் ஜோசப். வேலை இல்லாமல் சும்மா இருந்த கஷ்டம் சைலட்டின் மனத்தை அலட்டிக் கொண்டே இருந்தது. இந்த நிலையில் 14 ஆண்டுகள் காத்திருந்து கிடைத்த வேலையை விட மனமில்லை!

ஆனால் திருமணமாகாத மகளை இரவு வேலைக்கு அனுப்பிவிட்டு ஒரு தந்தையால் நிம்மதியாக உறங்க முடியுமா என்ன? எனவே தினமும் மகளுடன் தந்தையும் ஆபீசுக்கு வந்துவிடுகிறார்! —எஸ். எஸ். மணி.

செய்தி வெடிகள்



★ ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், கேட்டால் போதும், டெலிபோன் தரப்படும். —வி. என். காட்கில்

● அது கிடக்கட்டும். இப்போது எத்தனை முறை டயல் செய்தாலும் (சொன்னதைக்) கேட்காத டெலிபோன்களைக் கேட்கச் சொல்லுங்கள் போதும்!

★ பாராளுமன்றத்தில் தூங்கலாம், ஆனால் குறட்டை விடக் கூடாது.
—சபாநாயகர் பலராம் ஜாக்கர்.

● இது பழைய தீர்ப்பு. ''குறட்டை, ஒரே ஸ்தாயியில் இருக்க வேண்டும்; ராகமாலிகையாகவோ, தாள வாத்தியக் கச்சேரியாகவோ அது அமையக்கூடாது'' என்று தடை விதிக்கலாம்!

★ சோவியத்தில், ஒரு நிமிஷத்தில் 45 புத்தகங்களைத் தானே அச்சிட்டு வெளியே தள்ளும் இயந்திரம் இருக்கிறது. —ஒரு தகவல்.

● இந்த இயந்திரம், தானே நாவல், கதைகளையும் எழுதிக் கொள்ளுமா என்று கேட்கிறார் ராயல்டி தர 'மூக்கால் அழும்' ஒரு பிரசுரகர்த்தர்.

★ ஓட்டல்களை ஏ, பி, ஸி என்று பிரித்துத் தின்பண்டங்களின் விலையைக் குறைத்துள்ளது அரசு. —சென்னைச் செய்தி.

● நமக்குத் தெரிந்தவரை 'நாம் சாப்பிடும் ஓட்டல்' 'நம்மையே சாப்பிடும் ஓட்டல்' என்ற இரண்டு தான் இருக்கின்றன!

★ கல்வி, கலை, கலாசார, சமய வளர்ச்சிக்குப் பொது மக்கள் நன்கொடை வழங்க வேண்டும். —சி.சுப்பிரமணியம்.

● உணவு, உடை, வாடகை, பஸ்-ரயில் டிக்கெட்டுகள் விலையேற்றத்தால் திணறும் மக்களுக்கு யாராவது நன்கொடை வழங்கினால் நலம். —மகரம்

இரண்டு மூன்று தினங்கள் சென்றதும் அவன் தன் கால் மீது ஏதோ ஊர்வதை உணர்ந்தான்! எலிகள்! அஞ்சா நெஞ்சினை உடைய அவனுக்கே உதறலெடுத்தது. முதல் சில நாட்கள் அடங்கியிருந்த அவை இப்போது துணிவு பெற்று மேய ஆரம்பித்து விட்டன போலும்! தூங்கினால் கடிக்கும். நினைக்கவே பழகினும் பின்னர் குதறிவிடும்! அந்தக் கணத்திலிருந்து விக்கிரமனுக்குத் தூக்கம் பறிபோயிற்று. பைத்தியம் பிடித்து விடாதிருக்க அவன் உரக்கப் பாடுவான். அடிக்கடி பழைய நினைவுகளில் ஆழ்ந்தான். திருப்புறம்பயம் சோழப் பணிகள் நடந்த கால கட்டத்தில் அபிமான வல்லியுடன் தான் ஏரிக் கரையிலும் ஆற்றங்கரையிலும் காட்டிலும், மேட்டிலும் வலம் வந்து சித்திரான்னம் உண்டு அந்தச் சித்திரப் பாவையையும் ரசித்த நாட்களை எண்ணினான். சேர நாட்டுப் பயணத்தின் போது நடந்தவற்றை ஞாபகப்படுத்திக் கொண்டான். பிறகு இதே சிறைக்கூடத்தில் வேறு ஒரு வசதி மிக்க பகுதியில் தான் ஒருநாள் இரவு சிறை வைக்கப்பட்டிருந்ததையும் மறுநாள் காலை ஆதித்தனே நேரில் வந்து தன்னை ஆலிங்கனம் செய்து உண்டதையும் பக்கலில் அமர்த்திக் கொண்டு காலை உணவைப் பகிர்ந்து கொண்டதையும் நினைவு கூர்ந்தான். அப்படி இழைந்த ஆதித்தன் அடுத்த ஒரு சாமத்தில் எப்படி மாறிப் போனான்! ''நண்பா, நண்பா!'' என்று அன்பு ததும்ப அழைத்த அந்த வாய் குற்றமற்ற என்னைக் 'கொலைகாரன்' என்று சொல்லிப் பத்தாண்டுப் பாதாளச் சிறைவாசம் விதித்தது எங்ஙனம்! 'புரிகிறது ஆதித்தா! ஊக்கல் உன்னிடம் பேசிக் கொண்டதெல்லாம் மெய்தான் என்பது இப்போது எனக்கும் புரிகிறது! அபிமான வல்லி போன்ற பேரழகியை நான் என் காதலியாகப் பெற்றதில் உனக்குப் பொறாமை! முதலில் எங்கள் திருமணத்தைத் தாமதித்து, பிறகு சேர நாட்டுக்கும் கடைசியாகச் சிறைவாசத்துக்கும் என்னை அனுப்பி விட்டு அபிமானவல்லியை அடைந்து ஆனந்தமாக...... சீச்சீ! ஆனால் அபிமான வல்லி இதற்கு இணங்குவாளா? ஏன் மாட்டாள்? முதலில் சில நாட்கள் எனக்காக ஏங்கி ஏங்கி உருகுவாள். ஆனால் நாளடைவில் நான் திரும்பி வரப் போவதே இல்லை என்பது உறுதியானதும் அரண்மனை வாழ்வும் அரச போகமும் மனத்தை மயக்கவே செய்யும். அதையும் விட அரசின் பிரியநாயகி என்ற முறையில் அவளுக்குக் கிடைக்கக் கூடிய அதிகார பலம்... அது எவ்வளவுதான் திடசித்தமுடையவளாக இருந்தாலும் அவளையும் சாய்க்கவே செய்யும்!'

''ஆதித்தா!'' என்று கறுவினான் விக்கிரமன். ''என்றேனும் ஒருநாள் நான் விடுதலை பெற்று வெளியே வரும்போது...'' பற்களை நறநறவென்று கடித்தான்.

தலைக்கு மேலே உயரத்தில் ஓர் ஒளிக் கீற்று தெரிந்தது. அது நம்பிக்கை மின்னலாக அவன் கண்கள் வழியே இதயத்தில் பாய்ந்தது.

(தொடரும்)



பொருந்திடத் தாரீர் பிரிட்டானியா மாரி!

காப்பியோடு "துணை சேர: பிரிட்டானியா மாரி. கலகலப்பூட்டும் பானத்தோடு கரகரப்பான பிஸ்கட். விருந்தினர்களை உபசரிக்க வேறென்ன வேண்டும்! காப்பி, தேநீர் பருகும் வாய்க்கு, கொரித்திட லேசான சிற்றுண்டி. கட்டாயம் கைவசம் வைத்திருப்பீர் பிரிட்டானியா மாரி.



பிரிட்டானியா

மாரி

பிஸ்கட்

காப்பி நேரக் கரகர-தின்பண்டம்

LINTAS BIN/MRE 7 2013 TM

18

“டாக்டர் தியேட்டர்லேந்து வந்தாச்சா சாந்தி.”

எழுதிக் கொண்டிருந்தவள் நிமிர்ந்தாள். சம்பந்தம்.

“இல்லே ஸார்...”

“வர நாழியாகுமா?”—

“இன்னிக்கு ரெண்டு ஆபரேஷன்தான். பத்தரைக்குள்ள வந்திடுவார்...”

‘ஹும்’ பெருமூச்சொன்றை வெளியேற்றியபடி சம்பந்தம் நாற்காலியில் உட்கார்ந்தார்.

“நோயாளிங்க ஒருத்தரையும் காணுமே! அப்பாயிண்ட்மெண்ட்ஸ் கொடுக்கலியா?”—

“இன்னும் கொஞ்ச நாளைக்கு வேலை அதிகமா வேணாம்னு டாக்டர் நினைக்கறதால, அவசியமா செய்ய வேண்டிய ஆபரேஷன் கேஸ்கள் மட்டும் தான்; வழக்கமான கன்ஸல்டேஷனை இன்னும் ஆரம்பிக்கலை...”

சம்பந்தம் குரலைத் தழைத்துக் கொண்டார்.

“டாக்டர் எப்படி இருக்கார் சாந்தி? கொஞ்சமாவது தேறியிருக்காரா, இல்லியா? அம்மா இல்லாம நாமே தவிக்கறோம், பாவம். அவரை நிமிர்ந்து பார்க்கவே கஷ்டமா இருக்கு...”

சாந்தி பதில் கூறாமல் தலை குனிந்து உதட்டைக் கடித்தாள்.

“முக்கியமா நான் எதுக்கு வந்தேன்னு, பார்மஸிலே சில மருந்துகளோட ஸ்டாக் குறைஞ்சிடுச்சு... இரண்டு நாள் முன்னால டாக்டர் முகுந்தன் கிட்ட சொன்னேன். ‘இப்ப பெரியவரைத் தொந்தரவு பண்ணாதீங்க, இருக்கிறதை வைச்சி சமாளிச்சுக்கங்க... ஒரு வாரம் போகட்டும். அம்மாவ மறந்து பெரியவர் தேறிப் பழைய ரொமனுக்கு வரட்டும், அப்புறமா எதையும் பேசிக்கலாம்னு சொன்னார்.”

“பார்மஸிலே மருந்து ஸ்டாக் ஒழுங்கா இருக்கணும், முக்கியமான எந்த மருந்தும் இல்லேன்னு சொல்லக் கூடாதுங்கறதுல மேடம் கண்டிப்பா இருப்பாங்களே, ஸார்!”

“அதனால தான் இப்ப டாக்டர்கிட்டே பேச வந்திருக்கேன். அம்மாவுக்குப் பிடிக்காததைப் பண்ணிடக் கூடாதுன்னு கவலையா இருக்கு. டாக்டர் கிட்ட பேசவும் தயக்கமா இருக்கு...”

“....”

“கடைல யாரும் பொறுப்பா இல்லே.... பையனை விட்டுட்டு வந்திருக்கேன். டாக்டர் வர நாழியாகும்னு, நான் அப்புறமா பார்த்துக்க வேண்டியதுதான்...”

“என்னென்ன மருந்துகள் வேணும்னு லிஸ்ட் கொடுக்க முடியுமா ஸார்?”—

“எழுதியே கொண்டு வந்திருக்கேன்.”

“அதை என்கிட்ட கொடுத்திட்டுப் போங்க; டாக்டர் ஃப்ரீயா இருந்தாருன்னு, விஷயத்தைச் சொல்லி என்ன செய்யறதுன்னு கேட்கறேன்.”

“ரொம்ப தாங்க்ஸ்ம்மா...நான் வரேன். இரண்டு மணிக்கு மேல பார்க்கறேன்.”

அவர் நகர்ந்ததும், மேஜைமேல் வைத்து விட்டுச் சென்ற காகிதத்தை எடுத்து சாந்தி பார்வையிட்டாள்.

அட்ரினலின்.

ஸ்ட்ரெப்டோமைஸின்.

ஆம்பிஸிலின்...

ஆஸ்ப்ரின்

டெகோட்ரான்...

பி—காம்ப்ளெக்ஸ்.

பட்டியல் நீண்டது.

கிட்டத்தட்ட ஒன்னரை மாசங்களுக்கு முன் இங்கே மேஜை எதிரில் அமர்ந்து கெமி கம்பெனிகளுக்கு போன் செய்து தேவையான மருந்துகளை ஆர்டர் செய்தது நினைவுக்கு வந்தது.

எத்தனை உன்னதமான மனுஷி அவர்! என்ன கெட்டிக்காரத்தனம். என்ன சுறுசுறுப்பு!

எல்லாவற்றையும்விட, சதா கண்களில் குடியிருக்கும் அந்த, உன்னைப் பற்றின — அக்கறை — எனக்கு உண்டு — என்கிற பாவம், உதடுகளில் நிமிஷமாய் விரியக் காத்திருக்கும் புன்னகை.

பேனாவை வைத்துவிட்டு, சாந்தி எழுந்து ஜன்னலிடம் சென்று நின்றாள்.

தோட்டக்கார கந்தப்பன் ஸ்வாரஸ்யமாக கேட்டருகில் ஆறுமுகத்துடன் பேசிக் கொண்டு நிற்பது தெரிந்தது.

நடையை ஒட்டியிருந்த புல்வெளியில் இங்கும் அங்குமாய்க் காய்ந்த இலைகள்.


மேடம் இருந்தால் இப்படி வேலையைக் கவனிக்காமல் அரட்டை அடித்துக் கொண்டு நிற்பானா?

லேசான கோபத்துடன் அவள் திரும்பிய போது, ரங்கன் அறை வாசலில் நின்று தயங்குவது புரிந்தது.

சாதாரணமாக வீட்டு ஆட்கள் நர்ஸிங் ஹோமுக்கு அவசர வேலை இல்லாவிட்டால் வரமாட்டார்கள்.

கோயங்காவுக்குச் சிகரெட் பிடிக்கும் பழக்கம் இடையாது. ஆனால் நம்மவர்கள் உள்நாட்டு சிகரெட்டுக்களை விட அயல் நாட்டுச் சிகரெட்டுக்களையே அதிகம் விரும்பிப் பிடிப்பதால் புகழ் பெற்ற Rothmans, Dunhill ஆகிய சிகரெட்டுக்களை இந்தியாவில் தயாரிக்கப் போகிறார். இந்தியாவில் மாதந் தோறும் சுமார் 20,00,00,000 அயல் நாட்டுக் கடத்தல் சிகரெட்டுகள் விற்பனையாகின்றனவாம்! —காயத்ரி





மாலையில் பூக்கும் மலர்கள்
சிவசங்கரி

''என்ன ரங்கா?''—

''ஸார் இருக்காராம்மா?''—

''ம்ஹூம் — தியேட்டர்லேந்து இன்னும் வரலே...''

''நாழியாகுமா?''—

சாந்தி பார்வையை உயர்த்திச் சுவர்க் கடியாரத்தை ஏறிட்டாள்.

பத்து இருபது.

பத்தரைக்கு வெளியில் வந்தால், ரவுண்ட்ஸ் முடித்துவிட்டு அறைக்கு வர ஒரு அரை மணி.

''பதினொண்ணுக்குள்ள வந்திடுவார்.. ஏதாவது சொல்லணுமா?''—

''முருகன்னு ஒருத்தர் வந்திருக்கார். ஒரு கால் இல்லாதவரு... போன இரண்டாம் மாசம் அம்மாவை பார்த்தாராம். 'பெட்டிக் கடை வைக்க நல்லதா இடம் பாருங்க, நான் பண உதவிபண்ணறேன்'னு சொல்லி இருந்தாங்களாம். இடத்தைபேசிட்டு வந்தவருக்கு, இன்னிக்குத்தான் அம்மா தவறிட்டது தெரியும் போல... இடிஞ்சி போய்த் தாங்க மாட்டாம அழுதிட்டிருக்காரு.. என்ன பண்ணறதுன்னு புரியலே...... அதான்...''

சாந்தி கண்களை நிடுங்கிக் கொண்டு அரை நிமிஷம் யோசனை பண்ணிவிட்டுப் பேசினுள்.

''நீ போய் அவரை இங்க வரச்சொல்லு... நான் பேசிக்கறேன்...''

சற்றுப் பொறுத்து கட்டைகளை ஊன்றிய படி அந்த முருகன் உள்ளே நுழைந்தான்.

சின்னவன்தான்.

இருபது, இருபத்தி இரண்டு வயசு இருந்தால் அதிகம்.

நிலைகுலைந்து போயிருந்தான்.

ஒரு நிஜுசாய் வாழ்க்கையைச் சரிபண்ணிக் கொண்டு விடலாம் என்ற எதிர்பார்ப்பில் வந்தவனின் நம்பிக்கை சிதறிப் போயிருப்பதைத் தெளிவாக உணர முடிந்தது.

''உட்காருங்க...''

''இருக்கட்டுங்க... நான் ரொம்ப பாவம் பண்ணி இருக்கேங்க... அம்மா... அய்யோ.. அம்மா... போயிட்டாங்களா? நீங்க தவறிட்டது கூட பாவி எனக்குத் தெரியலே பாருங்...''

நெல்லை மாவட்டம் செட்டிக்குளம் என்ற ஊரில் உள்ள ஒரு கோவிலின் பெயர் 'ஒற்றைக்குடைகார மூர்த்தி சுவாமி' கோவில்!

—பி. இராமகிருஷ்ணன்



முகம் கோண அவன் அழத் துவங்க சாந்தி அந்தோணியை அழைத்து, கான்டீனிலிருந்து ஒரு காபி வாங்கி வரச் சொன்னுள்.

''இதைக் குடிச்சிட்டு கொஞ்சம் ஆசுவாசப் படுத்திக்கங்க முருகன். இது ஆஸ்பத்திரி. இந்த மாதிரி இங்க அழுதா மத்தவங்க என்னமோ, ஏதோன்னு நினைச்சிப்பாங்க. டாக்டர் வர்ற நேரம். பொறுமையா இருங்க...''

அடுத்து வந்த நிமிஷங்களில். முருகனின் பின்னணியை, தௌரி அவனுக்குத் தந்திருந்த வாக்குறுதியை சாந்தி விளக்கமாகத் தெரிந்து கொண்டாள்.

பேசிக் கொண்டிருக்கையிலேயே பாலாஜி வந்துவிட்டார்.

'குட்மார்னிங் டாக்டர்' எழுந்து நின்று மென்மையாய் இவள் கூறியதைச் சின்ன தலை அசைப்புடன் ஏற்று, தன் அறைக்குச் செல்ல, கொஞ்சம் தாமதித்து, சாந்தியும் உள்ளே போனுள்.

பாலாஜி களைத்திருந்தார்.

முகத்தில் சோர்வு.

தூக்கம் இல்லாமல் இரவைக் கழித்ததற்குச் சாட்சியாய்க் கண்களடியில் உப்பல்.

வெள்ளை சபாரி ஸூட்டில் இங்கும் அங்குமாய்க் கறுப்புப் பொட்டுகள்.

''அபாய்ண்ட்மெண்ட் எதுவும் கொடுக்க வேணும்னு சொல்லி இருந்தேனே சாந்தி..''

''கொடுக்கலே டாக்டர்; மத்தியானம் நாலுலேந்து அஞ்சு வரைக்கும் ரொம்ப அவசரக் கேஸ் மூணு பேரை மட்டும் வரச் சொல்லி இருக்கேன்.''

''ரிஸப்ஷன்ல இருக்கறவர் யாரு?''—

''அவர் பேஷண்ட் இல்லே டாக்டர்'' மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் வீட்டிலிருந்து வந்திருந்த டீ அடங்கிய பிளாஸ்கை எடுத்து, ஸாஸரைத் துடைத்து, கொதிக்கும் டீயை ஊற்றி, அவர் முன் வைத்தாள்.

அவர் குடித்து முடிக்கும் வரை மௌனமாய் நின்றவள் மெதுவாகப் பேசினுள்.

''டாக்டர் பத்ரி போன் பண்ணினுர்; உங்க கிட்ட அவசரமாப் பேசணுமாம். தபால் முக்கியமா ஒண்ணும் இல்லே... டெல்லி செமினருக்கு நீங்க வர முடியாதது குறிச்சு வருத்தப்பட்டு லெட்டர் போட்டிருக்காங்க. ஷிகாகோலேந்து டாக்டர் ரெட்டி கடிதம் போட்டிருக்கார்... மிஸ்டர் மனோகரன் பெண்ணுக்கு இன்னிக்கு சேலத்துல கல்யாணம், உங்க பேர்ல வாழ்த்துத் தந்தி அனுப்பிட்டேன். பாலபவன் நிர்வாகி உங்களைச் சந்திக்க முடியுமான்னு கேட்டு ஆள் அனுப்பிச்சார்...''

''ம்''—

சாந்தி தயங்கினுள். ஒரு தரம் டாக்டரை நிமிர்ந்து பார்த்து, பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

''மேடம் தவறினதுக்கு வருத்தம் தெரிவிச்சு எழுதியிருந்தவங்களுக்கெல்லாம் நன்றி கடிதம் டைப் பண்ணி வைச்சிருக்கேன். கையெழுத்து போட்டுட்டீங்கன்னு, இன்னி போஸ்ட்டுலே அனுப்பிடலாம்...''

பாலாஜி பதில் கூறுமல் கண்களை மூடிக் கொண்டு இருக்கையில் சாய்ந்தார்.

தாடைகள் இறுகின.



கள்ள ஸ்டாம்புகள்

கள்ள நோட்டுகள் அச்சடிப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். கள்ள ஸ்டாம்புகள் அச்சடிப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அண்மையில் டெல்லியில் சி.பி.ஐ. நடத்திய சோதனையில் ஆயிரக் கணக்கான கள்ள ஸ்டாம்புகள் கைப்பற்றப் பட்டன. அவையனைத்தும் கோர்ட் ஃபீ ஸ்டாம்புகள். அவற்றை அச்சடித்து விநியோகிக்கக் காரணமாக இருந்தவர், சன்னு தேவி என்ற ஒரு பெண்.

—கீதா பஞ்சு

கைவிரல்கள் நாற்காலியின் பிடியை அழுந்தப் பற்றின.

''ஒரு மணி நேரம் கழிச்சி லெட்டர்ஸைக் கொண்டு வா...''

''டாக்டர் பத்ரிக்குக் கனெக்‌ஷன் கொடுக்கட்டுமா?''—

''நாட் நௌ... ப்ளீஸ்...''

திரும்ப நினைத்தவள், நின்றாள்.

''தொந்தரவு பண்ணறதுக்கு மன்னிக்கணும் டாக்டர். முருகன்னு ஒருத்தர் வந்திருக்கார். ஒரு கால் இல்லாதவர். இரண்டு மாசம் முன்னால இவரை மேடம் வரச்சொல்லி, கஷ்டத்தைத் தெரிஞ்சிகிட்டு பெட்டிக் கடை வைக்க உதவி பண்ணறேன்னு வாக்கு கொடுத்தாங்களாம்...''

மூடியிருந்த கண்களை பாலாஜி சற்றே திறந்து பார்க்க, சாந்தி தொடர்ந்தாள்.

''இடத்தைப் பேசிட்டாராம். உடனடியா அட்வான்ஸ் கொடுக்கலேன்னா, கைவிட்டுப் போயிடுமாம். நம்பிக்கையோட வந்தார். மேடம் தவறிட்டதைக் கேட்டு ஆடிப் போயிட்டார்.''

''கௌரி உதவி பண்ணறேன்னு சொல்லி இருந்தாளாமா?''—

''எஸ், டாக்டர்.''

''உள்ளே வரச் சொல்லு...''

கால் மணி போல முருகனிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு, அவனுடைய தேவையான ஆயிரத்தைந்நூறு ரூபாயை கையில் கொடுத்து அனுப்பின போது மனசின் பாரம் கடுகத்தனை குறைந்தமாதிரி தோன்ற, சாந்தியிடம் இன்னொரு கப் டீ கொண்டு வரச் சொன்னார்.

''பார்மஸிஸ்ட் சம்பந்தம் உங்களைப் பாக்கறதுக்காக வந்திருந்தார் டாக்டர்.''

''ம்?''—

''சில மருந்து ஸ்டாக் குறைஞ்சிடுச்சாம்; ஆர்டர் பண்ண முடியுமான்னு கேட்க வந்திருந்தார்...''

புருவங்கள் சுருங்க இது என்ன தொந்தரவு என்கிற மாதிரி பாலாஜி பார்க்க, அவசரமாய் சாந்தி பேசினாள்.

''பார்மஸிலே எந்த மருந்தும் இல்லேன்னு சொல்லக் கூடாதுன்றதுல மேடம் கவனமா இருப்பாங்க; அதனால லிஸ்டை கொடுங்க, டாக்டர்கிட்ட கேட்டுட்டு நான் ஆர்டர் பண்ணிடறேன்னு சொன்னேன் டாக்டர்.''

கௌரியின் பழக்கம் என்ன என்பதைக் கருத்தில் கொண்டு கவனத்துடன் சாந்தி பேசியது எதிர்பாராத சந்தோஷத்தைத் தர பாலாஜி தலை அசைத்து ஆமோதித்தார்.

''எப்படி ஆர்டர் பண்ணறதுன்னு உனக்குத் தெரியுமா?''—

''தெரியும் டாக்டர். மேடம் வழக்கமா என் டேபிள்லேந்து தான் கம்பெனிங்களோட பேசுவாங்க...''

ஹிஸ்டெரக்டமி செய்து கொண்டு நர்ஸிங் ஹோமில் படுத்திருந்த நாட்களில் கௌரிக்கு சாந்தியுடன் பழக்கம் அதிகரித்தது பாலாஜிக்குத் தெரிந்த சமாசாரம் தான்.

—மத்தியானம் பூரா போர் அடிச்சுதா டார்லிங்? வரலேனு சொன்னாலும் டாக்டர் ஸ்ரீதர் கேட்க மாட்டேன்னுட்டார். ஆல் இண்டியா ரீதில நடக்கற மீட்டிங்; நீங்க வராட்டி நல்லா இருக்காதுன்னு கட்டாயப் படுத்திட்டார்.

—போகாம எப்படி பாலா? முக்கியமான கூட்டம் இல்லியா? நான் சாதாரணமாத் தானே இருக்கேன்! அக்கா வந்திருந்தாங்க.. அப்புறம் சாந்தியும் நானும் ஹிண்டு க்ராஸ்வேர்டை வைச்சிகிட்டு உட்கார்ந்திருந்ததுல பொழுது போனதே தெரியலே.

—சாந்தியா? கிராஸ்வேர்ட் புதிர் போடறாளா? நாட் பேட் ஐ ஸே...

—இந்த சாந்தி பார்த்தா சாது மாதிரி இருக்காளே தவிரவும், வாஸ்தவத்துல கெட்டிக்காரி பாலா... விஷயம் தெரிஞ்சவளா இருக்கா... சரியான வார்த்தையைச் சரியான சமயம் பார்த்துச் சமர்த்தா பேசறா. அதுக்காக அதிகப் பிரசங்கித்தனமும் இல்லே... ஐ லைக் ஹர் எ லாட்...

பாலாஜி முன்னால் சாய்ந்து உட்கார்ந்தார். சின்னதாகப் புன்னகைத்தார்.

''ரைட்... இன்னிக்கே இல்லாத மருந்துகளுக்கு ஆர்டர் கொடுத்திடு. ஆஸ் யு ஸே, கௌரிக்கு பார்மஸி அரைகுறையா இருந்தா பிடிக்காதுதான்...''

கௌரி நினைப்பு வேண்டாம், பேச்சு வேண்டாம் என்று அக்கா, இதர நபர்கள் தடுக்கையில் இந்த சாந்தி வலிய 'மேடம் இப்படிச் சொல்வாங்க, மேடம் இதை விரும்புவாங்க'' என்று மனைவியை சிரத்தையுடன் ஞாபகப்படுத்திக் கொண்டு பேசுவது அலாதி திருப்தியைத் தர ''லெட்டர்ஸ் எல்லாத்தையும் எடுத்துகிட்டு வா... கையெழுத்து போட்டுடறேன்; அப்புறம், டாக்டர் பத்ரிக்குக் கனெக்‌ஷன் கொடு—'' என்றவரின் குரலில் இதுநாள் இல்லாத சுறுசுறுப்பு கொஞ்சமாக எட்டிப் பார்க்கவே செய்தது.

(தொடரும்)




ஸ்கூல் முடித்தவுடன் நேர புட்பால் விளையாட மைதானத்திற்கு போவேன். நல்லா கை கால் ஓய்ந்து போகும் வரை விளையாடுவேன். எனக்கென்ன கவலை? வீடு திரும்பியவுடன்தான் தினம் அம்மா மறக்காமல் ஹார்லிக்ஸ் தருவாங்களே? ஹா, சத்துள்ள ஹார்லிக்ஸிற்குத்-தான் என்ன 'ஸூபர்' ருசி!
மால்டெட் பார்லி, முழு ஆடைப் பால் மற்றும் பொன்னிற கோதுமைகொண்ட ஹார்லிக்ஸ் ஒரு சுவையான, சத்தான பானம். ஊட்டச்சத்திற்கு மூலாதாரமான ஒரு லட்சிய பானமென்ற நம்பிக்கையைப்பெற்றது. எனவே, கடந்த நூறு வருடங்களாக கோடிக்கணக்கான குடும்பங்கள் உலகமெங்கும் ஹார்லிக்ஸின்மேல் நம்பிக்கை வைத்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை,
Horlicks
The Great Nourisher
புதிய காலத்திற்கேற்ப
புதிய தோற்றம்
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்



கதவைத் திறந்த நபரைக் கண்டதும், 'இவரை எங்கேயோ பாத்திருக்கேன்; எங்கே?'' 'எங்கே' என்ற விசாரணையில் இறங்கியது சம்பந்தத்தின் மனம்.

''நீங்க யாரு? உங்களுக்கு என்ன வேணும்?''

''வணக்கம் ஸார். தேரடி முருகன் கோவில் டிரஸ்டி இந்த 'லெட்டரை' எஸ். ஈ. சிவராமன் ஸார் கிட்டே கொடுத்துட்டு...'' என்று இழுத்தபடியே ஒரு 'கவரை' அவரிடம் நீட்டினான்.

''நாந்தான் சிவராமன்! இப்படிக் கொடுங்க!''

கடிதத்தைப் பிரித்த எஸ். ஈ. சிவராமனின் விழிகள் சம்பந்தத்தை எடை போட்டன.

'வெறும் பரதேசி பயதான் போலிருக்கு! இவனுக்கு 'கண்டக்ட் சர்ட்டிபிகேட்' கொடுக்கணுமாம். கேவலம் பத்து ரூபாய்க்குப் பழமாவது வாங்கிண்டு வரணும்னு தெரிய வேண்டாமா? வெறுங்கையை வீசிண்டு வந்திருக்கானே... ம்ம்... தட்டிக் கழிச்சிடலாமா...'' தயங்கிய சூப்பிரின்டென்டென்ட் என்ஜினியர் சிவராமனின் அகத் திரையில் முருகன் கோவிலில் தாம் தரிசனத்திற்குச் செல்லும் ஒவ்வொரு முறையும் தமக்கு ஒரு பெரிய மாலையைப் போட்டு, ஸ்பெஷல் தீபாராதனையும் நடத்த ஏற்பாடு செய்து, அதன் மூலம் அங்குள்ளவர்கள் மத்தியில் தமக்கு ஒரு வி. ஐ. பி. ஸ்தானத்தை ஏற்படுத்தித் தரும் காட்சி நிழலாடியது.

''சம்பந்தம்! நீ கொஞ்சம் 'வெயிட்' பண்ணு! நான் பூஜை முடிச்சுட்டு வந்து கவனிக்கிறேன். அவசரம் ஒண்ணுமில்லையே?''

''பரவாயில்லை ஸார்! நான் இப்படி உக்காந்திருக்கேன்!'' என்றான் பணிவுடன்.


ஒரு காண்டக்ட் சர்ட்டிபிகேட்டுக்குப்பத்து ரூபாய் என்ற தனது நியாயவிலை நிர்ணயம் இன்று மீறப்பட இருக்கிறதே என்று சஞ்சலப்பட்ட சிவராமனின் மனத்திலே ஒரு மின்னல்!

''சம்பந்தம்! நீ கிராமத்துப் பையனாச்சே! ரெண்டு மணி நேரம் சும்மா உட்கார்ந்திருக்கிறது கஷ்டமா இருக்குமே! ஒண்ணு செய்! தோட்டத்துக்குத் தண்ணி அடிச்சு ஊத்திடு! ஒனக்கும் பொழுது போன மாதிரி இருக்கும்.''

'போரிங் பம்பை'க் காண்பித்து விட்டு உள்ளே மறைந்தார் சிவராமன்.

அந்தப் பரந்த தோட்டத்தையும் போரிங் பம்பையும் கணித்த சம்பந்தம் வேறு வழியின்றிச் சட்டையைக் கழற்றி வைத்துவிட்டு வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு வேலையில் இறங்கினான்.

தோள்கள் வலியால் துவண்டன. வியர்வை அருவியாகப் பெருகிப் பாதங்களின் வழியே இறங்கி மண்தரையில் சங்கமம் ஆயிற்று. இன்னும் பாதித் தோட்டம் 'தண்ணீர்! தண்ணீர்!' என்று கூவலுடன் காத்திருந்தது.



''போதும்பா! அநாவசியமா ஏன் சிரமப் படறே? சாயங்காலம் நான் பாக்கிக்குத் தண்ணி ஊத்திக்கறேன். கை கால் கழுவிண்டு வா! ஸர்டிபிகேட் தரேன்.''

புன்சிரிப்புடன் நிமிர்ந்த சம்பந்தத்தின் விழிகள் ஹால் கடியாரத்தைப் பார்த்தன. மூன்று மணி நேர உழைப்பு தானம் முடிவுற்றதைக் குறித்து நிம்மதியுற்றவனாகக் குழாயை நோக்கி நடந்தான்.

''இந்தா சம்பந்தம்! பத்திரமா கொண்டு போ! எங்கிட்டேந்து 'காண்டக்ட் சர்ட்டிபிகேட்' வாங்கிண்டு போனவங்க ஒருத்தர்கூட பாக்கியில்லாம, வேலேலே சேர்ந்து மொத மாசச் சம்பளம் வாங்கின கையோட என்னைத்தான் வந்து பாப்பாங்க!''

''ரொம்ப நன்றிங்க ஸார்! வேலை கிடைச்சதும் அவசியம் வரேன் ஸார்'' என்ற உறுதிமொழியை அளித்துவிட்டு வெளியே இறங்கினான்.

களைத்த அவனுடைய கால்கள் 'தார்' வீதியில் மெல்ல நடைபோட உள்ளம் கடந்த கால நினைவு வீதியில் உலா வந்தது.

அவனுடைய பிள்ளைப் பிராயத்து நினைவுகளெல்லாம் அந்த விஸ்வநாதர் கோவிலையே சுற்றிச் சுழன்றது. ஒரு விதத்தில் அவனுக்கும் அந்த விஸ்வநாதருக்கும் ஒற்றுமை இருந்தது. விஸ்வநாதருக்கு அம்மா அப்பா கிடையாது. அவனுக்கோ, அம்மா, அப்பா யாரென்று தெரியாது.

வருடத்திற்கு இரண்டு முறை பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாக்களில், தேர்க்காலில் அமர்ந்தும், பல்லக்கின் பக்கத்தில்நடந்தபடியும்திவட்டிப் பிடித்ததையும், திவட்டி அணையாமல் கவனிக்கத் தவறியதற்காக 'கார்வார்' சாட்டையால் தன்னை விளாசியதையும்,சோத்துப் பட்டைக்காக மடப்பள்ளி வாசலில் மணிக்கணக்காய்க் காத்துக் கிடந்ததையும், வெயிற் காலங்களில் கோவில் பிராகாரத்திலும், குளிர் காலங்களில் ரிஷப வாகனத்தின் அடியிலும்

முடங்கிக் கிடந்ததையும் அவனால் மறக்க முடிந்தாலும், தாடி ஓதுவாரை அவனால் மறக்க முடியாது.

தாடி ஓதுவார் அவனுடைய வாழ்க்கையிலே ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்டார்.

'சின்னத் திவட்டி' என்ற பெயராலேயே பழகிப் போய்விட்ட அவன் சம்பந்தமாளுன். எட்டாவது வகுப்பு வரையில் படித்தான். தாடி ஓதுவார் அவனை மேலே படிக்கும்படி வற்புறுத்தியும், 'சரித்திரமும், சயன்ஸும்' அவனிடம் சண்டித்தனம் செய்ததன் விளைவாக, எட்டுப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஓதுவாரின் நிழலானான்.

வஜ்ரம் பாய்ந்த உடல் கொண்ட ஓதுவாரும் ஒருசமயம் சேர்ந்தாற்போல ஒரு மாதம் படுக்கையில் கிடக்க நேரிட்டது. சம்பந்தம் அன்புடன் தமக்குச் செய்த பணிவிடைகளைக் கண்டு அவருடைய உள்ளம் நெகிழ்ந்தது. சென்னையிலிருந்து ஓதுவாரைக் காண வந்திருந்த அவருடைய 'லாயர்' நண்பர் ஒருவருடன் தனிமையில் சம்பந்தத்தின் எதிர்காலம் பற்றிப் பேசினர். சம்பந்தத்தின் கையெழுத்தை ஒரு வெற்றுத் தாளில் வாங்கிக் கொண்டு சென்றார் 'லாயர்.'

ஒரு பெரிய வங்கியிலிருந்து அட்டெண்டர் வேலைக்கான அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர். மாதம் அறுநூறு ரூபாய் சம்பளம். பிறந்த தேதிக்கான சான்றிதழ், பள்ளிப் படிப்பிற்கான சான்றிதழ், மற்றும் கெஜடெட் அதிகாரி, எம். எல். ஏ. அல்லது எம். பி. இவர்களிடமிருந்து நன்னடத்தைக்கான ஸர்டிபிகேட்டுடன் இன்னும் ஒரு வாரத்தில் வேலைக்குச் சேர வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

சான்றிதழ்களைப் பெறுவதற்காகஅலைந்து கொண்டிருந்த சம்பந்தம் கோமதி ஸ்வீட் ஸ்டால் என்ற பலகாரக் கடையின் வாசலுக்கு எதிரே பஸ் ஸ்டாண்டில்நின்றான். காத்திருந்த நேரத்தைப் பலகாரக் கடையை ரசிப்பதில் செலவழிக்கலானான்.

அந்தச் சம்பவம் அப்போது தான் நடந்தது.

"எனக்கு கால் கிலோ முந்திரி கேக்" இருபது ரூபாய் நோட்டை நீட்டியபடியே ஒருவரின் குரல்.

"எனக்கும் ஒரு கால் கிலோ" இந்தக் குரல் கீச்கீச்சென்று ஒலிக்கவே சம்பந்தத்தின் தனிக்கவனம் இவர்பால் சென்றது.

முதலில் கேட்டவருக்குப்பொட்டலத்தைத் தந்து விட்டு அவரிடமிருந்து இருபது ரூபாய் நோட்டைப் பெற்றுக் கொண்ட கடைக்காரர் மீதியாக ஒரு பத்து ரூபாயும் ஒரு இரண்டு ரூபாய் தாளையும் நீட்டினர். அதே நேரத்தில் 'எனக்கும் ஒரு கால் கிலோ' என்றபடி பத்து ரூபாய் நோட்டொன்றை 'கீச்-கீச்' நீட்டவே, அவரிடமும் பொட்டலத்தையும், பாக்கியாக, ஒரு பத்து ரூபாய் நோட்டையும், ஒரு ரெண்டு ரூபாய் நோட்டையும் கடைக்காரர் தரவே சம்பந்தம் திடுக்கிட்டான். 'கீச்-கீச்' பாக்கிச் சில்லறையுடன் அவர் அங்கிருந்து 'விருட்'டென்று நகரலானார்.

அந்தக் கீச்சுக்குரல் எம்.எ.செவராமனுடையதுதான். அவர்தான்இன்றுதன்னுடைய நன்னடத்தையைப் பற்றிச் சான்றிதழ் வழங்கியிருக்கிறார் என்பதை நினைத்துக் கொண்டதும், அவனையும் அறியாமல் வாய்விட்டுச் சிரித்துவிட்டான்.

"நீங்கதான் மிஸ்டர் சம்பந்தங்களா? புரஸ்டி போன் பண்ணிச் சொன்னாரு! என்னோட பி. ஏவைப் பாருங்க. மினிஸ்டரைப் பார்க்கப் போயிட்டிருக்கேன்" அவர் 'காரில்' ஏறி மறைவதை நன்றியுடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

"சம்பந்தம் யாருங்க?"

எழுந்து நின்றான்.

"நீங்கதானே காண்டக்ட் ஸர்ட்டிபிகேட் கேஸ்."

"கேஸா!" விஷயம் மண்டையில் உறைத்ததும் தலையை அசைத்தான்.

"ரெடியாயிருக்கு! ம்ம்... பக்கத்து ஹோட்டல்லே போய் ரெண்டு செட் பாதாம் அல்வா, ரெண்டு பேப்பர் ரோஸ்ட், ரெண்டு காப்பி வாங்கிட்டு வாங்க!" சொல்லிவிட்டு பி. ஏ. உள்ளே மறைந்தார்.

பி. ஏ. வின் உத்தரவைக் கேட்டதும், பையில் இருக்கும் பணம் போதுமா என்ற கவலையுடன் நகர்ந்து, வாங்கி வந்தான்.

"எம்.எல்.ஏ. உங்களுக்காகக் கொடுத்த காண்டக்ட் சர்டிபிகேட். சம்பளம் வாங்கினதும் என்னை வந்து கண்டுக்க மறந்துடாதீங்க."

சிரக்கம்பத்துடன் நன்றி என்ற சொல்லை உதிர்த்து விட்டு நகர்ந்தான்.

எதிர்பெஞ்சில் ஒரு வயது குழந்தையுடன் கூடிய இளம் தம்பதிகள். தத்தித் தத்திக் குழந்தை சிறிது தூரம் ஓடுவதும் மறுபடியும் தாயிடம் திரும்ப ஓடி வருவதுமாக விளையாட்டில் மூழ்கியிருந்தது. பால் கழுத்தில் ஒரு மைனர்செயின்.

சிறிது இருட்ட ஆரம்பிக்கவே பூங்கா பெஞ்சிலிருந்து தம்பதிகள் எழுந்தார்கள். குழந்தை

ஒருவர்: அந்த பஸ் கண்டக்டர் மகா புத்திசாலியாக்கும்.

மற்றவர் "எப்படிச் சொல்றீங்க?


ஒருவர்: பஸ் பிளாட்பாரத்தில் ஏறி, பெட்டிக்கடையை இடிச்சிட்டு நின்னதும் உடனே இறங்கி வந்து ரூட் கழற்றிவிட்டு "சோதனை ஓட்டம்" போர்டை மாட்டி விட்டாரே.

—நம்பபாரதி.



பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ
இது க்ளாக் மற்றும் ரேடியோ இவற்றின் இணைப்பு மட்டுமேல்ல...

கூடுதல் சிறப்புகள் பல கொண்டதாகும்.





படுக்கையறைக்கு ஒரு அழகுப்பொருள்



வரவேற்பறையில் பல நிகழ்ச்சிகளை வழங்குவது

சக்திவாய்ந்த MW மற்றும் SW செட்...



சமையலறையில் ஒரு உதவிப்பொருள்



நம்பகமான உதவியாளர்



பரிசளிக்க உன்னதமான பொருள்

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ, சக்தி வாய்ந்த ஒரு MW/SW செட் மற்றும் கனகச்சிதமான க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக்கின் இணைப்பு மட்டுமேல்ல...கூடுதல் அம்சங்கள் பல கொண்டதாகும். உதாரணமாக:

- கண்ணயர்ந்து விட்டாலோ தூங்கி விட்டாலோ அதைத் தானே நிறுத்திக் கொள்ள 'செட்' செய்து விடலாம் (கேட்கும் இசையே உங்களைத் தாலாட்டி விட்டாலும் கவலை இல்லை அல்லவா?)
- இசையுடன் இணைந்த அலாரம் உங்களைக் காலையில் எழுப்புகிறது. தொட்டால் போதும்—நீங்கள் மேலும் பத்து நிமிடங்கள் தூங்கலாம்.
- நாள் முழுதும், உங்கள் அலுவல்களை நினைவூட்டிக் கொண்டிருக்கும், (குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது, லஞ்ச் அல்லது மீட்டிங் நேரம் முதலியவை)
- ரேடியோ மற்றும் அலாரத்தை முன்கூட்டி 'செட்' செய்து செய்திகளையோ உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகளையோ கேட்கலாம்.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் ரேடியோவை மேலும் மேலும் உபயோகப்படுத்தும் போது நீங்கள் ஒப்புக்கொள்வது...அது பல சிறந்த அம்சங்கள் கொண்ட ஒரு எலெக்ட்ரானிக் அதிசயம் என்பதே. அழகு மற்றும் அறிவின் இணைப்பு.

பிலிப்ஸ்

PHILIPS

யும் பச்சரிசிப் பற்களைக் காட்டியபடி கையை ஆட்டியது. அந்தக் குழந்தையின் உருவம் கண்களிலிருந்து மறையும் வரையில் அமர்ந்திருந்த சம்பந்தம் 'பார்க்' செய்வதற்காகத் திருப்பிய காரின் முன் விளக்குகளில் ஒளி வெள்ளத்தில் மின்னலிட்ட பொருளைக் கண்டதும் பரபரப்புடன் எழுந்தான்.

குழந்தையின் சங்கிலி! மார்பளவு முருகன் டாலர்.

எப்படியாவது அதை அவர்களிடம் சேர்த்து விட வேண்டும் என்ற நினைப்புடன் சங்கிலியை எடுக்க விரைந்தான்.

அந்தச் சில வினாடிகளுக்குள்....!

அந்தக் காரிலிருந்து இறங்கியவர் தமது காலில் தட்டிய அச்சங்கிலியை எடுத்துச் சில வினாடிகள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் தமது ஜிப்பாவிற்குள் போட்டுக்கொண்டு, மேலே நடக்கலானார்.

இந்த அதிர்ச்சியிலிருந்து இவன் மீள்வதற்குள், பிளாட்பாரத்தைத் தங்களது விழிகளால் பெருக்கியபடி கவலை படர்ந்த முகங்களுடன் வந்த தம்பதிகள், எதிர்ப்பட்டோரையெல்லாம் கேட்டனர்.

'சங்கிலியை ஜிப்பாப் பையில் போட்டுக் கொண்ட நபரிடம் கேட்க அவர் அனுதாபம் பொங்கும் குரலில்,

''நான் பாக்கலிங்களே அம்மா! ரெண்டு பவுனுங்களா! பவுன் விக்கற விலேலே.... எந்தப் பாவி கைலே கெடைச்சதோ! நாமதான் சாக்கிரதையா இருக்கோணும்! எதுக்கும் தேடிப் பாருங்க!'' என்றார்.

அவரை மீண்டும் கவனித்தான் சம்பந்தம்.

இவரா! இவரா இப்படிச் செய்தார்! இந்த எம். எல். ஏ. யிடமா நாம் காண்டக்ட் சர்டிஃபிகேட் பெற்றுக் கொண்டோம்?

அவனுள் ஒரு முடிவு உண்டாயிற்று.

சம்பந்தத்தைக் கண்ட ஓதுவாரின் விழிகள் வியப்பால் ஆணி அடித்தாற்போல நின்றுவிட்டன.

''என்ன சம்பந்தம்! ஏன் அதுக்குள்ளாற திரும்பிட்டே! வேலேலே சேரலையா? காண்டக்ட் சர்ட்டிபிகேட் கிடைக்கிறதிலே ஏதாவது கஷ்டமா?'' என்றுகேள்விகளை அடுக்கினார் ஓதுவார்.

''ஐயா! காண்டக்ட் ஸர்டிபிகேட் எல்லாம் கெடைச்சுடுத்துங்க! ஒரு ஸர்டிபிகேட் பெரிய கெஜடெட் ஆபீஸர், மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கற சூப்பரின்டென்டிங் என்ஜினியர் கொடுத்தாரு. இன்னொரு ஸர்டிபிகேட் ஒரு எம். எல். ஏ. கொடுத்தாரு. இதோ பாருங்க.''

அரசாங்க முத்திரைகள், கோவில் சின்னங்கள் தாங்கிய டைப் அடிக்கப்பட்ட கடிதங்கள். பார்த்த ஓதுவாரின் மனம் ஏன் சம்பந்தம் வேலையில் சேராமல் திரும்பிவிட்டான் என்ற கேள்விக்கு விடை தெரியாமல் திகைக்க, சில வினாடிகளில் அந்த ஸர்ட்டிபிகேட்டுகளை ஆத்திரத்துடன் சுக்குச் சுக்காகக் கிழித்தான் சம்பந்தம்.

சம்பந்தத்தின் செய்கையைத் தொடர்ந்து காரணங்களை அவன் வாயால் கூறக் கேட்ட ஓதுவார் சில நிமிட மௌனத்துக்குப் பிறகு ஒரு சோகப் புன்னகை இழையோடக் கூறினார்.

''சம்பந்தம்! நேர்மை, நற்பண்புகள், நன்னடத்தை உள்ளவங்க தான் பிறருக்கு காண்டக்ட் சர்ட்டிபிகேட் கொடுக்கத் தகுதி உடையவங்கன்னு நீ தீர்மானமா நம்பறே. உன்னோட கருத்துப்படி அந்தத் தகுதி மகாத்மா காந்தி ஒருத்தருக்குத்தான் இருக்கு. ஆனா உன்னோட துரதிர்ஷ்டம் அவர் இப்ப உயிரோட இல்லே. அப்படியே உயிரோடு இருந்து அவர் தந்தாலும் அந்த சர்ட்டிபிகேட்டுக்கு ஒரு வேர்க்கடலை மடிக்கிற காகிதத்துக்கு உள்ள மதிப்பு கூட கிடையாது. ஏன்னா, மகாத்மா காந்தி ஒரு எம். பியோ, ஒரு எம். எல். ஏயோ கேவலம் ஒரு கெஜடெட் ஆபீசரோ கூட இல்லே!''

'சுலோகன்' எழுதுங்கள்!

''செலவு ஒரே ரூபாய், வரவோ ஒரு லட்சம்!'' ''ஒரு வீடு, ஒரு மரம்'', ''இரண்டுக்குப் பின் எப்போதும் வேண்டாம்!'' ''இந்தியனாய் இரு, இந்தியப் பொருள் வாங்கு'', போன்ற பல 'சுலோகன்'களை அரசு பிரபலப்படுத்தி வருகிறது.

நாமும் பதிலுக்கு அரசுக்குச் சில 'சுலோகன்'களை வழங்கினால் என்ன?

லஞ்ச ஊழல், விலைவாசி உயர்வு, தேர்தல் வாக்குறுதிகள், கட்சித் தாவல் போன்ற எத்தனை விஷயங்கள் இல்லை! உங்கள் கவனத்தைக் கவர்ந்து கற்பனையைத் தட்டி விடுகிற ஏதேனும் ஒரு பிரச்சினை குறித்து ஒரு கோஷம் அருகில் உள்ள வெற்றிடத்தில் எழுதி இந்தப் பகுதியைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமாகும் நகைச்சுவையும், நையாண்டியும் மிக்க 'சுலோகன்'களுக்குப் பரிசு உண்டு. முடிவு தேதி: 19-12-83 உறையின் மேல் ''சுலோகன்'' என்று குறிப்பிடவும்.

என் பெயர்: ....

விலாசம்: ....

....

....


ஒவ்வொரு நாளையும்
டான்டெக்ஸ்®
அணிந்து துவக்குங்கள்
காலை முதல் இரவு வரை டான்டெக்ஸ் அணிந்து மகிழுங்கள். அதன் கச்சிதமான உடம்போடு ஒட்டும் அமைப்பும், சிறப்பும் உங்களுக்கு நாள் முழுவதும் இதமான சுகத்தை அளிக்கிறது.
IS : 4964
ஒட்டி உறவாட
டான்டெக்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள் • சிறுவர்களுக்கான ரகங்கள்
THE SEAL OF
TANTEX
QUALITY
தயாரிப்பு
Imageads-M- TT. 1568 Tam



தீபாவளி ரேஸ்

அன்புள்ள வாசகருக்கு,
பொறுத்துக் கொள்ளுங்கள். அடுத்த வாரத்தோடு தீபாவளி ரேஸ் குதிரைகள் பற்றிய எங்களின் கணிப்பு ஒரு நிலைக்கு வந்து விடும்.
அதற்கு முன் இந்த வாரத்து இரண்டு குதிரைகள் பற்றி...

தங்கமகன்.

மூலதனம் (தயாரிப்பு): **சத்யா மூவீஸ்.**
மூளைதனம் (இயக்கம்): **ஏ. ஜெகன்னாதன்**

கொஞ்சநாள் இடைவெளிவிட்டு ரஜினி ரசிகர்களைப் பரியாற்ற வந்திருக்கும் படம். மூன்று முகத்தைக் காட்டாவிட்டாலும் குறைந்தபட்சம் இரண்டு வித்தியாச முகங்களையாவது காட்டினால்தான் சந்தோஷப்படுத்த முடியும் என்று புரிந்திருக்கும் பெரிய கம்பெனி.
இன்று ஊரெங்கும் டிஸ்கோ ஜுரம் (திரையில்தான்). கையைக் காலை எப்படி உதறினாலும் இந்த நடனத்தில் சேர்த்தி. என்றாலும், அதற்கும் ரஜினியிடம் இன்னும் கூடுதலான நளினம் இருந்திருக்கலாம். ஏக தடபுடலாய் செட்டிங்ஸ். பூர்ணிமாவுக்கும் பளபள உடை. ரஜினி அவரிடம் மயங்குவதும், அவரைத் தன் வசமாக்க ஒவ்வொரு ஹோட்டல் நிகழ்ச்சிகளிலும் ரௌடித்தனம் பண்ணுவதும், நெகடிவ் கற்பனை. உச்சமாய், 'மச்சானைப் பாருடி, மச்சமுள்ள ஆளுடி' என்று ஒரு இரண்டாந்தரப் பாட்டு வேறு. (தமிழ் சினிமாவின் ஆரோக்கியம் லொக் லொக் என்று இருமுகிற சத்தம் பெரிய பானர்களுக்குக் கேட்காதோ?)
கதை கையை விட்டு நழுவுவதை வெகு தாமதமாய் உணர்கிறார்கள்.
இடைவேளைக்குப் பின் விஜயகுமாரியின் கண்ணகி புகழ் கண் உருட்டல்கள் பார்க்கிற ஆண்களைப் பதறடிக்கும். வி. கோபாலகிருஷ்ணன் (ரிடையர்டு மிலிட்டரி) ரவீந்தர் (ஜுனியர் வில்லன்) இருவரும் எவ்வளவு தான் சீரியஸாய்ப் பண்ணுகிற போதும் நமக்குச் சிரிப்புத் தான் வருகிறது. ஜெய்சங்கரோ காரமே இல்லாத ஊறுகாய். இன்னொரு பூஜ்ய வில்லனாய் தே. சீனிவாசன். காளியாய் வருகிற மனோகரைப் பார்க்கிற போது தான் மனம் கொஞ்சமாவது சமாதானமாகிறது. சிங்கார சிலுக்கு கூட ஓரமாய் நின்று ஓரமாகவே ஒதுங்கிக்கொள்கிறார். அம்மாவை துஷ்பிரயோகம் செய்தவர்களைத் துவம்சம் செய்ய மகன் புறப்பட, வில்லன்கள் குறுக்கிட்டு வழக்கமான ஆள் கடத்தல்களைச் செய்ய, வழக்கமான உச்சக்கட்ட சண்டைகள். தயாரிப்பாளர்களின் ஜாக்கிரதை உணர்வுக்குச் சான்றுகள்.
சண்டைகள் ரிம்ரிம் என்று கண்முன் நிற்கிற மாதிரி படமாக்கியிருக்கிறார்கள். பாடல்களில் இரண்டு ('ராத்திரியில்', மற்றும் 'வாவா பக்கம் வா') ஜோர் இனிமை. சத்தான பின்கதையும், ரெட்டியாராக ரஜினி வந்து அமர்க்களப்படுத்துகிற சீன்களும் (வெட்கமாய் நகத்தைக் கடித்துக் கொண்டு, எதிரே நிற்பவர் வயிற்றில் செல்லமாய் கும் குத்துகிற ரஜினி தான் ரஜினி), தடபுடல் செட்டிங் வகைகளும்,



...மான சங்கீதமும், பித்தனிக்குக் கொஞ்சம் மூலாம் பூசுகின்றன.
...றபடி தங்கமகன் மனதில் தங்குகிற மகனில்லே.

ஜெயமன்மதன் டிப்ஸ்: ஜரிகை போட்ட நோஞ்சான் குதிரை. 'காமன் மேன்' சொல்கிற ரசிகர்களால் பிழைத்துக் கொள்ளும்.

நீறு பூத்த நெருப்பு

மூலதனம் (தயாரிப்பு): **வடலூர் எஸ். சிதம்பரம்.**
மூளைதனம் (இயக்கம்): **கே. விஜயன்.**

'சட்டம் ஒரு இருட்டறை'யைக் கொடுத்தவர்கள் கொடுத்திருக்கும் கதை.
சம்பளம் கேட்கப்போன அர்ச்சகரின் முகத்தை எச்சில் விஸ்யால் தர்ம கர்த்தா அபிஷேகம் செய்யும் காட்சியுடன் படத்திற்குப் பிள்ளையார் சுழி விழுகிறது. விளைவாய் அர்ச்சகரும் அவர் மனைவியும் அநியாயமாய்த் தூக்கில் தொங்கி பூத உடல்களைத் தியாகம் செய்ய அநாதையாய் விடப்படும் பத்து வயது அண்ணனும், நான்கு வயது தங்கையும். நம் நாயகன் விபூதி பூசி மௌனமாய் சபதம் எடுக்கிறான். சபதம் எடுக்கும் முறையில் புதுமை செய்து, வளர்கிறான். அநியாயப் பணக்காரர்களைக் கொள்ளை அடிக்கிறான். அந்தச் சாக்கில் கராத்தே, காபரே, காதல் எல்லாம் உள்ளே புகுந்து சக்கைப் போடு போடுகிறது.
ஏறக்குறைய எல்லாமே அறிமுகங்கள். கன்னட முகத்தோடு நாயகனும் ரமேஷ். போனால் போகிறது, பிடித்துக் கொள் என்கிற மாதிரி நாலு ரீலுக்கு ஒரு தரம் உணர்ச்சியைக் காட்டும் விதம் அப்படி ஒன்றும் மெச்சிக் கொள்ளும் படியாக இல்லை. அவரின் தங்கையாய் விஜயசாந்தி. ஒரு மாமாங்கத்திற்கு அப்புறம் தமிழ்த் திரையில் பார்க்கிறோமா, இன்னும் ஒரு மாமாங்கத்திற்குக் காணாமல் போகிற மாதிரி செய்திருக்கிறார்.
சொல்லும்படியாக இல்லாதது என்று ஒரு லிஸ்ட் போட்டால், திடீர் திடீர் என தடம் மாறுகிற கதை, வில்லன்களின் சிறுபிள்ளைத்தனமான சந்திப்புகள், சும்மாச் சும்மா கதையில் நுழைகிற காபரே நடனம், சரத்தில்லாத பாடல்கள், கே. விஜயனின் டைரக்ஷன் என்று பெரிதாய்ப் பட்டியல் நீளும். சொல்லும்படியாக உள்ளது என்று தேடினால் — வைக்கோல் போரில் ஊசியைத் தேடுகிற கதைதான்.

ஜெயமன்மதன் டிப்ஸ்: **பின்பக்கமாய் ஓடுகிற வலங்கைமான் ஜாதி.**

மிச்சம், எஞ்சியிருக்கிற இரண்டு குதிரைகள் 'தூங்காதே தம்பி தூங்காதே', மற்றும் 'மனைவி சொல்லே மந்திரம்'. அடுத்த வாரம் பார்வையிடுவோம். அதுவரை, வந்தனங்களுடன்.
ஜெயமன்மதன்.



''தாத்தா, முகமூடி மாதிரி கண்ணாடி, சவுக்குக் கட்டை மாதிரி வாக்கிங் ஸ்டிக் சகிதமா வெளியே போறீங்க!... ஆபத்து... சொல்லிட்டேன்!''



''என்ன தான் உறவுக்கார மனுஷரா இருந்தாலும் நடுராத்திரியிலே வந்து கைத்தடியாலேகதவைத்தட்டலாமா?''



''சாத்தியிருக்கிற கதவை உடைக்க உள்ளே போய் வழக்கம்!... தொறந் திருக்கிற கதவு வழியா உள்ளே போக பயமாயிருக்கு!....''





''ஏன்யா, ஏதாவது... இருக்கா உனக்கு? கதவுக்குப் பக்கத்திலேயே சவுக்குக் கட்டைகளைப் போட்டு வெச்சி ருக்கியே?... நாலஞ்சு முகமூடிகளையும் போட்டு வைக்கக் கூடாதா?''



''டைரக்டர் சார்!....சிலுக்கு,ஜெய மாலினி, அனுராதா, ஜோதிலட்சுமி, ரமணலட்சுமி இவங்களைப் போட்டு 'முகமூடிக் கொள்ளையர்கள்'னு. ஒரு படம் பதினஞ்சு நாள்ளே பண்ணித் தரணும்! சூட்டோடு சூடா ரிலீஸ் பண்ணிருத்தான் கொள்ளை, கொள் ளையா வசூல் நடக்கும்!''

''யாரோபோலீஸ் முகமூடிபோட்டுக் கிட்டு மாறு வேஷத்திலே நம்ம கூட் டத்திலேகலந்திருக்கான்!...யாரது?..''





''முகமூடி போட்டுக்கிட்டு ஒருத்தன் சவுக்குக்கட்டை வாங்கிட்டுப்போறான் சார்!.... நம்ம நூத்து பதினெட்டை ஃபாலோ பண்ணச் சொல்லி அவன் எங்கேயாவது கதவை உடைக்கிறானான்னு பார்னு அனுப்பி இருக்கேன், சார்!''

''என்ன ஆள்யா நீ? பாத்துட்டு ஓடி வந்து தகவல் சொல்லுன்னு. சொல்லி இருக்க வேணும்?''



''சார், என் ஊட்லேந்து கடப்பாறை,சவுக்குக்கட்டை, முகமூடி எல்லாத்தையும் யாரோ திருடிட்டுப் போயிருக் காங்க, சார்!''



''முகமூடித் திருடங்க பயம் ஜாஸ் தியா இருக்கு! நீங்க எனக்குப்போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு பண்ணிக் கொடுக்கணும்!''

பெண்ட் லீவரில் ஒரு சைக்கிள் சக்கரத்தை வைத்துச் சுழற்றி 'பெண்ட்' ஆனதைப் பார்த்துக் கொண்டிருந்தான் காசி. பக்கத்தில் ஓர் இரும்புத்தட்டில் சைக்கிளின் உதிரிப் பகுதிகள் மண்ணெண்ணெயில் ஊறிக் கொண்டிருந்தன. சைக்கிள் சொந்தக்காரர் புக்கிங் கிளார்க் ஆதிமூலம் ஸ்டூலில் உட்கார்ந்து தம் சைக்கிள் ஓவராயில் ஆவதை உன்னிப்பாகக் கவனித்தார்.

''இன்னா சார்... வண்டி எங்கியானு ஆக்ஸிடெண்ட் ஆச்சா... 'வீல்' இப்பிடி முறுக்கினுகிதே?''.

''ஆமா... காசி... பெரிய பையன் நாதமுனி திருப்பத்தூர்லே செகண்ட் ஷோ பாக்க எடுத்துனு பூயிருக்கான்... தாழும் புதர் கிட்டே ஒரு மாட்டு வண்டிலே மோதியிருக்கான்... என்னத்தைக் காட்டுறானோ அந்த சினிமாவிலே... ராத்திரி பகலு பாக்காமே சினிமா சினிமான்னு அலையறான் நம்ம பையன்...''

பக்கத்தில் உட்கார்ந்திருந்த கடைப் பையன் சைக்கிள் போர்க்கை வேஸ்ட் துணியால் துடைப்பதை நிறுத்தி அவரை ஒரு பார்வை பார்த்தான்.

''டேய் நம்ப. நிப்பின் கீ'யை எடுத்தா.''

பையன் வேஸ்ட்டைப் போட்டுவிட்டு வாய் திறந்த ஒரு மரப்பெட்டியைத் துழாவத் தொடங்கினான்.

''டேய் சோமாறி... எங்கடா வச்சே?''

'பாக்கறேன் அண்ணாத்தே.''

''கண்ட எடத்துல வச்சடு. அப்புறமா கூளப்பானைய கௌர்ற மாதிரி கௌறு... ஒனக்கெல்லாம் ஏண்டா இந்தத் தொழிலு.. ஈ ஓட்டினு அவிச்ச வேர்க்கடலே நெல்லிக்காண்ணு கூறுகட்டி வித்துக்கினு இர்ருன்னா இர்ப்பே...''

அந்நேரத்தில் ஹரி பட்டாணியச் சிப்பாய் மாதிரி நெடுநெடுவென்று சைக்கிளில் இறங்கினான்.

புக்கிங் கிளார்க்கைப் பார்த்து ஒரு குட் மார்னிங் செய்துவிட்டு சைக்கிளுக்கு ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான்.

''என்ன ஹரி இன்னிக்கு நைட் டூட்டியா...''

''ஆமா சார்... லீவ்லே போயிருந்த பெனடிக்ட் டூட்டிலே ஜாய்ன் ஆயிட்டான்...''


''யாரு கேபின் ஏ. எஸ். எம்?''

''சம்பந்தம் சார்.''

''சரியான மூலவியாதியாச்சே... எப்படி அவனுக்கும் ஒனக்கும் செட்—அப் ஆயிடுச்சா... ம்ம். நீ எல்லார்கிட்டேயும் அட்ஜஸ்ட் பண்ணிக்குவே.''

ஹரி அந்தப் பாராட்டுக்கு





வெகுளி போன்று சிரித்தான். ஆதிமூலம் அந்தச் சிரிப்பை ரசித்தார்.

''எங்கடா வச்சே இன்னைத் தூங்கி?''

நம்பி இன்னும் பெட்டியைத் துழாவிக் கொண்டிருந்தான். பக்கத்திலிருந்த ஸ்பானரை எடுத்து அவன் மீது வீசியெறிகிற மாதிரி பயமுறுத்தினான் காசி.

''இன்னு அண்ணாத்த.... அவனை ரேங்கறே?'' என்று ஹரி கடைக்குள் பிரவேசித்தான்.

''நிப்பிள் கீயைக் காணோம்.''

சுவரின் மீது ஐயப்பசுவாமி படத்திற்குப் பக்கத்தில் சிறியதாக ஒரு கண்ணாடி ஷோ கேஸ் மாட்டியிருந்தது. ஹரி சட்டென்று அதன் மீது ஒருமுறை கண்ணை ஓட்டிவிட்டு அதை நெருங்கினான். கண்ணாடிக் கதவைத் திறந்து இரண்டாவது தட்டிலிருந்து நிப்பிள் கீயை எடுத்துக் காசியிடம் நீட்டினான் ஹரி.

''இதை ஏண்டா அங்கே வச்சே?'' என்று பையனைப் பார்த்துக் காசி சீறினான். ஹரி குறுக்கிட்டான்.

''நான் தான் அண்ணாத்தே அங்கே வச்சேன்.... ராத்திரி கடைப் பலகை போட றப்போ இன்னைமேல கெடந்தது. அதுக்கு ஒரு தடவை அவனைக் கோச்சிக்காதே...மத்தியானம் ராவுசா சைக்கிளை பெண்ட் எடுத்தே பாரு.... அப்ப நீதான் அங்கே வச்சிருப்பே...''

ஆதிமூலத்திற்குச் சிரிப்பு வந்தது.

''எப்படியோ.... பையன் ஒத வாங்காமே காப்பாத்திட்டே.''

''டேய் நம்பி... முனியாண்டி கடைலே மூணு டீ சொல்லிட்டு வா.... நீ வாங்கி யாராதே. கைலே கிஷ்ணால் நாத்தம் இருக்கும்.''

நம்பி தற்காலிகமாக வேலையிலிருந்து விடுதலை கிடைத்த நிம்மதியில் வெளியேறினான்.

''ஹரி... நீ ஒருத்தன் தாம்பா ஆறு வர்சமா நம்ம ஜங்சன்லே பாய்ண்ட்ஸ்மனு இருக்கே...''

''இல்லியே சார்.\.. நடுவுலே நானும் பச்சக் குப்பத்துக்குப்போய்ட்டு வந்தேனே.''

''ஆங். மூணு மாசம். அதுக்குள்ளதான் டிவிசன் மானேஜர் கிட்டே ரெகமெண்டேஷன் பூடுச்சே... ஹரி இல்லாமே கேபின் கேபினாவே இல்லேன்னு...''

ஹரி பேசாமல் நின்றான்.

''வயசு ஆய்க்கினே போவுதே. ஒரு பொண்ணைப் பாத்துச் சட்டுப்புட்டுனு கல்யாணம் பண்ணிக்கறது தானேப்பா...''

காசி ஒருமுறை சைக்கிள் சக்கரத்திலிருந்து பார்வையை அவன் மீது உயர்த்தினான்.



''பண்ணிக்கலாம் சார்...'' என்று அதே சிரிப்புடன் பணிவாகச் சொன்னான் ஹரி.

''எப்போ...கெழவனானப்பறமா...இதோ பாரு ஒன்குருநாதன் சைக்கிள் வீலைச் சுத்திக் கிட்டே காலத்தைக் கழிச்சுடலாம்னு பாக்க றானே...அப்படியா?'' ஆதிமூலம் கேட்டார்.

காசிக்குப் பதில் ஏதேனும் சொல்லித் தீர வேண்டியிருந்தது.

''ஏன் சார்... பொண்ணு ஏதாவது வச்சிருக்கீங்களா?''

''பொண்ணுக்கு என்னப்பா கையைச் சொடுக்கினா அரை டஜன் இருக்கு. ஆமா... ஆமா... ஒனக்கு இன்னைக்குப் பொண்ணு. அதான் இனி கணக்கா காத்துக்கினு இருக் காளே ஜெயா.... இந்நேரம் கேசவன் உசுரோட இருந்தா இவ்ளோ டிலே ஆக்கி யிருப்பாரா?''

நிப்பின் லீவை ஸ்போக்ஸ் கம்பியில் கொடுத்து முடுக்கிக் கொண்டிருந்த காசியை ஹரி ஏறிட்டுப் பார்த்தான். அந்த முகத் தில் சலனமில்லை. காசி சார்பாக ஹரி பேசினான்.

''நீங்க இன்னு சார்... அண்ணாத்தை அத தங்கச்சி கணக்கா வளர்த்துக்கிட்டிருக்கு...''

''அப்படியா! ஜங்சன் பூரா காசி தான் அவளைக் கட்டிக்கப் போறான்னு பேசிக்கறாங் கப்பா... அதனால தான் சொன்னேன்....''

''பேசறவங்களுக்கு இன்னு வாயாவலிக்கப் போவுது....''

''பையன் நம்பியுடன் முனியாண்டி கடைப் பையன் கையில் ஒரு டீ க்ளாஸ் அடுக்கிய தகரப் பெட்டியுடன் உள்ளே வந்தான்.

''அண்ணாத்தே...'' என்று எச்சரிக்கை தருவது போல் திடீரென்று காசியை அழைத் தான் ஹரி.

மண் குடிசையில் நகர தந்தை!

அண்மையில் திருவனந்தபுரம் மேய ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அபு பக்கர் வீடு ஒரு மண் குடிசை. அதுவும் சொந்த வீடு அல்ல. மாதம் 100 ரூபாய் வாடகை. திருவனந்தபுரம் பாளையம் பகுதியில் உள்ள மீன் மார்க் கெட்டின் அருகில் குடிசையில்தான் மேயர் வசித்து வருகிறார். இடது கம்யூ னிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். 30 வருடங்களுக்கு மேலாகக் கட்சிப் பணி யிலே ஈடுபட்டு வரும் அபுபக்கர் சொத் துச் சேர்க்காமல் ஒரு வித்தியாசமான மனிதராகவே விளங்குகிறார்.

—எஸ். எஸ். மணி



வெளியே அரை நிஜாரும் வலைப்பனியனு மாக மணி நின்று கொண்டிருந்தான். காசி நிமிர்ந்ததும் ஓரமாக அவன் காறித்துப்பி னான். அவன் நிற்கும் தோற்றம், அணிந்து வந்திருக்கும் உடை இரண்டைப் பார்த்த துமே அவன் தகராறுக்குத் தயாராக வந் திருக்கிறான் என்று விளங்கிற்று.

மணிக்குப் பக்கத்தில் பொன்னன்.... வலப்புறம் கிட்டா...

தான் தெருவில் இறங்கியதுமே அங்கங்கே நிற்கும் அவனுடைய ஆட்கள் கும்பல் சேர்ந்து விடுவார்கள் என்று பளிச்சென்று காசிக்கும் புலப்பட்டது.

சற்றுத்தூரத்தில் ஒரு தண்டவாள உலகம். பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் வந்து போனதால் பிரயாணிகள் அலை ஒன்று கொஞ்சங்கொஞ்ச மாக வடிந்து கொண்டிருந்தது. பஸ் போயிற்று. டாக்ஸி ஹாரன் அடித்தது. எல்லாவற்றையும் கடந்து கடையைச் சுற்றி ஒரு நிசப்தம் நிலவியது.

புக்கிங் கிளார்க்குக்கு விஷயம் புரிந்து விட்டது. அவர் எழுந்து போகலாமா கூடாதா? என்று ஒரு தவிப்போடு உட்கார்ந் திருந்தார். காசி அவர் படபடப்பை உணர்ந்து ஒரு புன்முறுவல் செய்தான்.

''டேய் பையா, டீயைக் குடுடா!'' என்றான்.

டீக்கடைப் பையன் ஓர் உதறலோடு டீப் பெட்டியைத் திறந்து ஒவ்வொரு கிளா ஸாக எடுத்தான்.

''வாங்கிக்கங்க ஸார்... நீங்க டீயைக் குடிச்சுட்டு ஒன் அவர் கழிச்சு வாங்க'' என்று அவருக்கு விடுதலை வழங்கினான்.

ஹரியும் காசியும் ஆளுக்கொரு கிளாஸை வாங்கிக் கொண்டனர்.

புக்கிங் கிளார்க் நாக்கு சுடச்சுட அவசர மாக டீயைக் குடித்து விட்டு எழுந்தார்.

''நான் வர்றேன்'' என்று அரைகுறை யாகச் சொல்லிவிட்டு வீதியில் நின்ற மூன்று பேரையும் ஒருமுறை வெறித்துப் பார்த்து விட்டு விறுவிறுவென்று நடந்தார்.

ஹரியும் காசியும் கிளாஸைக் காலி செய் தனர்.

''ஹரி... கல்லாவிலேயிருந்து காசை எடுத்துக் குடு'' என்று ஒன்றுமே நடவாதது போல மீண்டும் பெண்ட் வீலில் மாட்டி யிருந்த சைக்கிள் சக்கரத்தைச் சுற்றத் தொடங்கினான் காசி.

காசை வாங்கிக் கொண்டு பையன் வெளி யேறினான்.

இரவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சஞ்சீவி முதலியார் சொன்ன புத்திமதியை நினைத்துப் பார்த்தான் காசி. அவனுக்குள் ஒரு கசப் பான சிரிப்பு வெளிப்பட்டு உள்ளேயே புதைந்தது.

''டாய் காசி... வெளியே வாடா''

சக்கரத்திலிருந்துதலையை நிமிர்த்தி அந்தச் சவாலைச் சந்தித்தான் காசி.


''இன்னடா விஷயம்?''

''வாடாங்கோ.....''

காசி ஹரியை ஏறிட்டுப் பார்த்தான்.

ஹரி பதறாமல் மணியை நோக்கி நிதான மாய் ''மணி.... ராத்திரி நடந்தது நடந் தாச்சு. நீங்கதான் அண்ணாத்தையை

எங்களுக்குத் தரமான பால், நியாய
விலையில் முறையாகக் கிடைக்கிறது.
எப்படித் தெரியுமா?
பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின்
உதவியால்தான்!



எங்கும் எதிலும் கூட்டுறவு
வளம் பொங்கப் பொலிவதும் கூட்டுறவு.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்
சென்னை

மொதல்லே தாக்கிட்டீங்க. அத்துக்கப்புறமா போலீஸ்லே போய் ரிப்போர்ட் வேற குடுத்திருக்கீங்க.... மேலே ஏதாவது தகராறு பண்றது நல்லால்லே'' என்று நிறுத்தித் தெளிவாக ஒரு நியாயம் சொல்வது மாதிரி கூறினான்.

''டேய்... நீ இன்னாடா பெரிய ஜட்ஜ் மாதிரி பஞ்சாயத்து சொல்றே... டேகாசி.. அப்ப இல்லேடா கதை... இதோ இப்ப... நீ ஆம்பளையா இருந்தா வெளிலே வா.''

கொஞ்சம் வளைந்திருந்த ஒரு ஸ்போக்ஸ் கம்பியை நிப்பிள் கீயால் முடுக்கி நிமிர்த்திக் கொண்டே நிதானம் தப்பாத குரலில் காசி பதிலளித்தான்.

''டேய்... இந்த ஜொப்புல்லாம்வாணாம்.. நீயும் ஆம்பளை தானே... எத்தினி பேரை இட்டாந்துருக்கே... மூணு பேரா... நாலு பேரா அங்கே சந்து மொனேலே இன்னும் எத்தினி பேரு இர்க்காணுங்க... எல்லாரையும் கூட்டிக்கினு உள்ளே வா! நீ இன்னமோ ஆம்பளையா ஆம்பளையாண்ணு கொலச்சிக்கினு தெருவிலே நிக்கறயே.''

பெண்ட் லீவரில் கிணுகிணுவென்று சன்னமாக ஒலித்தவாறே சக்கரம் சுழன்றது.

''டாய் பொன்னு.... பாத்தியா அவன் இம்மாக்கை... ஏர்ரு மேலே'' என்று கத்திக் கொண்டே கடைக்குப் போடப்பட்டிருந்த கடப்பைக்கல் வாசற்படி மீது கால் வைத்தான் மணி.

காசி விசுக்கென்று எழுந்து நின்று விட்டத்தில் தொங்கிய ஒரு சைக்கிள் செயினை உருவினான். அதற்குள் கடைக்குள் அவர்கள் மூவரும் குதித்து ஏறிவிட்டனர். முதல் உதை கௌரணியில் ஊறிக் கொண்டிருந்த இரும்புத் தட்டுக்குக் கிடைத்தது. ஒரு சைக்கிளின் உதிரிப்பகுதிகள் கடை முழுவதும் சின்னாபின்னமாய்ச் சிதறின. மணி கையில் மூன்று அங்குல நீளத்தில் பட்டன் பிடிவைத்த ஒரு பிச்சுவாவோடு காசி மீது பாய்ந்தான். பொன்னன் கையில் ஒரு நீளமான இறுகிய ரப்பர்த்துண்டு. கிட்டா கையில் ஆயுதம் இல்லை. அவன் தான் முதலில் ஓங்கி கராத்தே வெட்டு அடியோடு தாக்குதலைத் துவக்கியவன். அந்த அடி பலமான அடிதான்.

காசி எத்தனையோ அடிகளை தாங்கியவன். கையிலிருந்த சைக்கிள் செயினை ஓங்கி விர் விரென்று தன்னைச் சுற்றி மனித உடல்களின் நெருக்கம் வராதவாறு சுழற்றினான். ஒரு வீச்சு கிட்டாவைக் கடுமையாகத் தாக்கிற்று. வலது முழங்கைக் குறியாயிற்று. அவன் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''டாய்...'' என்று கத்திக்கொண்டே ஒரு வெறிக் கூச்சலுடன் மணி முன்னேறினான். சைக்கிள் செய்ன் அவன் முழங்கையில் வெட்டியது. வலது கையில் பிடித்திருந்த பிச்சுவாவை வேதனையுடன் இடது கைக்கு மாற்றிக் கொண்டு காசியின் வயிற்றில் ஓர் இழுப்பு இழுக்க அவன் ஓங்கினான்.

ஹரியின் வலிமையான கரம் குறுக்கே பாய்ந்து அந்தப் பிச்சுவாவைப்பற்றியிருந்த கையைத் தடுத்தது. அதற்குள் சைக்கிள்



''உங்க கதைகளில் எழுத்தாளர் ஏகாம்பரத்தோட சாயல் தெரியுதே?''
''அவர் எனக்குத் தூரத்து உறவு சார்.''
—கீழை அ. கதிர்வேல்

செய்னை வலுவாக மணியின் தோள்பட்டையை நோக்கி வீசினான் காசி.

கத்தி ஹரியின் வலது முன்னங்கையில் ஓர் ஆழமான அறுப்பு போட்டு விட்டு அதைப் பிடித்திருந்த கையின் பிடிப்பு விட்டதால் 'க்ளாங்' என்று ஒலித்தவாறே தரையில் விழுந்தது. ஹரியின் கையிலிருந்து ரத்தம் பெருக்கெடுத்தது...

''டாய்...'' என்று கத்திக்கொண்டே நாலைந்து பேர் திமுதிமுவென்று கடைக்குள் நுழைந்தனர்.

கடை அவ்வளவு பெரியதல்ல. ஒரு பத்து பேர் உட்காரலாம். அங்கங்கே சைக்கிள் சாமான்கள்... உதிரிப் பகுதிகள். அவற்றையெல்லாம் உதைத்து மிதித்துக் கொண்டு ஒரு கூட்டம் உள்ளே நுழையவும் அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று அந்த நெருக்கத்தில் தெரியவில்லை.

வெளியே ஓடிக் கொண்டிருந்த தண்டவாள உலகம் தன் ஓட்டத்தை ஒருகணம் நிறுத்திற்று. பிரயாணிகள், தெருவில் நின்றவர்கள், டாக்ஸி டிரைவர்கள் என்று கடைக்கு வெளியே ஒரு கூட்டம் கூடிவிட்டது.

''போலீஸ்... போலீஸ்'' என்று யாரோ கத்தினார்கள். இரண்டு போலீஸ்காரர்கள் ஜங்ஷனுக்கு நேர் எதிரே டீ குடித்துக் கொண்டிருந்தவர்கள் பாதி டீ கிளாஸை அப்படியே வைத்து விட்டு அங்கே திடீரென்று கூடிய கூட்டத்தை நோக்கி தங்கள் விசிலை ஊதியவாறே கனத்த போலீஸ் பூட்கள் தோட்டல் தெருவில் ஒலிக்க ஓடி வந்தனர்.

அந்த விசிலுக்கு ஒரு பலன் இருந்தது. கடையில் ஏறிய கூட்டம் கலைந்து விட்டது.

இப்போது காசியைப் பாதுகாப்பது போன்று அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு ஹரி நிற்பது அந்த கான்ஸ்டபிள்களுக்குத் தெரிந்தது. அவனது சட்டையின் முதுகுப் பகுதி ஆங்காங்கே நார் நாராகக் கிழிந்து தொங்கியது. இரண்டு இடத்தில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

இப்பொழுது!

மிகுதியான மதிப்புக்கு ஒரு கவர்ச்சியான தோற்றம்

பாய்ண்ட்

காற்றுப் புகாத மீண்டும்
உபயோகிக்கக்கூடிய
1 கிலோ பிளாஸ்டிக் ஜாடியில்.



புதிய 1 கிலோ
பாய்ண்ட் கவர்ச்சியான
மற்றும் மீண்டும் உபயோகிக்க
கூடிய பிளாஸ்டிக் ஜாடியில்!
சிறிதளவு அதிகம் கொடுத்து
பெருமளவு பயனைப் பெறுவீர்.


வழக்கமான கார்ட்டன்களிலும்
கிடைக்கும்.

பாய்ண்ட்
மிகவும் நம்பகமான
டிட்டர்ஜெண்ட் பவுடர்.

தயாரிப்பவர்கள்: கர்நாடக சோப்ஸ்
அண்ட் டிட்டர்ஜெண்ட்ஸ் லிமிடெட்

விற்பனையாளர்கள்:
மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட்.

MCA/PDP/69/TAM



கோமதி சுவாமிநாதன்



சாலையைக் கடந்து எதிர்ப்பக்க நடைபாதையை அடைந்த போதுதான் என் நண்பன் நடேசனைக் கவனித்தேன். அத்தனை நேரம் யாரோ ஓர் இளைஞனுடன் சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ''சரி, போய்ட்டு வா! பார்க்கலாம் அப்புறம்!'' என்று விடைகொடுத்து அனுப்பிக் கொண்டிருந்தான்.

சிறு இடைவெளி விட்டு, ''யாருப்பா அது. எனக்குப் பார்த்த நினைவாக இல்லையே'' என்று கேட்டு வைத்தேன். அவனுக்கு அறிமுகமான எல்லோருமே எனக்கும் தெரிந்தவர்களாகத்தான் இருப்பார்கள். இந்த இளைஞன் எனக்குப் புது முகம்.

நடேசன் லேசாகச் சிரித்தான். ''இவன் ஒரு காதல் தோல்வி இளவரசன். இருபத்திரண்டிலே காதல் அரும்பி, இருபத்து மூன்று—ஸியிலே மலர்ந்து இருபத்திஏழு—டியிலே கருகிப் போன சமாசாரம். எங்க ஊர்ப் பையன்'' என்று விளக்கம் கொடுத்தான். ''வா! அப்படி ஓரமாக நின்று பேசலாம்! அவன் காதலை அவனே அழித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது தான் இதிலே தமாஷ்!'' என்று சொல்லி என் ஆர்வத்தைக் கிளப்பினான்.

பாலகிருஷ்ணன் சேப்பாக்கத்திலுள்ள மாநில அரசுக் காரியாலயம் ஒன்றில் மேல் மட்ட குமாஸ்தாவாகப் பணியாற்றி வந்தான். இருபத்தி ஏழு, இருபத்தி எட்டு வயதிருக்கும். அயனாவரம் பகுதியில் அறை. ஓட்டல் சாப்பாடு. இருபத்தி இரண்டாம் நம்பர் பஸ்ஸில் ஆபீசுக்குப் போய்த் திரும்பும் பல்லவன் பாஸ்!

ஒருநாள் அவனுக்கு ஒரு யுவதியின் உயிரைக் காப்பாற்றும் வீரதீர வாய்ப்புக் கிடைத்தது. சேப்பாக்கிலேயே, வேறு ஒரு காரியாலயத்தில் பணியாற்றும் வசந்தி இருபத்தி இரண்டாம் நம்பர் பஸ்ஸில் குளத்தங்கரை ஸ்டாப்பில் ஒரு காலை வைக்கவும், பஸ் கிளம்பவும் சரியாக இருந்தது.

அவள் நிலைகுலைந்து தடுமாறிப் பூமாதேவியைச் சரணாகதி அடையவிருந்த கணத்தில் பாலகிருஷ்ணன் ஒருகை கொடுத்து அவளை மேலே இழுத்து அவள் இரண்டு பாதங்களையும் படிக்கட்டில் நிறுத்தி அவள் மனக்கண்ணில் கைகொடுத்த தெய்வமாகக் காட்சி அளித்தான். பதற்றம் அடங்கிய பிறகு அவள் ஒரு சிறிய புன்முறுவலால் தன் ஆத்மார்த்த நன்றியைத் தெரிவித்தாள்.

அப்புறம் சில சந்தர்ப்பங்களில் அதே நம்பர் பஸ் பிரயாணங்களில் பரஸ்பரம் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். காரியாலயக் கேண்டீனில் ஒரே மேஜையில் எதிரும் புதிருமாக அமர்ந்து, ரவாகிச்சடி, காப்பி சாப்பிட்டார்கள். மாலை நேரங்களில் காதல் மொழி பேச ஆரம்பித்தார்கள்.

''எங்கள் வீட்டில் எனக்கு எதிர்ப்புத் தோன்றாது. நான் திருமணம் செய்து கொண்டால் போதும் என்று காத்திருக்கிறார்கள் என் பெற்றோர்கள். நீ எப்போது சொல்கிறாயோ, அப்போது நான் உன் வீட்டிற்கு வந்து அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். அதுதான் முறை'' என்றான் பாலகிருஷ்ணன் கண்ணியமாக.





''வேண்டாம்! நான் சில எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். அதற்காக நான் அஞ்சவில்லை. என் வருமானத்தை எதிர்பார்க்காத குடும்பம்தான். ஆனால் கொஞ்சம் கௌரவம் பார்ப்பார்கள். பரவாயில்லை. அவர்கள் முன் தம்பதிகளாகப் போய் நிற்பதுதான் பிரச்னைகளைத் தீர்க்கும்!'' என்றாள் வசந்தி தீர்மானத்துடன்.

''நீ ஒரு வீராங்கனை! நம் இருவர் வருமானமும் நிச்சயம் ஆயிரத்து ஐநூறுக்கு மேல் இருக்கும். ஒரு சிறிய போர்ஷன். ஆரம்பத்தில் கொஞ்சம் சிக்கன வாழ்க்கை! அப்புறம் நாம் ஆகாயத்தில் ஆனந்த இறக்கைகளுடன் பறக்கலாம்!'' என்றான் பாலகிருஷ்ணன் உற்சாகத்துடன்.

இருபத்தி இரண்டாம் நம்பர் பஸ்ஸில் இப்படி வளர்ந்த காதல் ஒருநாள் இருபத்தி மூன்று—சி பஸ்ஸிற்கு மாற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஒரு ஆபீஸ் நாளில் இருவரும் ஏதேதோ சாக்குச் சொல்லி லீவு போட்டுவிட்டு அஷ்டலட்சுமி ஆலயத்திற்குப் போனார்கள். அங்கே தைரியலட்சுமி சன்னதியில் திருமாங்கல்ய தாரணத்தை அர்ச்சகர் ஒருவர் சாட்சியுடன் வைத்துக் கொள்ள வழிமுறைகளை ஆராய்ந்தார்கள்.

பாலகிருஷ்ணன் நகைக் கடைக்குப்போய்ப் பத்து நாட்களுக்கு முன்பே ஒரு திருமாங்கல்யம் வாங்கிச் சரட்டில் கோத்து வைத்திருந்தான். யாரோ சிநேகிதி வாங்கிவரச் சொன்னாள் என்று சொல்லி வசந்தி ஒரு புதுப்புடவை வாங்கி வைத்திருந்தாள்.

ஒவ்வொரு அரசியல்வாதியும் அமைச்சராக வேண்டுமென ஆசையை வளர்த்துக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் அதற்கு விலக்காக விளங்கும் ஒருவர் இதோ இருக்கிறார். ஸ்வீடனில் புதிய சோஷலிஸ ஜனநாயக அரசின் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பை ஏற்ற திரு ஆண்டர்ஸன் இரண்டு மாதத்திற்கெல்லாம் பதவியை ராஜினாமாச்செய்துவிட்டார். காரணம், தலைநகரில் தாம் தங்க வேண்டியிருப்பதால்! தம் குடும்பத்துடன் தங்க முடியாமல் போவதும் தனியாக வாழ்வது தமக்கு உற்சாகத்தை அளிக்கவில்லை என்றும் தமது ராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்!

தகவல்: ஜா. ரவி, ஆதாரம்: வானொலி



ஒரு குறிப்பிட்ட முகூர்த்த நாளில் இருவரும் லீவு போட்டு விட்டு இருபத்தி இரண்டில் ஏறுவதற்குப் பதிலாக இருபத்தி மூன்று—சி பஸ்ஸில் ஏறினார்கள். பெசன்ட் நகர் அஷ்டலட்சுமி கோவிலை நோக்கி நடந்தார்கள்.

''குடித்தனத்திற்குஇடம்பார்க்கச்சொல்லி விட்டீர்களா?'' என்றாள் வசந்தி.

''எல்லா ஏற்பாடும் செய்து விட்டேன். திருவல்லிக்கேணியிலே இருநூறு ரூபாய்க்கு ஒரு 'இண்டிபெண்டண்ட்' போர்ஷன். நாம் இருபது நாள் ஹனி மூன் போய்த்திரும்பியவுடன் அங்கே போய் நம் குடும்பத்தை ஆரம்பிக்கலாம்.''

''ஓ! நம் இருவருக்கும் ஆபீஸ் பக்கத்திலேயே! நடந்தே போய்விடலாம். பஸ் சார்ஜ் மிச்சம். நீங்க நல்ல முன்யோசனைக்காரர்தான்'' என்று வசந்தி பாராட்டினாள்.

தைரியலட்சுமி சன்னதியில் அர்ச்சகரைக் காணோம். வேறு யாரோ ஒரே ஆசாமி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். பாலகிருஷ்ணனும் வசந்தியும் ஒருபக்கமாக நின்று கொண்டிருந்தார்கள்.

அந்த ஆசாமி பாலகிருஷ்ணனைக் கூர்ந்து கவனித்தார். அவருக்கு நாற்பது நாற்பத்தி ஐந்து வயசு இருக்கும்.

திடீரென்று அவர் பாலகிருஷ்ணன் பக்கத்தில் வந்தார். ''நீ கோவிந்தம்பட்டி குருசாமியோட பிள்ளை இல்லையோ... நீ இங்கே தான் வேலை பார்க்கிறே என்று உங்க அப்பா சொன்னார்... இது யாரு கூட?'' என்று சகஜமாக ஆரம்பித்தார்.

பாலகிருஷ்ணன் திகைத்தாற் போல் நின்றான். ''சார்! இது ஏதோ ஆள் மாறாட்ட விஷயம். நீங்க சொல்ற ஆசாமி நான் இல்லை.'' என்று சொல்லிக் கொண்டே வேறு திசையில் பார்வையை ஓட்டினான்.

அந்த ஆசாமி விடுவதாகத் தெரியவில்லை. ''இந்தாப்பர!... கோவிந்தம்பட்டிக்காரர்களுக்கு ஒருநாளும் ஞாபக சக்தி குறைந்து போச்சுன்னு யாருமே சொன்னதில்லை. நீ குருசாமியோட பிள்ளை பாலகிருஷ்ணன் தானே?... ஏனப்பா! மெட்ராஸிலே வீடு கிடைக்கலே, வீடு கிடைக்கலேன்னு சொல்லி எத்தனை நாள் தான் பெண்டாட்டியையும், குழந்தையையும் கோவிந்தம்பட்டி கிராமத்திலே விட்டு வச்சிருப்பே? மாமனார் மாமியாருக்குச் சமையல் செய்து போடவா ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தார்கள்?... உங்க அப்பா ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டார். போனவாரம் பார்த்தேன்'' என்றார் அந்த ஆசாமி நிதானமாக.

வசந்தியின் முகம் குப்பென்று வெளுத்தது. எந்தப் பக்கமோ திரும்பி நீலக்கடலைப் பார்க்க ஆரம்பித்தாள்.

''என்ன சார்! வயசுக்கு மதிப்புக் கொடுத்தால், யாரையோ பார்த்து யாராகவோ நினைத்துக் கொண்டு, உபதேசம் செய்ய ஆரம்பிக்கிறீர்கள். கொஞ்சம் விட்டால் என் கல்யாண சாப்பாட்டில் நீங்களே பரிமாறினீர்கள் என்று கூடச் சொல்லுவீர்கள் போலிருக்கே?'' என்று சீறினான்.


ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காலங்காலமாக
பயன்பட்டுவரும் கிராம்புத் தைலத்தின்
நன்மைகளை ப்ராமிஸில் கண்டுணர்ந்தனர்.
கிராம்புத் தைலம் கொண்ட
இணையற்ற டூத்பேஸ்ட்
ப்ராமிஸ்
நீங்களும் ஏன் அதை உபயோகிக்கக்கூடாது?
அட!
ப்ராமிஸ் போல
டூத்பேஸ்ட்டை ஏன்
இதுவரைக்கும்
யாரும்
தயாரிக்கல!
CLOVE OIL
The unique toothpaste with time-tested
Promise
for healthier teeth and gums fresher breath
Promise
Pro
ப்ராமிஸ்
பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது,
வாய்க்குப் புத்துணர்ச்சி
தருகிறது மற்றும்
துர்நாற்றத்தை அகற்றுகிறது.
பல்ஸாரா தயாரிப்பு
ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சிமிக்க
மூச்சுக்கு ப்ராமிஸ்.
CHAITRA-BLS-453-R_TAM


தலைவலி,
உடல்வலி,
ஜலதோஷம்
மறைந்திடும்
இங்கே
AMRUTANJAN
PAIN BALM
AMRUTANJAN LTD.
42-45, Luz Church Road Madras-4.
90 ஆண்டுகளாக நம்பகமானது.
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.
தீய பின்விளைவுகள் இல்லாதது.
OBM 8321 R TM

''அதுவும் உண்மைதானே! நல்லா நினைவு இருக்கு! பால் பாயச வாளியை நான்தான் தூக்கினேன். உங்க ஒன்று விட்ட மாமா எதற்கோ இலை முன்னால் தலையைக் குனியப் போக ஒரு கரண்டி பாயசம் சூடாக அவர் தலையில் சிந்தியது. அவர் அமர்க்களப்படுத்தினார். உங்க அப்பாத்தானே காலிலே விழுந்து கெஞ்சி, தலையைப் புதுத் துண்டு கொண்டு வரச் சொல்லித் துடைத்துவிட்டார்!... அதுசரி, யாரு இந்தப் பொண்ணு! உன் ஆபீசிலே வேலை செய்யறதா?... மெட்ராஸிலே இப்படி ஜாலியாக இருக்கலாம்ங்கற நினைப்பிலே தான் ஊரை மறந்துட்டியா?''

வசந்திக்கு அதற்குமேல் அங்கு நிற்கத் தைரியமில்லை. விடுவிடென்று படிகளில் இறங்கி பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள். 'வசந்தி! வசந்தி' என்று கூப்பிட்டுக் கொண்டே அவள் பின்னால் வந்தான் பால கிருஷ்ணன். கிளம்பிக் கொண்டிருந்த இருபத்தி மூன்று 'சி' பஸ்ஸில் ஓடிப்போய் ஏறிக் கொண்டாள். அந்த பஸ்ஸைத் துரத்த அவன் முயலவில்லை.

அப்புறம் ஒரு மாதம் ஓடிவிட்டது. வசந்தி ஒழுங்காக ஆபீஸ் போய் வந்து கொண்டிருந்தாள். இருபத்தி இரண்டாம் நம்பர் பஸ்ஸில் பாலகிருஷ்ணன் தலை தென்படவில்லை. மாற்றல் வாங்கிக்கொண்டிருந்தான்.

மேலும் ஒரு மாதம் ஆயிற்று. பால கிருஷ்ணனை அவள் மறக்க ஆரம்பித்தநேரத்தில், சாந்தோமில் ஒரு சிநேகிதி கல்யாணத்திற்குப் போய்விட்டுத் திரும்பும்போது வாஹினி நிலைய பஸ் ஸ்டாப்பில் 27டி-பஸ்ஸில் ஏறினாள்.

பஸ்ஸில் கூட்டம். அவளுக்கு உட்கார இடம் இல்லை. ஆண்கள் பகுதியில் கணவன் மனைவி போல இருவர் உட்கார்ந்திருந்தார்கள். அந்த ஆண்மகன் வசந்தியைக்கவனித்து விட்டான். ''மிஸ் வசந்தி! இங்கே உட்காருங்கள்'' என்று சொல்லித் தன் இருக்கையைக் காலி செய்து கொடுத்தான். வசந்தி நிமிர்ந்து பார்த்தாள்... பால கிருஷ்ணன். அவள் தயங்கினாள்.

''இது என் மனைவி கருணா. உட்காருங்கள்! கருணா! இது என் பக்கத்துக் காரியாலயத்தில் அலுவல் பார்க்கும் மிஸ் வசந்தி.'' அறிமுகத்தைச் சுருக்கமாக முடித்துக் கொண்டான்.

வசந்திக்குத் தலைசுற்றியது. அதற்காகவாவது அவள் சற்று உட்கார வேண்டும். உட்கார்ந்து அவள் மனம் சற்று சமநிலையை அடைந்த போது தான் எத்தனை பெரிய மோசடியிலிருந்து கொஞ்சம் கூட சேதாரமில்லாமல் தப்பினோம் என்று நினைத்துப் பார்த்தாள்.

''உங்களை எப்போது கோவிந்தம்பட்டியிலிருந்து அழைத்து வந்தார் மிஸ்டர் பால கிருஷ்ணன்?... குழந்தையை வீட்டில் விட்டு விட்டு வந்தீர்களா?'' என்றாள் அன்பு ததும்ப.

''கோவிந்தம்பட்டியா? அது எங்கேஇருக்கிறது? எங்கள் திருமணம் திண்டுக்கல்லில் இரண்டு வாரங்களுக்கு முன்னாலேதான் நடந்தது... குழந்தை அது, இது என்கிறீர்களே...? நீங்க வேறு யாரையோ நினைத்துக் கொண்டு....''அந்தக் கருணா பேசும்போதே வசந்திக்கு மீண்டும் பதற்றமும் தலைசுற்றலும் வந்து விட்டது. அந்த நேரத்தில் ஜி. எம். ஸ்டிரீட் பஸ் ஸ்டாப்பில் 27-டி பஸ் நிற்க கருணாவும் பாலகிருஷ்ணனும் இறங்கிப் போய் விட்டார்கள்.

"இப்படித்தான் ஒரு காதல் கதை 22, 23-சி, 27-டி பஸ்களில் நடந்து முடிந்தது. இப்போது வசந்திக்கு அவள் விருப்பத்துடன் வீட்டில் மாப்பிள்ளை தேடுகிறார்கள்!'' என்று கதையை முடித்தான் என் நண்பன் நடேசன்.


''சேச்சே! ஆளை அடையாளம் புரிஞ்சுக்காம யாரோ ஒருத்தன் அஷ்டலஷ்மி கோயில்லே உளறப்போக ஒரு காதல் அநியாயமா கலைஞ்சு போச்சே'' என்று வருந்தினேன்.

''அதொன்றுமில்லை. அந்த ஆசாமி அப்படி நடிச்சான். அப்படி நடிக்க அவனுக்குக் கத்துக் கொடுத்ததே பாலகிருஷ்ணன்தான்!''

''என்னது! எச்னது!''

''ஆமாம், இவர்கள் காதல் விவகாரம் வசந்தியின் பெற்றோருக்கு எட்டிவிட்டது. அவர்கள் கௌரவம் பார்க்கிறவர்கள். வசந்தியின் அண்ணன் வந்து பாலகிருஷ்ணனைக் கையைக் காலை முறிப்பேன் என்று மிரட்ட பாலகிருஷ்ணன் மிரண்டு போனான். ரசாபாசம், தகராறு ஏதுமின்றி வசந்தியிடமிருந்து தப்ப தன் நண்பன் உதவியுடன் ஒரு சின்ன நாடகமாடினான்!''

''ஹூம், ஒரு வீராங்கனைக்கும் இந்தக் கோழைக்கும் கல்யாணமாகாததே ஒரு விதத்தில் சரிதான்'' என்றேன். நண்பன் நடேசன் ஒப்புக்கொண்டான்.



உலகிலேயே மிகுந்த மோசமான சாலை என்று கருதப்படும் நெடுஞ்சாலை ஒன்றை மேற்கு ஜெர்மனியில் அமைத்திருக்கின்றனர். சாலையின் நீளம் பதினாறு கிலோமீட்டர். இதற்கு ஓபெல் மோட்டார்கம்பெனி யாருக்கு மூன்று கோடி 'மார்க்'குகள் செலவாயிற்று. பிழைப்புக் கெட்டு மோசமான சாலையை ஏன் அமைத்தார்கள்? தாங்கள் உற்பத்தி செய்யும் மோட்டார் வாகனங்களின் தரத்தைப் பரிசோதிப்பதற்குத் தான்!

—பி. நாராயணன்

குழந்தை பிறந்த 6 மணி நேரத்திற்கு பின்பு, அது முதல் தடுப்பு ஆகாரம் பெறுகிறது. அதை ஊட்டுவது நீங்கள்தான்.



இயற்கையின் ஒரு வரப்பிரசாதம் தாய்ப்பால்.

தாய்ப்பாலில் இயல்பாகவே நோய் எதிர்ப்புப் பொருள் அடங்கியுள்ளது. புதிதாகப் பிறந்த குழந்தைக்கு, வயிற்றில் வாயுக்கோளாறு மற்றும் இதர நோய் களுக்கு எதிரே பாதுகாப்பு அளிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது தாய்ப்பால்.

இயல்பான ஊட்டச்சத்து

இயற்கையும் அறிந்துள்ளது: குழந்தைக் கான தாய்ப்பாலே உன்னத உணவாகு பவை அதில் இயல்பாக சரிவிகிதமாகக் கலந்துள்ள உடல் வளர்ச்சிச் சத்துக்கள் (புரதம்), சக்தி தரும் சத்துக்கள் (கார்போ ஹைட்ரேட்டுகள், கொழுப்பு) ஆரோக்கியமான பாதுகாப்புச் சத்துக்கள் (வைட்டமின்கள்) ஆகும் (உதாரணமாக தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் வைட்டமின் 'சி' குறைவினால் ஏற்படும் ஸ்கர்வி நோயால் பொதுவாக பாதிக்கப் படமாட்டார்கள்) முலைப்பால் உண்ட குழந்தை பாதுகாப்பையும் தன்னம்பிக்கை யையும் பெறுகிறது. காரணம், பசியைத் தணித்திட குழந்தை முலைப்பாலை உறிஞ்சும்போது, நீங்கள் குழந்தையை அரவணைத்துப் பாசத்தையும் சேர்த் தல்லவா பாலூட்டுகிறீர்கள்.

உலகளாவிப் பிரபலமடைகிறது.

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேலை நாடுகளிலும் கூட முலைப்பால் கொடுத்தல் மிகவும் அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உங்கள் உடல் நல பாதிப்பு அல்லது பால் பற்றாக்குறை ஆகியவற்றால் நீங்கள் குழந்தைக்கு பால் கொடுக்கமுடியாமல் போனால் என்ன செய்வது?

உங்கள் குழந்தைக்கு நீங்கள் சிறந்த 'தாய்ப்பால் மாற்று' தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல்ஸ்ப்ரே

அமுல் ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப் பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போ ஹைட்ரே டுகள், சரியாகக் கலந்துள்ள வைட்ட மின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெது வெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது. முன்னாலேயே அதை பசைபோல் தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

ஆனால் கொதிக்க வைத்த நீர், சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதை தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின்மீது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்றுக.



அமுல்ஸ்ப்ரே


தாய்ப்பாலுக்கு அடுத்ததுதான்

இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—
இதில் அடக்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாடக் கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல் : தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.

ASP/AS-TAM5/83



● தமிழ்நாடு முழுவதும் சத்துணவு மையங்களில் ஒவ்வொரு பண்டிகைக்கும் இனிப்புகள் கொடுத்து விடுமுறையும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஆண்டுதோறும் முக்கியமான குழந்தைகள் தினத்திற்கு இனிப்புகள் கொடுக்கப் படாமலிருப்பது வருந்தத்தக்கது.

பாபநாசம் — பி. கலாநிதி.

● சென்னையில் கால் பந்தாட்டப் போட்டிகளை நடத்தியதைத் தம் சாதனைகளாகக் கூறுகிறார் விட்டல். ஆனால் தமிழ்நாட்டில் பேர் சொல்லிக் கொள்ளக் கூட ஓர் உருப்படியான கால் பந்தாட்ட அணி இல்லையே. தேசிய அளவில் போட்டியிடும் அடிப்படைத் தகுதிகளே இல்லாதவராய் இருக்கிறதே தமிழ்நாட்டு கால் பந்தாட்ட நிலை. போட்டிகள் நடத்திப் பெருமைப்படுவதை விட, சிறந்த அணியை உருவாக்கிப் பெருமை பெற்றால் பாராட்டலாம்.

பெங்களூர். — மோகன ராஜன்.

● பாபு ஜெகஜீவன்ராம் இந்திரா காங்கிரசில் சேரப் போகிறார் என்ற செய்தியை மறுத்த தெய்வசிகாமணி பாபுஜி இந்திரா காங்கிரசில் சேரவில்லை என்று அறிந்து நிம்மதி அடையும் நீங்கள் – உங்கள் இருவரின் கருத்துப்படி இந்திராகாங்கிரசில் சேருவது மாபெரும் பாதகச் செயல் என்பது போலல்லவா இருக்கிறது?

பாபுஜி இருக்க வேண்டிய சரியான இடம் இந்திராகாங்கிரஸ்தான்!

சென்னை–61 — நேசன்.

● ஹரிஜனப் பெண்கள் கற்பழிக்கப்பட்டால் ரூ. 5000 அரசு கொடுப்பதைக் கிண்டல் பண்ணியுள்ளீர்கள். இந்தியாவில் அரிஜனங்கள் மீது நடக்கும் கொடுமையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைத்தட்டிச் செல்கிறது. அதைப் பூசி மெழுகத்தான் இந்த மாதிரிச் சட்டங்கள். ஆனால் அதை மேலும் உங்களைப் போன்றவர்கள் கேலி பண்ணுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல உள்ளது.

கந்தசாமிபுரம் — ஏ. கோபால்ராம்
காரியதரிசி.
அம்பேத்கார் இளைஞர் கூட்டணி.

[கற்பழிக்கப்பட்டதற்கு நஷ்டஈடு தருவதில் கூட ஹரிஜனப் பெண், மற்ற ஜாதிப் பெண் என்று வித்தியாசம் பார்க்கும் அரசின் ஆணைதான் நமது கிண்டலுக்கு உள்ளானதே தவிர ஹரிஜன வகுப்பினர் அல்ல. எனவே அன்பர் கோபால்ராம் நம்மீது வருத்தப்பட அவசியமே இல்லை -ஆசிரியர்]

● 'மனச் சேற்றில் ஒரு நடவு' – ஒரு யதார்த்தமான சிறுகதை.

வேலூர் (வ. ஆ.) — டி. கே. பாஸ்கரன்.

● 'வாழ்க்கைத் தரம்' என்பது வெளி வஸ்துக்களின் பெருக்கத்தில் இல்லை. தரமான வாழ்க்கை மனநிறைவோடு இருப்பது தான்' என்னும் அருள்வாக்கு வரிகள் பொன் நகையில் பதிக்கப்பட்ட வைரக்கற்கள்.

சின்னசேலம். — கோ. பாபு.

● சிரிப்பாய் சிரிக்கும் சிமெண்ட் விவகாரம் பற்றி 'கான்கிரீட்' டான குற்றச்சாட்டுகளை சுமத்தியிருக்கும்துரை முருகனைச் சந்தித்து வெளியிட்டிருக்கும் கருத்துக்களைப் படித்த போது குற்றச்சாட்டுகளுக்கு 'பேஸ்மெண்ட்' இருப்பதாகத் தான் தெரிகிறது.

சென்னை–57. — இரணியல் 'கலை'

● பம்பாய் பஞ்சாலைகள் அரசுடைமை அவசரச் சட்டத்தின் பின்னணியைப் பிட்டுப் பிட்டு வைத்தமைக்கு நன்றி.

செங்கல்வலி — ராணிமுருகவேள்.

● யார் சார் இந்த பிஸ்மி? மிக அழகாகத் தெளிவான நடையில் சிறு கருவை வைத்து ஒரு மர்மத்தைப் பின்னித் தந்திருக்கிறாரே?

மதுரை–16. — என். சந்திரிகா.

● தங்கள் தீபாவளி மலரில் வெளியான 'தனி மரமல்ல' என்ற உமாசந்திரனின் சிறுகதை ஒருசில மாற்றங்கள் கூட இல்லாமல் 'இதயம் பேசுகிறது' 13.11.83 இதழில் 'நிழல் தரும் தனி மரம்' என்ற பெயரில் வெளியாகி உள்ளது. கல்கி போன்ற பத்திரிகையில் இதுமாதிரியான தவறுகள் நிகழ்வது ஆச்சர்யமாக உள்ளது.

மதுரை. — ராஜலக்ஷ்மி சுந்தர்ராஜன்.


[தவறு கல்கி பத்திரிகையுடையது அல்ல. திரு. உமாசந்திரன் இதுவிஷயமாக வருத்தமுடன் தெரியப்படுத்தியது:

இதயம் பேசுகிறது பத்திரிகைக்குக் கதை அனுப்பிப் பல மாதங்களாகியும் அதுபற்றி விவரம் தெரிய வராது போகவே கல்கி தீபாவளிமலருக்கு அதே கதையை அனுப்பியதுடன் இதயம் பேசுகிறதுக்குக் கடிதம் எழுதி நேரிலும் போய்ச் சொல்லியிருக்கிறார். மேற்படி கதைக்குப் படம் தயாராகி விட்டதென்றும் அதற்கேற்ப வேறு கதை எழுதித் தருமாறும் அங்கு கேட்டிருக்கிறார்கள். உமாசந்திரன் ஒப்புக்கொண்டு வேறு கதை எழுதித் தந்திருக்கிறார். இவ்வளவு நடந்த பிறகும் முதலில் அனுப்பிய கதையையே இதயம் பேசுகிறது பிரசுரித்திருக்கிறது. எனவே நமது அனுதாபம் உமாசந்திரனுக்கு உரியதாகிறது.

இது எவ்வாறாயினும் ஒரு கதை கட்டுரை அல்லது துணுக்கை ஒரு பத்திரிகையிலிருந்து திரும்பப் பெறாமல் இன்னொரு பிரதியை இன்னொரு பத்திரிகைக்கு அனுப்புவது முறையல்ல. -ஆசிரியர்.]

சில பல





மீ.ப.சோமு

டிசம்பர் நான்காம் தேதி என்றதும், என் மனம் இருபத்தொன்பது ஆண்டுகள் ஓடுகிறது. 1954 டிசம்பர் நான்காம் தேதி இரவு. ஐந்து தேதி விடியுமுன் ஞாயிற்றுக் கிழமை கல்கி ரா. கி. அவர்கள் நம்மிடையே இருந்து மறைந்தார்.

காலம் எத்தனை வேகமாக ஓடுகிறது! ஆனாலும் அமரர் கல்கியின் நினைவு அப்படியே உள்ளத்தில் பசுமையாக இருக்கிறது. திருக்குற்றாலத்துச் செண்பகாடவியும், மரப்பாலமும், பாபநாசத்துக் கல்யாண தீர்த்தமும் அவரோடு சேர்ந்து என் கண்முன் வருகின்றன. திருநெல்வேலி கைலாசம முதலியார் பாலத்தருகிலும், மீனாட்சிபுரம் ஆற்று மணலிலும், ஆற்றுப் பிள்ளையார் கோவில் எதிரிலும் அவரோடு கழித்த இனிய மாலைப் பொழுதுகள், உரையாடல்கள், அனைத்தும் அலைஓசையுடன் எழுகின்றன!

பாரதியாருக்குத் தமிழ்க் கவி உலகிலே எந்த நிலையான இடம் உண்டோ, அதே நிலையான இடம் மறுமலர்ச்சி உரைநடையிலே கல்கிக்கு உண்டு. தமிழோடும் எட்டையபுரம் பாரதி மண்டபத்தோடும், இந்தப் பத்திரிகையோடும் இரண்டறக் கலந்து உயிர் வாழ்கிறார் அவர்! அந்த அமரருக்கு உங்கள் அனைவரோடும் சேர்ந்து அஞ்சலி செலுத்துகிறேன்!

• • •

சில பலவுக்கு நாள்தோறும் நேயர்களின் கடிதங்கள் வந்த வண்ணமாக இருப்பது கண்டு மிகவும் மகிழ்கிறேன். சிலர் எனது செக்ரடேரியட் அனுபவங்களைப்பற்றி எழுதும்படி 'கேட்கிறார்கள். சிலர் இதன் தொடர்பாக வேறு சில செய்தி விவரங்கள் கோரியிருக்கிறார்கள். என் சொந்த விஷயங்களை விவரமாகவே எல்லாவிதமான ஆதாரங்களோடும் பிறகு சொல்கிறேன். பொது விஷயங்களை இப்போது கவனிக்கலாம்.

சில மாதங்களாகப் பால் விநியோகமுறையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பாலின் தரமும் திருந்தியிருக்கிறது. ஆனால் பால் லாரிகள் குறித்த நேரத்தில் ஒழுங்காய் வருவதில்லை என்று பலரும் குறை கூறுகிறார்கள். என் அனுபவத்தில் சில நாட்களில் மாலை ஐந்து மணிக்குக்கூட லாரி வந்திருக்கிறது! என்றாலும் ஒன்று முக்கியமாகச் சொல்ல வேண்டும். லாரி வந்தாயிற்று என்னும் மகத்தான நற்செய்தி நம் காதுகளில் நன்றாக விழ வேண்டும் என்பதற்காக, அந்த ப்ளாஸ்டிக் பெட்டிகளைப் 'படார், படார்' என்று லாரியிலிருந்து தூக்கித் தூக்கி எறிகிறார்கள்! அதோடு பங்குக்கு உள்ளே உட்கார்ந்து 'க்யூ' வரிசையிலே கொடுத்தால், பால் வருவது, போவது பொது மக்களுக்குத் தெரியாமற் போய் விடுமே என்ற பரிவினால், தெருவிலேயே பெட்டிகளை அடுக்கி வைத்துக் கொண்டு நாமெல்லாரும் முண்டி அடித்துக் கொண்டு கட்டாயம் வாங்கும்படியாகச் சில இடங்களில் விநியோகிக்கிறார்கள்!



புதிய பால் அட்டை தருவதற்காக, பங்குகளிலேயே மாதத் தொடக்கத்தில் குறிப்பிட்ட தேதி என்று வைத்திருக்கிறார்கள். அதோடு இன்னொன்றும் செய்யலாம். ஏதோ காரணங்களால் சிலர் சில நாட்களில் பால் வாங்க முடியாமற் போயிருந்தால், பழைய அட்டையைப் புதுப்பிக்கும் போதே விடுபட்ட நாட்களுக்குரிய பணத்தை அதிலேயே கழித்துக் கொள்ளலாம். அல்லது ஒருநாள் வாங்கத் தவறிய பாலை மறுநாள் சேர்த்து வாங்கிக் கொள்வதற்கு வசதிசெய்யலாம். இப்போது அப்படியில்லை. விட்டுப் போன பாலுக்கு உரிய பணத்தை வாங்குவதற்கு என்றே கிளை அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும் என்று பங்கு ஊழியர் உத்தாரம் சொல்கிறார்!

பால்வண்டி பெரும்பாலும் நேரம் தப்பியே வருவதால் அதனுடைய நல்வரவுக்காகப் பங்கைச் சுற்றிப் பணிப் பெண்டுகள் காத்துக் கிடக்கும் காட்சி பரிதாபமாக இருக்கிறது! அதோடு 'பாலிதீன்' பைகளைப் பற்றி ஒரு நேயர் தெரிவித்த செய்தி பயங்கரமாக இருக்கிறது! ஒரே ஆள் பல வீடுகளுக்குமாகச் சேர்த்துப் பால் வாங்கிப் போய், மறைவாக இருந்து, ஒவ்வொரு பாலிதீன் பையாக 'ஸிரிஞ்' கொண்டு குத்தி ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பாலை ஊசியினால் உறிஞ்சி எடுத்துக் கொண்டு, பிறகு தண்ணீரை அதே மாதிரி ஊசி மூலம் பைக்குள் செலுத்திவிடுவதாக இந்த நேயர் தெரிவித்திருப்பது எனக்கு வியப்பாகவே இருக்கிறது! எளிதில் நம்ப முடியவில்லை. ஆனாலும் 'கலப்படம்' என்னும் அறுபத்து ஐந்தாவது கலையிலே வல்ல கலை மாமணிகள், உணவுப் பண்டங்களிலே செய்கிற தில்லுமுல்லுகளைப் பார்க்கும் போது, எத்தகைய மோசடியும் இந்த நாட்டிலே நடக்கும் என்றே நம்பத் தோன்றுகிறது. அவநம்பிக்கையிலே இப்படி ஒரு நம்பிக்கை! சில பாலிதீன் பைகளில் சன்னமான ஓட்டையின் வழியாகப் பால் கசிவதைப் பார்த்தால் இந்தச் சந்தேகம் வலுக்கிறது!

ஆவின் வெண்ணெய் தரமாக இருக்கிறது. அதுபோலவே ரொட்டிக்குரிய வெண்ணெயும் (மஞ்சள் நிறம் சற்று அதிகம்) நன்றாகவே இருக்கிறது. இவற்றின் விற்பனையை அதிகரிக்க வேண்டும்.

ஆவின் பால்-பொடிக்கு ஒரு 'சபாஷ்' போடலாம்! ஆனால் பொடியை வைத்துள்ள அட்டைப் பெட்டியின் மேலே பொடி நிரப்பிய தேதி, காலாவதித் தேதி என்று கட்டங்கள் அச்சிட்டிருந்த போதிலும் சில பெட்டிகளில் இந்த இடங்களிலே தேதி பதிக்காமல் வெறுமையாக விடுகிறார்கள். இதன் காரணம் புரியவில்லை.

அட்டைப் பால் கொடுக்கிற எல்லாச் சிறிய, பெரிய பங்குகளிலுமே பால்பவுடரும் ஆவின் வெண்ணெயும் விற்பனை செய்ய வேண்டும். ஆரம்பத்தில் சில பங்குகளில் விற்பனை மந்தமாக இருக்கக் கூடும். என்றாலும் பொது மக்களிடையே பழக்கம் பரவவும், பால் பொடியும் வெண்ணெயும் எளிதாகக் கிடைக்கவும், இது வகை செய்யும். அதோடு, பங்குகளின் செயல்முறையைக் கண்காணிப்பதற்கு அவ்வப்போது நியாய உணர்வுள்ள அதிகாரிகள் வந்து சரிபார்ப்பதோடு, அக்கம்பக்கங்களிலும் விசாரிக்க வேண்டும். முக்கியமாக இந்த விநியோக ஊழியர்கள் பொது மக்களிடம் மரியாதையோடு நடந்து கொள்கிறார்களா என்பதைச் சோதிக்க வேண்டும்! அதற்கு அவசியம் இருக்கிறது!

உணவு என்றால் பாலும் அதிலே சேர்த்தி தான்! இதன் விநியோகம் மேலும் முன்னேற வேண்டும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன்.

சூப்பர் ஸ்டார்

மற்றும் ஒரு நகைச்சுவை நாடகம். கதை அமைப்பு சிரிப்புக்கு நிறைய இடம் அளிக்கிறது. வழக்கமான வில்லன் அப்பா ஒரு பணத்தாசை பிடித்த கலப்பட வியாபாரி. படத் தயாரிப்பாளரும் கூட. தமது ஒரே மகளை ஒரு சூப்பர் ஸ்டாருக்குத்தான் மணம் செய்து கொடுப்பேன் என்று அசட்டுப் பிடிவாதம் பிடிக்கிறார். பெண்ணோ அப்பாவுக்கு ஜன்மப் பகையான தன் மாமாவின் மகனைக் காதலிக்கிறாள். மாமன் மகன் சூப்பர் ஸ்டாராக வேஷம் போட்டு வருங்கால மாமனாரை ஏமாற்றி அத்தை பெண்ணை மணம் செய்து தரச் சொல்லிக் கேட்கும்போது குட்டு உடைபட்டு விடுகிறது! ஆனால் அவரே கலப்படக் கேஸில் மாட்டிக் கொள்ளும் போது, மனம் திருந்தி இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறார்.

கோவை அனுராதா கதை வசனம் எழுதி நாடகத்தை இயக்கி விருப்பதோடு, கலப்பட வியாபாரியின் குமாஸ்தா திருப்பதியாக வந்து, தமது சிரிப்பு வெடிகள் மூலம் சபையைக் கலகலக்க வைக்கிறார். வி. ஆர். திலகம், பி. கிருஷ்ணமூர்த்தி, ராம்தாஸ், சுந்தரேசன், நளினி, கண்ணன் எல்லோருமே கொடுக்கப்பட்ட பாத்திரத்தைப் பிசிறில்லாமல், நகைச்சுவை நாடகத்தின் சகல அம்சங்களும் பளிச்சிட, நேர்த்தியாகவே செய்திருக்கிறார்கள்.

'அவர்கள் அப்படித்தான்' மூலம் சென்னை நாடக மேடைக்கு அறிமுகமான கோவை அனுராதாவுக்கு, இது இன்னொரு வெற்றிகரமான நாடகம்.

—சாருகேசி



அஹமதாபாத் டெஸ்ட்

அஹமதாபாத் டெஸ்ட்டில் 138 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியாவைத்தோற்கடித்த மேற்இந்திய அணி, ஆறு பந்தயங்கள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் தன் வெற்றிக்கான வாய்ப்பை அதிகரித்துக் கொண்டுள்ளது.

அஹமதாபாத்தில் டெஸ்ட் நடந்தது இதுவே முதல் முறை. புது இடமும் அரங்கமும் இந்தியாவுக்கு அதிர்ஷ்டத்தைத் தேடித் தரவில்லை. இருப்பினும் தோல்விக்குக் காரணம் அதிர்ஷ்டமின்மை மட்டும் அல்ல. ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுத்ததிலும், ஆட்டத்தை நடத்திச் சென்றதிலும் நடந்த தவறுகளும் காரணம்.

டெல்லி டெஸ்டில் பிரமாதமாக விளையாடிய வெங்ஸர்க்கார் உடல்நிலை சரியின்மையால் ஆட முடியாமல் போனது பேரிழப்புதான். அவருக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தீப் பாடில் அவர் இடத்தை ஈடு செய்யக் கூடியவர் அல்ல. டெஸ்ட் பந்தயத்தில் வீரத்துடன் மட்டையைச் சுழற்றினால் மட்டும் போதாது. வேறு ஆற்றல்களும் தேவை. கிரிக்கெட் திறன் அல்லாத பிற காரணங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கீர்த்தி அஸாதும் சரி, பாடிலும் சரி முதல் தர டெஸ்ட்டில் இடம் பெறும் தகுதியற்றவர்கள். அவர்களுக்குப் பதிலாக குர்சரண் சிங்கும், அசோக் மல்ஹோத்ராவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். திடமான மீடியம் பேஸ் பந்து வீச்சாளரான மதன்லாலுக்குப் பதிலாக இளங் குருத்தான பல்விந்தர் சிங் ஸாந்துவைத் தேர்ந்தெடுத்தது மற்றுமொரு மன்னிக்க முடியாத தவறு. வாயிட் ஸாந்துவின் பந்து வீச்சை விளாசித் தள்ளிவிட்டார். மேலும் மதன்லால் ஒரு சிறந்த கடைநிலை பாட்ஸ்மனாகவும் நின்று ஆடக் கூடியவர்.

குஜராத் கிரிக்கெட் அஸோஸியேஷன் ஒரு புது பிட்சைத் தயாரித்து விட்டு அதில் ஒரு பயிற்சிப் பந்தயம் கூட நடத்திப் பரிசோதிக்காமல் நேரடியாக டெஸ்ட் பந்தயம் நடத்தியது வியப்பூட்டியது. இதனால் பிட்சில் இருந்த தவறுகளைக் கண்டுபிடித்துச் சீர்திருத்த வழியில்லாமல் போய்விட்டது. டெஸ்ட் விளையாடவே அருகதையற்ற இப்பிட்சில் ஆட்டமும் நடந்தேறியது. இரண்டாம் நாள் மாலையே பிட்ச் பாழாகத் தொடங்கி ஆட்டம் அதிவேகமாய் நான்கு நாட்களுக்கு முன்னரே முடிந்துவிட்டது.




○ அஹமதாபாத் டெஸ்டில் 9 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனையாளர்கள் வரிசையில் சேர்ந்த கபில் தேவ், புருடென்ஷியல் கோப்பை வெற்றிக்காகப் பிரதமரிடம் பாராட்டுப் பெறுகிறார்.

ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதில் தவறு செய்ததோடு கபில்தேவ் பிட்சை எடை போடுவதிலும் தவறு செய்து விட்டார். மேற்இந்தியத் தீவுகள் அணிக்கு முதல் பாட்டிங் வாய்ப்பைத் தூக்கிக் கொடுத்தார். பிட்ச் அதிவேகமாய் அழுத்தம் இழந்துவிடும் என்பதை அடிப்படை கிரிக்கெட் ஞானம் உள்ள எவரும் கணித்து விட முடியும்.

இந்தச் சாதுரியமின்மையோடு சேர்ந்து கொண்டது இந்திய ஆட்டக்காரர்களின் அக்கறையின்மை. மேற்இந்திய பிரதான பாட்ஸ்மன்கள் தவறிய போதும் இரண்டு இன்னிங்ஸிலும் கடைநிலை ஆட்டக்காரர்கள் கைகொடுத்தனர். நேர்மாறாக இந்தியாவுக்கு கவாஸ்கரும், கெய்க்வாடும் கூட்டாக முதல் இன்னிங்ஸில் 127 ரன்கள் எடுத்தளித்த போதிலும் பின்னால் விளையாடியவர்கள் அதே அளவு பொறுப்புணர்ச்சி காட்டவில்லை. இதுவே இந்த டெஸ்ட்டின் போக்கைத் திசை திருப்பிய கட்டம். இதன் பிறகு கபில்தேவ் டானியலும், ஹோல்டிங்கும் செய்தது போல் பிட்சின் குறிப்பிட்ட இடங்களைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திப் பந்து வீசினார் என்றாலும் மேற்இந்திய பாட்ஸ்மன்கள் குறிப்பாகக் கடைநிலை

தட்டிவிடப்பட்ட வெற்றி வாய்ப்பு



ஆட்டக்காரர்கள் எதிர்த்து நின்று சமாளித்தனர்.

• • •

டெல்லியில் எழுதிய புதுக்கவிதையை அடுத்து கவாஸ்கர் அஹமதாபாத்தில் காவியம் படைத்தார். பிராட்மனின் சாதனையை முறியடிக்கும் முன்னர் ஹோல்டிங்கின் ஓர் அற்புதப் பந்து இவரை வீழ்த்தியது. இருந்தும் பாய்க்காட்டின் 8114 ரன் சாதனையைக் கடந்த கவாஸ்கர் இந்திய பாட்டிங்குக்கு அஸ்திவாரம் அமைத்தார். அன்றைய ஆட்ட முடிவின் போது இந்தியா 2 விக்கெட் இழப்புக்கு 173 ரன்கள் என்ற ஸ்கோருடன் மேற்கிந்தியத் தீவுகளின் 281 ரன்களை எளிதில் கடக்கக் கூடிய நிலையில் இருந்தது. ஆனால் மறுநாள் பேரிடி காத்திருந்தது. டானியல் 39 ரன்களுக்கு ஐந்து விக்கெட் எடுக்க இந்திய பாட்டிங் மளமள வென்று சரிந்தது. ஸ்கோர் 241-ல் நின்று விட்டது.

இரண்டாம் இன்னிங்ஸில் கபில்தேவின் அரும் பெரும் முயற்சி இந்திய வெற்றிக்கு மறுபடி ஓர் அருமையான வாய்ப்பை ஏற்படுத்தியது. 83 ரன்களை கொடுத்து 9 விக்கெட் எடுத்தார் காப்டன் கபில். இந்த நிலையிலும் மார்ஷலும் ஹோல்டிங்கும் உறுதியோடு விளையாடியது குறிப்பிடத்தக்கது.

கபில் வெள்ளித் தட்டில் வைத்து அளித்த நமது வெற்றி வாய்ப்பை அலட்சியப் போக்கில் தட்டிவிட்டனர் இந்திய பாட்ஸ்மன்கள். கிர்மானியும் மனிந்தர்சிங்கும் இணைந்து எடுத்த 40 ரன்களை இந்திய ஸ்கோர் 103 ஆக உயர உதவியது. இவ்விருவரையும் கெய்க்வாடையும் தவிர வேறு ஒரு ஆட்டக்காரரும் பொறுப்புணர்ச்சியுடன் விளையாடவில்லை. பாடிலும், கீர்த்தி ஆஸாதும் மனம் போன போக்கில் மட்டையைச் சுழற்றியதைக் காண, ஆட்டத்தில் மனம் லயிக்கவில்லை என்ற குற்றச்சாட்டின்பேரில் ஸ்ரீகாந்துக்கு இழைக்கப்பட்ட அநீதி புலனாகிறது. நிச்சயமாக இவ்விருவரைக் காட்டிலும் ஸ்ரீகாந்த் திறம்பட மட்டையைக் கையாளக் கூடியவர்.

பி. என். சுந்தரேசன்

ஆங்கிலக் கட்டுரையின் தமிழ்வடிவம்:
சீதா ரவி

வாரம் ஒரு புத்தகம்

முட்டை



கல்கி ஆசிரியர்: என்ன ஸார், பிரபஞ்சனின் முட்டை நாடக நூலுக்கு விமர்சனம் தயாரா?

நூல் விமர்சகர்: இப்பத்தான் எனக்கு நாடகத்தைப்படிச்ச 'மூட்' வந்துக்கிட்டிருக்கு... பேமானிங்க... சோமாரிங்க...

க. ஆ: யாரைய்யா திட்டறே?

நூ. வி: பேமானிங்களையும் சோமாரிங்களையும் தான்!

க. ஆ: பிரபஞ்சன் இதுக்கு முட்டைன்னு தான் பேர் வைச்சாரா? ஏன் கொட்டைன்னு வைச்சிருக்கக் கூடாதா?

நூ. வி: முட்டைன்னுதான் பேர் வைச்சார் என்று ஒப்புக் கொள்வதானாலும் முட்டை இவரை அடை காத்ததா, இவர் முட்டையை அடை காத்தாரா? நாடகம் என்ற கோழிக்குஞ்சு எப்படி வெளி வந்தது?

க. ஆ: போதும் ஸார்! பேச்சு, பேச்சு! இன்னுமா பேச்சு? பேசிப்பேசியே நாடு கெட்டுப் போச்சு.

நூ. வி: ஏன், எழுதி எழுதிக் கெட்டுப்போகலியா?

க. ஆ: பேசியும் எழுதியும் செயல்பட்டும் கெட்டுப் போச்சு! எப்படிப் பார்த்தாலும் கெட்டே போச்சு. போச்சு, போச்சு, எல்லாம் போச்சு! போச்சு!

(கல்கி ஆசிரியர் தலைமயிரைப் பிய்த்துக் கொள்ளலாம்; அல்லது பிய்த்துக் கொள்வது போல் பாவனை செய்யலாம்.)

நாடகம் நிறைவுற்றது.

'கலை என்பது (விமர்சனக் கலை உள்பட) வாழ்க்கையை அப்படியே பிரதிபலிப்பதாய் அமைந்தால் போதாது. கலைப்பார்வையோடு கிரியா சக்தியோடு சத்ய தரிசனத்துக்கு இட்டுச் செல்ல வேண்டும்' என்ற தமது நோக்கத்தில் பிரபஞ்சன் வெற்றி பெற்றிருப்பதை நாடகத்தைப் படிக்கும் யாரும் உணரலாம். அவருக்கிருக்கும் நகைச்சுவை உணர்வு இந்த வெற்றிக்கு உறுதுணை. இந்த நாடகத்தை நடிப்பதை விட படிப்பதும் கற்பனையில் பார்ப்பதும் அதிகச்சுவை தரும்.

நூலில் இரண்டாவது நாடகமான 'அகல்யா'வை பிரபஞ்சனே கூறுவது போல மணிக்கொடி காலம் தொட்டுப்பலரும் எழுதிவிட்டார்கள். பிரபஞ்சனும் ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்த்து அகலிகையிடம் நமது அனுதாபத்தை மேலும் அதிகரிக்கச் செய்கிறார்.

சிறிய நூலானாலும் சிறப்பானது.

—குட்டி கிருஷ்ணன்

அன்னம் (பி) லிட், சிவகங்கை, விலை ரூ.5.50.



நகர்வலம்
கர்வலம்
ர்வலம்
வலம்
லம்
ம்


ராகவானந்தம்


நா. காமராசன்

இரண்டு தமிழர்கள்

● மயிலை சாஸ்திரி ஹாலில் ஒரு இலக்கியக் கூட்டம். கவிஞர் நா.காமராசன் ''இரண்டு மலையாளிகள் ஒன்று சேர்ந்தால் ஒரு இலக்கியம் படைப்பார்கள். இரண்டு வங்காளிகள் ஒன்று சேர்ந்தால் ஒரு புரட்சி வெடிக்கும். இரண்டு மராட்டியர்கள் ஒன்று சேர்ந்தால் நல்ல கவிதை பிறக்கும். இரண்டு தமிழர்கள் ஒன்று சேர்ந்தால்....'' என்று சொல்லி விட்டுக் கொஞ்சம் நிறுத்தினர். ஒரே சஸ்பென்ஸ். அவர் தொடர்ந்தார்: ''முதலில் இரண்டு தமிழர்கள் ஒன்று சேரட்டும் பிறகு சொல்கிறேன்''— ஒரே கைத்தட்டல்.

● கேரள சட்டசபையில் வரதட்சிணை பற்றிச் சூடான விவாதம். ஒரு உறுப்பினர் சபாநாயகரைப் பார்த்து ''உங்களைப் போல அழகானவர் கிடைத்தால் நான் வரதட்சிணை வாங்க மாட்டேன். இது நிச்சயம்'' என்ருர். சபை முழுவதும் சிரிப்பலை. சபாநாயகர் ஆசனத்திலிருந்த பெண்மணி உட்பட. — தி. நகர் ராமகிருஷ்ணு பள்ளியில் கேட்டது.

● கிரியேட்டிவ் என்டர்டெயினர்ஸ் நாடகக் குழுவினர் ஜனவரியில் தம் அடுத்த நாடகத்தை அரங்கேற்ற இருக்கிருர்கள். சென்னை டி.வி. யில் செய்தி வாசிக்கும் வரதராஜன் நடிக்கும் அதன் பெயர் ''36 பீரங்கி லேன்!'' முழுநீள நகைச்சுவை (துணுக்குத் தோரணை?) நாடகம், கதை — கிரேஸி மோகன்.

● ''சென்னை நகரில் தினத்துக்கு 1500 டன் குப்பை சேருகிறது. அவை வேளச்சேரி பகுதியில் கொட்டப்படுகிறது'' என்று அமைச்சர் குழந்தைவேலு சொன்னதும் பம்மல் நல்லதம்பி (எம்.எல்.ஏ.) சொன்ஞர்: ''இதனுல் ஈ கொசு ரொம்ப அதிகமாகி வேளச்சேரியை ''ஈ நாடு'' என்று தான் குறிப்பிடுகிருர்கள்.

● சென்னை நகரில் நபர் ஒன்றுக்குத் தினமும் 125 லிட்டர் கிடைக்குமாம் — தெலுங்கு கங்கை வந்ததும், 145 லிட்டர் கிடைக்குமாம் 2002—ம் வருடத்தில். அதெல்லாம் சரி! இப்போது எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது? 67 லிட்டர். (சட்டசபையில் அமைச்சர் ராகவானந்தம் பேச்சிலிருந்து.)

● தீபாவளி ஸ்வீட் வகைகளுக்குப் பெயர் போன ஒரு ஹோட்டலில் சாப்பிட்டபோது பில் ரூ. 14.70. இருபது ரூபாய் நோட்டை கவுண்டரில் நீட்டினுல் தரப்பட்டது ஐந்து ரூபாயும் ஒரு பீடாவும். 5 பைசா, பத்து பைசா என்ருல் பாக்குப் பொட்டலமாம்! சில்லறைப் பஞ்சமா? வியாபார தந்திரமா?

—சின்ன கொலம்பஸ்

ஒன்று சேர்ந்தால்...


குழந்தைவேலு


கிரேஸி மோகன்



பூஜையில் இப்போது பூஜை, மந்திரம் இவை செய்து வைக்கும் வைதீகப் பணியைப் பெண்கள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இவைகளில் பல பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஆர். ராதிகா பொன்னு,
பி. எஸ். சி. 3'-ம் ஆண்டு வேதியியல்
புனித சிலுவைக் கல்லூரி,
நாகர்கோவில்-2.

எதிர் வீட்டுக்கு ஒரு கேள்வி

முகமும்
முதுகும்
அருகில் இருந்தாலும்
அறிமுகம் இல்லையே
அதுபோல்தானோ?
நீயும் நானும்.

—மதுக்கூர் ராஜ்குமார்

கழல் எண் 59
இளநிலைப் பயிற்சி மாணவர் பி.எட்.,
அரசினர் கல்வியியல் கல்லூரி,
ஒரத்தநாடு தஞ்சாவூர் மாவட்டம்




நாடகத்தை விமர்சிக்க வந்த பெர்னாட் ஷா இரண்டாம் காட்சியிலேயே தூங்கிவிட்டார்.

நாடக இயக்குனர், "தூங்கிவிட்டீர்களே, எப்படி விமர்சிப்பீர்கள்?" என்று கேட்டார்.

"நாடகம் நடக்கையில் தூங்குவதும் ஒரு விமர்சனம்தான்!" என்றார் ஷா.

—இரணியல் குமாரசுவாமி

பி. எஸ்.ஸி. முதலாண்டு. அரசு
கலைக் கல்லூரி. நந்தனம். சென்னை-35



ஒருவன்: டேய்! நம்ம ராதாவை ஒரு நாளைக்குச் செருப்புப் போடாம வர வைக்கணும்டா!
மற்றவன்: ஏன்டா?
ஒருவன்: அன்னைக்குத்தான்டா அவளுக்கு லவ் லெட்டர் கொடுக்கணும்!

—அ. தங்கவேல்

இளங்கலை புள்ளியியல் (முதலாண்டு)
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி,
சிவில் விமான நிலையம் அஞ்சல்,
கோவை-641.014



தெற்கு தேய்கிறது!

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, தியாகங்கள் பல புரிந்தவர்கள், வட இந்தியாவைச் சேர்ந்த உமேஷ்சந்திரபானர்ஜி நௌரோஜி, சுரேந்திர பானர்ஜி, கோபால கிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய், பிபின் சந்திரபால், சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு, காந்தியடிகள், சுபாஷ் சந்திரபோஸ், நேரு போன்றவர்கள்தானே தவிர, தென் இந்தியர்கள் எவரும் இல்லை.



தென்னகத்தைச் சேர்ந்த வ. உ. சி. திலகருக்கு 'உறுதுணையாக' நின்றார். பாரதியார் தன் பாடல்களால் தமிழ் மக்களிடையே தேசிய உணர்வை வளர்த்தார். சி. இராஜகோபாலச்சாரியார் (இராஜாஜி) மௌன்ட் பாட்டனுக்குப் பிறகு கவர்னர் ஜெனரல் ஆனார்.

அவ்வளவே!

மற்றபடி மூதறிஞர் ராஜாஜி, சத்தியமூர்த்தி, கர்ம வீரர் காமராஜர், பக்தவத்சலனார், தில்லையாடி வள்ளியம்மாள், கொடி-காத்த குமரன், வாஞ்சிநாதன், ஓமந்தூரார்

தலைக்குளம் வேலுத்தம்பி, கட்டபொம்மன் போன்ற நூற்றுக் கணக்கான தென்னகத் தலைவர்களோ, தென்னக மக்களோ இந்திய விடுதலைக்காகப் போராடினதாகவும், வெஞ் சிறை ஏகியதாகவும், தியாகங்கள் புரிந்த தாகவும் கூறப்படுவதை நான் நம்புவதற்குத் தயாராக இல்லை.

'அது' உண்மையாக இருந்தால், தமிழக அரசு, ஆறும் வகுப்புக்கு வெளியிட்டிருக்கும் ''இந்திய வரலாறு'' நூலில் 22, 23, அத்தி யாயங்களில் ''இந்திய சுதந்திரப் போராட் டம்'' பகுதியில் குறிப்பிடாமல் விடுவார் களா என்ன?

தகவல்: இரணியல் ஸி. உமாதேவி,
7வது வகுப்பு, அரசினர் மேல்நிலைப்பள்ளி
இரணியல், நெய்யூர் தபால்-629,802
கன்னியாகுமரி மாவட்டம்





கடவுளுக்குத்தான் எத்தனை வடிவங்கள்?

பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஒருவர் வந்தார்.

''நீங்கள் விஷ்ணு என்கிறீர்கள்: சிவன் என்கிறீர்கள். அதே விஷ்ணுவின் அவதாரம் தான் ராமனும் கிருஷ்ணனும் என்கிறீர்கள். ஒரே விஷ்ணுவுக்கு இத்தனை வடிவங்கள் எதற்கு? ஏன் ஒரே கடவுளாக வைத்துக். கொண்டால் என்ன?'' என்று கேட்டார்.

அதற்கு பரமஹம்சர்,

''நீங்கள் ஒருவர்தான். ஆனால் உங்கள் அப்பாவுக்கு மகன். மகனுக்கு அப்பா. மனை விக்குக் கணவன். மாமனாருக்கு மாப்பிள்ளை. மாப்பிள்ளைக்கு மாமனார். மைத்துனனுக்கு மைத்துனன். பாட்டனுக்குப் பேரன். பேர னுக்குப் பாட்டன். உங்கள் ஒருவருக்கே இத்தனை வடிவங்கள் இருக்கும் போது, ஈஸ் வரனுக்கு இருக்கக் கூடாதா?'' என்றார்.

அர்த்தமுள்ள இந்து மதத்திலிருந்து
வல்லை எஸ். கடலைமுத்து
இளங்கலை இளமறிவியல்,
இரண்டாம் ஆண்டு வேதியல்,
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை

அமெரிக்காசென்றால் அஸ்டிரநாட் ஆகலாம்!

நானும் என் சகோதரி மாலினியும் புனைந்த ஆங்கிலக் கவிதைத் தொகுப்பு 'ருமினேஷனை'ப் பாராட்டி ஐந்தாவது உலகக் கவிஞர் மகாநாட்டிற்கு அழைப்பு வந்தது சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து. மாநாட்டிற்குப் பின் எங்கள் நடனத் திறமையைக் காட்ட (அவள் கதக், நான் பரதநாட்டியம்) அமெரிக்கா—கானடாவில் 'ஜுகல் பந்தி' நிகழ்ச்சி களும் நடத்தினோம்.

வாஷிங்டனில் உள்ள ஸ்மித்ஸோனி யன் இன்ஸ்டிடியூட்டைச் சுற்றி நோக்கி வந்தபோது அங்கு காட்சியில் வைத் திருக்கும் விண்கலங்கள் முன் நின்ற போது என் கற்பனை உயரே பறந்தது. ''ஆஹா நானும் ஒரு விண்வெளி வீராங் கனை ஆனால்...!'' என்று. ''இதோ உன் விருப்பம் ஈடேறப் போகிறது'' என்று என் அக்கா கூவ... ஆம்! அடுத்த அறையில் ''அஸ்ட்ராநாட்'' போல் முகமில்லாப் பொம்மைக்குப் பின் என்னை நிறுத்திப் படம் எடுத்துவிட் டாள்.

—ராஜபுர' கோபாலன்
முதலாண்டு. பி. ஏ.
எஸ். ஐ. இ. எஸ். கல்லூரி
பம்பாய்-22

ஒருவன்: நம்ம தெரு கிளார்க் சீனி வாசன் ஏன் திடீர்னு தாடி வளர்க்க ஆரம்பிச்சுட்டார்?

மற்றவன்: பத்திரிகைகளில் 'சிலுக்குக் குத் தாடி மீது மோகம்' என்ற செய் தியைப் படித்துவிட்டுத்தான்!

—அ. தங்கவேல்



ஒரு மனிதனுக்கு இரண்டு மரங்கள்


—வாஸந்தி—

ஐரோப்பாவுக்கு முதல் முதல் செல்லும் யாத்ரீகர்களுக்கு ஸ்விட்சர்லாந்து போவது ஒரு க்ஷேத்திராடனம் போல. அதன் அழகும் சுத்தமும் ஆரோக்கியக் காற்றும் அனாவசிய டூரிஸ்ட் பிரசாரம் இல்லாமலே பிரசித்தி பெற்றவை.

ஸ்விஸ்காரர்களுக்கு லண்டனும், பாரீஸ் ஸூம் சந்தைக் கடைகள்.

''ஸ்விட்சர்லாந்தில் நான் இருப்பது என்னுடைய அதிர்ஷ்டம் என்று தினமும் நினைத்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சுத்தமான தேசத்தை நீங்கள் எங்கும் பார்க்க முடியாது!'' என்று பெருமைப் பட்டுக் கொண்டார் ஜெனிவாவை எங்களுக்குச் சுற்றிக் காட்டிய ஆங்கிலேய மாது மார்கரெட். முப்பது ஆண்டுகளாக அங்கே வசிப்பவர். சில தினங்களுக்குப் பிறகு நான் லண்டனையும், பாரீஸ்ஸையும் சுற்றி வரும் போது அங்கிருக்கும் நெரிசலிலும் அவர்கள் பாதுகாக்கும் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் கண்டு வியந்தபோது கூடவே இந்தியா பற்றிக் கவலைப்பட்டேன். நான் இந்தியாவை விட்டுக் கிளம்பின அன்று தில்லி விமான நிலையத்தில் — அதிகாலை நான்கு மணிக்கு, விமான நிலையம் — சர்வதேச நிலையம்! — சந்தைக் க்டை மாதிரி இருந்தது நினைவுக்கு வந்தது. அந்தக் கூட்டமும், இரைச்சலும் பாக்கேஜ் செக்கிங்குக்கு ஊழியர்கள் எடுத்துக் கொண்ட நேரமும், விமானம் ஏறுவதற்குள்ளேயே சோர்ந்து போன என் நிலையும் நினைவுக்கு வந்தன.

ஜெனீவா விமான நிலையத்தில் ஜனங்கள் இருந்தார்கள். ஆனால் கூட்டமில்லை. சத்தமில்லை. தரையெல்லாம் அப்பொழுதுதான் பாலிஷ் செய்தாற்போல் பளபளத்தது. ஸென்ட்ரலி ஹீட்டெட் நிலையத்திலிருந்து வெளியே காலடி வைத்ததும் குளிர் ஜில்லென்று தாக்கிற்று. என்னை அழைத்துப் போக ஜயராமன் தம்பதிகளும், திரு. குல்ஜாரை அழைத்துப் போக மார்கரெட்டும் வந்திருந்தார்கள். எங்களைப் பார்த்ததும் இருவரும் அவசரமாகப் பார்க்கிங் இடத்தில் விட்டிருந்த தங்கள் கார்களை எடுத்துவர விரைந்தார்கள். இத்தனை நிமிஷங்கள் தான் பார்க் செய்யலாம் என்று விதியாம். அதை மீறினால் அபராதம் செலுத்த வேண்டும். அதைத் தவிர அங்கிருக்கும் போலீஸ்காரரின் கேள்விகளுக்கு விளக்கம் சொல்வது அதிகக் கஷ்டம் என்றார் மார்கரெட்.





விமான நிலையத்திலிருந்து வீட்டிற்குச் செல்லும் நீண்ட விஸ்தாரமான பாதையில் ஜனநடமாட்டமே இல்லை. பளிச்சென்று தெரிவது விரைந்து செல்லும் கார்கள்—ஸ்டாடிஸ்டிக்ஸ்படி இரண்டு ஸ்விஸ்காரர்களுக்கு மூன்று கார்கள் இருக்கிறதாம்.

கட்டிடங்களுக்கு இடையிடையே விஸ்தாரமான பார்க்குகள். திரும்பும் இடமெல்லாம் பசுமை தெரிந்தது. ஜெனிவாவில் வசிக்கும் ஜனங்களுக்குத் தலைக்கு இரண்டு மரங்கள் என்கிறார்கள்!

ஒரு பாதையை, 'ஏதோ காரணத்துக்காக, முக்கியமாக ரிப்பேர் செய்யும் காரணத்துக்காக அடைக்க வேண்டும் என்றால் ஸ்விஸ்காரர்கள் எப்படி அடைக்கிறார்கள் தெரியுமோ! மலர்த் தொட்டிகளால்! மலர் வளையங்களால்! கரிய, பழைய உடைந்த தார் ட்ரம்மினால் அடைத்துப் பார்த்துப் பழகியிருந்த என் கண்களுக்கு இது மிகப் பெரிய ஆச்சரியத்தை அளித்தது. ஒவ்வொரு வருஷமும் கோடை முடிந்து பனிக்காலம் ஆரம்பிக்கும் வேளையில் அத்தனை தெருக்களையும் கட்டாயமாகப் பழுது பார்க்கிறார்களாம் இங்கு.

வியன்னாவில் இருந்த மாதிரியே இங்கும் புராதனமான கட்டிடங்களின் வெளி அமைப்பை மாற்றக் கூடாது என்று மிகக் கருத்தாக இருக்கிறார்கள். கட்டிடங்களைப் பழுது பார்க்கும்போது இங்கும் இளம் பச்சைநிற நைலான் துணியில் மறைத்துத் தூசி பாதசாரிகளின் மேல் விழாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

மறுநாள் காலை தனது காரில் எங்களை ஊர் சுற்றிக் காட்ட மார்கரெட் உற்சாகமாக வந்தார். வழிநெடுக அவரது சுத்தமான ஆங்கிலமும் ஆங்கிலேயர்களுக்கே உரித்தான ஹாஸ்ய உணர்வும் எனக்கு மிகுந்த சுவாரஸ்யத்தை அளித்தது.

ஜெனிவா நகரத்தை ஒட்டி நீள ரோன் நதி ஓடுகிறது. இந்த நதி ஃப்ரான்ஸ் தேசத்துக்குள் மார்ஸேல்ஸ் என்கிற நகரம் வரை சென்று சமுத்திரத்தில் கலக்கிறது. ரோன் நதியே சமுத்திரம் போல் அக்கரைத் தென் படாமல் நீல நிறமாகக் காட்சி அளிக்கிறது. நதி மூலம் வியாபாரக் கப்பல்களும் ஸ்டீம் போட்டுகளும் செல்கின்றன. நதியின் மையத்தில் JET D'EAO என்று அழைக்கப்படும் பிரும்மாண்டமான செயற்கை ஃபௌண்டனை நிர்மாணித்திருக்கிறார்கள். இவர்களிடம் மிக அதிகமாக மின்சார சக்தி இருக்கிறதாம். உபரியாக இருப்பதை டூரிஸ்ட் அட்ராக்ஷனுக்காக இந்த ஃபௌண்டனுக்கு உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்! உலகத்திலேயே பெரியது.

இந்த நதிக்கரை, (சுமார் 80 கி. மீ.) முக்கால் பகுதி ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்ததாகவும் கால் பகுதி ஃப்ரான்ஸ் நாட்டைச் சேர்ந்ததாகவும் இருக்கிறது.

ஸ்விட்சர்லாந்து ஆரம்ப காலத்திலிருந்து பாதுகாப்பாக இருந்து வந்திருக்கும் நாடு. வெளி ஆட்களின் பிரவேசமோ, ஆதிக்கமோ உள்நாட்டுக் கலகங்களோ ஏற்படாத அமைதியான நாடு. ஸ்திரமான சமூக அமைப்புக் கொண்ட ஜனங்கள். அதனாலேயே இங்கு குற்றங்களும் விவாகரத்துக்களும் மிகக் குறைவு.

சரித்திரக் காரணங்களைத் தவிர இந்த ஜனங்களுக்கு சுவபாவிகமான ஒரு கட்டுப்பாடு, டிஸிப்ளின் இருப்பது ஊரின் அமைப்பிலும் சுத்தத்திலும் அந்தச் சுத்தத்தைப் பாதுகாக்க ஜனங்கள் எடுத்துக் கொள்ளும் அக்கறையிலும் தெரிகிறது.

உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் பெரிய பணக்காரர்களுக்கு ஸ்விட்சர்லாந்து இரண்டாவது வீடு. இங்கிருக்கும் பாங்குகளில் அவர்கள் பதுக்கும் கொள்ளைப் பணத்துக்கு மிகச் சொற்ப வரிதான். இங்கு பிரும்மாண்டமான நிலங்களையும் வாங்கி அரண்மனைகளைப் போல் மிக நவீன வசதி



அருள்வாக்கு

வெய்யில் காலத்தில் விசிறி, குடை தானம், குளிர்காலத்தில் கம்பளி தானம்; பஞ்ச காலத்தில் அன்ன தானம் என்றெல்லாம் சாஸ்திரங்களில் சிறப்பித்துச் சொல்லியிருக்கிற எல்லா தானங்களையும் விட 'வரதக்ஷிணை' என்று அதிகாரப் பிச்சையாக தனம் வாங்குவதை நிறுத்துவது தான் பெரிய தானம் என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றதெல்லாம் ஒரு பீரியட்டுக்கு (கால கட்டத்துக்கு) மட்டும் தான் பயனாவது. வரதட்சிணையோ, இன்றைக்கு ஒருத்தனுடைய வாழ்நாள் முழுவதையும் (பெண்ணைப் பெற்றவனைத்தான் சொல்கிறேன்) பாதிப்பதோடு, எதிர்காலம் பூராவுக்கும் நம்முடைய சாஸ்திரீயமான வாழ்க்கை முறையையும் சாச்வதமான ஸ்திரீ தர்மத்தையும் பாதிப்பதாக இருக்கிறது. ஆனபடியால் வரதக்ஷிணை வாங்காமலிருப்பது நிரந்தர தர்ம தானம் என்று சொல்லலாம்.

ஒரு பக்கம் ஆடம்பரக் கல்யாணம், இன்னொரு பக்கம் கல்யாணத்துக்குப் பணமில்லை என்பதால் பெண்களை வேலைக்கு விடுவது, கடன்படுவது என்கிற மாதிரிக் கஷ்டம் ஏற்பட்டிருப்பது கொஞ்சங்கூட நியாயமில்லை.

Marriageable age (திருமணத்துக்குரிய வயது) என்று ஸர்க்கார் நிர்ணயம் செய்யும் வயசு வந்த பின் வரனை தேட ஆரம்பிப்பது என்று வைத்துக் கொண்டால் வரன் நிச்சயமே அதற்கப்புறம் ஒரு வருஷம் இரண்டு வருஷம் என்று ஆகிறது. இதற்குள் அவள் வெறுமனே இருப்பானேன் என்று காலேஜில் படிக்க வைப்பதில் அவளுக்கு மேலே போஸ்ட் கிராஜுவேட் அல்லது பி. எச். டி. பண்ணினவனைத் தேடுவது; அதற்காக மேலும் ஒரு வருஷம் இரண்டு வருஷம் ஆவதற்குள் இவளைச் சும்மா அகத்தில் உட்கார்த்தி வைப்பானேன் என்று உத்தியோகத்திற்கு அனுப்புவது. அதனால் பி. ஹெச். டிக்காரன் இவளுக்கு மேலே பெரிய ஆபீஸராகவும் இருக்க வேண்டுமென்று மறுபடியும் வரன் தேடுவது என்றிப்படிப் போவதில் 'கன்னிகை' என்பவள் மாமியே ஆகிவிடுகிறாள். இப்படியெல்லாமில்லாமல் சட்டப்படி நிர்ணயிக்கப்படும் மினிமம் வயசுக்கு இரண்டு வருஷம் முன்னிருந்தே வரன் தேட ஆரம்பித்தால் அந்த லிமிட்டைப் பெண் கிராஸ் பண்ணினவுடனேயாவது கல்யாணத்தைச் செய்துவிடலாம்.

— ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகள்

யுடன், கலோனியா, லுகானோ போன்ற அழகிய பகுதிகளில் வில்லாக்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடங்கள் எல்லாம் காரில் உட்கார்ந்தபடி பார்ப்பதற்கே சொர்க்கத்தின் தீவுகள் போல் இருக்கின்றன. வரவர வெளிநாட்டுக்காரர்களின் எண்ணிக்கையும் ஆதிக்கமும் அதிகமாகி விட்டது என்கிற பயம் மக்களிடையே எழுந்திருப்பதால், ஸ்விஸ் பாராளுமன்றம் இனிமேல் வெளியூர்க்காரர்கள் இங்கு நிலம் வாங்கக் கூடாது என்ற சட்டத்தை அமுலாக்கப் போகிறதாம்."

வெளிப்பேரிடம் ஸ்விஸ்காரர்கள் ரொம்ப சிநேகிதமாக இருக்க மாட்டார்கள் என்றார் மார்கரேட்.

ஜார்டின் ஆங்லே என்ற மிக அழகிய பார்க் இங்கு இருக்கிறது. அதில் பிரும்மாண்டமான மலர்க் கடிகாரம் இருக்கிறது. நம்ப முடியாத அளவுக்குப் பல ஆண்டுகளாக சரியான நேரம் காட்டி வேலை செய்கிறதாம். ஸ்விஸ் கடிகாரங்களுக்கு இதுவே பெரிய விளம்பரம். ஆங்கிலத்தில் 'Say it with flowers' என்பார்கள். ஸ்விஸ்காரர்களைவிட இந்த வாக்கியத்தைப் புரிந்து கொண்டவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

அங்கேயே ஒரு இடத்தில் நான் போஸ்ட் கார்டுகளும் ஸுவனிர்களும் வாங்க ஒரு கடைக்குச் சென்றேன். கடையில் ஒரு அலமாரியில் திடீரென்று பளிச்சென்று ஒரு பாக்கெட் கண்ணில் பட்டது. அதில் தமிழ் எழுத்துக்கள் – 'மங்களூர் கணேஷ் பீடி' என்ற எழுத்துக்கள் – அதைப் பார்த்ததும் என்னுள் ஏற்பட்ட பைத்தியக்காரத்தன சந்தோஷத்தைச் சொன்னால் யாரும் புரிந்து கொள்ள மாட்டார்கள்!

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது நிர்மாணிக்கப்பட்ட லீக் ஆஃப் நேஷன்ஸ் கட்டிடம் இங்கு தான் இருக்கிறது! மிக அற்புதமான சில அழகோடு— கட்டிடத்தைக் கட்டுவதற்கு முன் 10,000 டிசைன்கள் பரிசீலனைக்கு வந்தனவாம்! இந்தக் கட்டிடத்தில் 800 அலுவலகங்கள் இருக்கின்றன. கௌன்ஸில் சேம்பர் என்ற அதன் பிரத்யேக கூடத்தில் ஸ்பெயின் நாட்டுக் கலைஞர் ஜோஸ் மரியா ஸர்த் அவர்களின் ஓவியங்களும் இங்கிலாந்தைச்

சேர்ந்த எரிக் கில்லின் கைவண்ணம் முகப்புக் கூடத்தையும் அலங்கரிக்கின்றன.

ஜெனீவாவின் அழகிய தெருக்களில் செல்லும்போது மார்கரெட் திடீரென்று ''இன்னும் நான்கு கி. மீ. தள்ளிப் போனால் ஃப்ரான்ஸ் தேசத்தில் இருப்போம்'' என்றார்.

திரு. குல்ஜார் சிங்கிற்கு உடனடியாக ஃப்ரெஞ்ச் மண்ணை மிதித்து விட்டு வந்து விட வேண்டும் என்று அடக்க முடியாத ஆவல் எழுந்து விட்டது. ''நாளன்றைக்கு நாம் பாரிஸ்ஸில் இருக்கப் போகிறோம். இது என்ன ஆசை உங்களுக்கு?'' என்று நான் தடுத்துப் பார்த்தேன். ஆசாமி கேட்பதாக இல்லை.

''போய் விட்டு வந்துவிடலாம் பத்து நிமிஷத்தில்'' என்ற அவர் பிடிவாதத்திற்கு இணங்கி ஃப்ரெஞ்ச் எல்லையில் எங்கள் பாஸ்போர்ட்டைக் கிரமமாகக் காட்டி ஃப்ரான்ஸிக்குள் கார் ட்ரைவ் செய்தோம். நீள வயற்காடுகளையும், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சின்னச் சின்ன அழகிய வீடுகளையும் பார்த்து விட்டு, சரியாக ஐந்தே நிமிஷத்தில் திரும்பி ஸ்விட்சர்லாந்து எல்லைக்கு வந்து அங்கிருந்த ஸெக்யூரிட்டி காவலரிடம் பாஸ்போர்ட்டைக் காண்பித்தோம்.

அவர் என்னுடைய பாஸ்போர்ட்டையும், குல்ஜாரின் பாஸ்போர்ட்டையும் பார்த்து விட்டு,

''ஸாரி, நீங்கள் ஸ்விட்சர்லாந்துக்குள் இனி நுழைய முடியாது!'' என்றார்.

எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. சில விநாடிகள் கழித்துத்தான் விவரம் புரிந்தது. எங்களுடைய பாஸ்போர்ட்டின்படி ஒரே ஒருமுறை ஸ்விட்சர்லாந்துக்குள் நுழையத்தான் அனுமதி!

குல்ஜாரின் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. எனக்கு வெளிக்காட்ட முடியாத ஆத்திரம். மார்கரெட் வெகு நேரம் ஃப்ரெஞ்சில் அந்த காவலரிடம் பேசிக் குழையடித்த பிறகே அவருடைய விறைப்பான அனுமதியுடன் நாங்கள் ஸ்விட்சர்லாந்துக்குள் காலடி வைக்க முடிந்தது.

இந்த அனுபவத்திற்கு ஒரு நல்ல பலன் இருந்தது. மறுநாள் பாரிஸ்ஸுக்குக் கிளம்புகிற வரை குல்ஜார் சிங் வாயை மூடிக் கொண்டிருந்தார்!

''ஐந்தே நிமிஷம் போய் வந்ததற்கு இத்தனை செடுபிடி செய்கிறார்களே?'' என்று குல்ஜார் முணுமுணுத்துக் கொண்டார்.

மார்கரெட் லேசாகச் சிரித்தபடி ''இந்தியர்களுக்கு இங்கே சட்டங்கள் அனைவருக்கும் ஒரேமாதிரியாகக் கண்டிப்புடன் அமலாவதை புரிந்து கொள்வது சிரமம்'' என்றார். (இந்தியாவில் பிரயாணம் செய்தவர்!).

அவர் சொன்னவுடன் சற்று உறுத்தினாலும், வாஸ்தவமான வார்த்தைகள்தான் என்று நான் வெட்கப்பட்டேன்.

(தொடரும்)





முகமூடித் திருடர்கள் அட்டகாசம் அதிகமாக இருக்கிறதே!

○ ஸ்டீபன் ○ இந்திரா

○ ஏ. கே. நாசர், வெட்கமாங்குடி.

? இந்திய அரசியலில் இன்று புரியாத புதிர் எது?

! ஹெக்டே மகள் திருமணத்துக்குப் போகக் கூடாது என்று தடை விதித்த கர்நாடக இ. காங்கிரஸ் தலைமையின் அல்பத்தனம்.

○ எம். வநிகநாதன், வேதாரண்யம். ★

? மத்திய - மாநில அரசு உறவு இப்போது எப்படி இருக்கிறது?

! மக்களைப் பாதிக்கிற நூற்றுக்கணக்கான பிரச்சினைகளுள் எதுவுமே தீர்க்கப் படாமலிருப்பதற்கு மாநிலம் மத்திய அரசு மீதும், மத்திய அரசு மாநிலம் மீதும் பழியைச் சுமத்திவிட்டுத் தப்பிக்க வசதியாக இருக்கிறது. ராணுவம், அயல் நாட்டுக் கொள்கை, நோட்டு அச்சடித்தல் போன்ற சில முக்கியமான அம்சங்கள் தவிர மற்ற விஷயங்களில் மாநிலங்களுக்குப் பரிபூரண அதி காரங்கள் வழங்கப்பட்டால் மாநில அரசு சாக்குப் போக்குக் கூற முடியாது. மற்ற மாநிலங்களுடன் போட்டிபோட்டுக் கொண்டு வளர்ச்சி பெறாத மாநிலத்தில் ஆட்சியில் உள்ளோர் உபயோகமற்ற வர்கள் என்று மக்கள் புரிந்துகொள்ள வசதியாய் இருக்கும்.

○ திருமதி தேவநாதன், மதுரை.

? ஓர் உன்னத லட்சியத்துடன் உருவாகியுள்ள "ஏக் ஆத்மாதா யக்ஞம்" என்ற அமைப்பைக் கண்டு எள்ளி நகையாடியுள்ள அரசியல் வாதிகள் குறிப்பாக இந்திராகாந்தியைப் பற்றித் தங்கள் கருத்து...?

நானும் உங்களைப் போலத்தான் ஆங்கி லத்தில் படித்து விட்டு 'ஏகட்மாதா', 'ஏகட மாடா' என்று பலவாறு குழப்பிக் கொண்டேன். புதுக ஒன்றுமில்லை. ராம லிங்கரின் ஆன்ம நேய ஒருமைப்பாடு என்ற கருத்தைத்தான் வலியுறுத்து கிறார்கள். அவர்கள் நோக்கம் இந்து மதத்தில் உள்ள பல்வேறு பிரிவினரை யும் இணைத்தல். அடுத்தபடியாக எல்லா மதத்தவரையும் இந்தியர் என்றமுறை யில் ஒன்றுபடச் செய்யலாம். இன்னும் கேட்டால் பங்களா தேஷ் பாகிஸ்தான் ஆகியவற்றோடு ஒரே துணைக் கண்டத் தினர் என்ற முறையில் நட்புறவை வளர்க்கலாம். கங்கை கொண்டசோழன் படையெடுப்பினால் சாதித்ததை இவர்கள் அன்பினால் சாதித்து அவனை மிஞ்சு கிறார்கள். இதை இந்திராகாந்தி தாங்கள் கூறியது போல் எள்ளி நகையாடியிருந் தால் கூடப் பாதகமில்லை, கண்டித்திருக் கிறார். "ஐயோ பாவம்" என்று அவருக்காகப் பரிதாபப் படவேண்டியது தான்.

○ கே. ஆர். கோவிந்தன், திருபுவனம்.

கர்நாடகாவில் ஜனதா எம். எல். ஏக்களை விலைக்கு வாங்கும் இ. காங்கிரஸ் செயல் குறித்துத் தங்கள் கருத்து?

! இதை விடக்கேவலம் ஒன்று உண்டென் றால் அது, எம். எல். ஏக்களை நாங்கள்இ. காங்கிரஸுக்கு இழுக்க முயல்வதில்என்ன தவறு என்று ஸ்டீபன் பகிரங்கமாகக் கேட்டதுதான். பைரே கௌடா இரண்டு லட்சம் பெறத் தகுதியானவர் அல்ல என்பதுதான் அவர் மறுப்பின் அடிப்படை. ஆக ஒவ்வொரு எம். எல். ஏக்கும் ரூபாய்க் கணக்கில் மதிப்பு நிர்ணயித்து அதற்கு மேற்படாத அள வில் பேரம் பேசி இ. காங்கிரஸ் விலைக்கு வாங்கி வருவதை ஸ்டீபன் ஒப்புக் கொள்கிறார். இப்படிப் போகிற வர்கள் நாளை ஒரு குமரியைக் கையைப் பிடித்து இழுத்தால் என்ன தவறு என்று கூடக் கேட்பார்கள்.

○ கலைமணி, சென்னை.

? சட்டமன்றத்தில் புரட்சித் தலைவர் ஆட்சியின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தோல்வி அடைந்ததால் மக்க ளிடையே முதல்வரின் மதிப்பு மேலும் கூடுகிறது என்கிறேன் நான். தங்கள் கருத்து?

○ பாங்கார ○ ஓபிராய்





நீங்கள் கேட்டவை

தராசு

! மக்களிடையே எம். ஜி. ஆர். என்றுமே பிரபலமாக இருக்கிறார். அதைவைத்து ஆட்சியின் செயல்திறனை மதிப்பிடக் கூடாது. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெற்றி பெறாது என்பது அதைத் தாக்கல் செய்தவர்களுக்கு ஆரம்பத்திலேயே தெரியாதா என்ன? ஆட்சியில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டி விவாதிக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதற்காகத் தான் ந. இ. தீர்மானமேயொழிய ஆட்சியைக் கவிழ்ப்பதற்கல்ல. தீர்மானத்தையொட்டிய விவாதங்களின் போது இருதரப்பிலும் பேசப் பட்டவைற்றை மக்கள் உன்னி நோக்கி ஆட்சியை எடைபோட வேண்டுமேயன்றி எண்ணிக்கை பலத்தால் அத்தீர்மானம் அடைந்த தோல்வியை வைத்து அல்ல.

O என். சக்திவேல், பழனி.

? ஆமதாபாத் டெஸ்டில் இரண்டாவது இன்னிங்ஸில் ஒன்பது விக்கெட் எடுத்த கபில்தேவ் பற்றி...?

! வெற்றிக்கு அவரைப் போல் முயற்சி செய்தவரும் இல்லை; அடுத்து ஆடிய நமது பாட்ஸ்மன்களைப் போல் வெற்றிக்கு முயற்சியே செய்யாதவர்களும் வேறு யாரும் கிடையாது. கபில்தேவ் தமது இருதயத்தைக் கசக்கிப்பிழிந்து வேலை வாங்கி சாதனையாளர் வரிசையில் சேர்ந்தார். அடுத்து வந்த நமது பாட்ஸ்மன்கள் இதயமே இல்லாமல் அவரது இதயத்தை உடைத்தார்கள்.

O எல். எஸ். விஜயகுமார், சென்னை 28.

? சத்துணவுத் திட்டத்துக்கு நமது நடிகநடிகையர் தாராளமாக நிதி உதவி அளிக்க முன் வந்திருப்பது குறித்து?

! ரொம்ப சந்தோஷப்பட முடியாமல் மகிழ்ச்சியின் அளவைக் குறைப்பன ஒரு டாக்டர்பட்டத்துக்காகச் செய்யப்பட்ட, ஆபாசமென்றே கருதக் கூடிய அளவில் அநாகரீகமான ஆர்ப்பாட்டங்களும், அதையொட்டி பொது மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களும்.

O இரா. புதுவைவேலு, புதுச்சேரி.

? உலக சாதனைகளை முறியடித்துப் புதிய சாதனைகளை மேலும் மேலும் ஏற்படுத்தி வரும் கவாஸ்கர் பற்றி...?

! பிராட்மனுக்கு இணையான ரிகார்டை அவர் ஏற்படுத்திய போதிலும் பிராட்மனுக்கு இணையான சாதனையை அவர் புரியவில்லை. பிராட்மன் ஆடிய டெஸ்ட்கள் குறைவு. டபுள் செஞ்சுரிகள் அதிகம். ஆனால் பாய்க்காட்டின் ரிகார்டை முறியடித்த கவாஸ்கர் சாதனையிலும் அவரை விஞ்சி விட்டார். கவாஸ்கர் ஆடிய டெஸ்ட்கள் பாய்காட்டை விடக் குறைவு. இத்தனை சாதனைகளைப் புரிந்தவர் 'நான் ஆடியது போதும், இளைஞர்களைப் பழக்க ஓர் அரங்கம் உருவாக்க விரும்புகிறேன்'' என்ற போது நான் கிளீன்போல்ட்!

O ஏ. எஸ். பி. விஸ்வநாதன், செந்தாரப்பட்டி.

? முடிந்த டெஸ்டில் இந்தியா தோற்றதற்குக்

காரணம் இந்தியாவின் திறமையின்மையா, மேற்கிந்தியர்களின் திறமையா?

இரண்டும் தான் என்றாலும் அம்பயர் களைக் குறைகூறிப் பேசி, எழுதியதன் மூலம் தமது வெற்றியின் மதிப்பை லாயிட் வெகுவாகக் குறைத்துக் கொண்டு விட்டார். அம்பயர்களின் ஆற்றல் அல்லது ஆற்றலின்மை இரு கட்சிக்கும் பொது ஆனதால் குறைகூறு வதில் அர்த்தமில்லை. ஒரவஞ்சனையுடன் செயல்பட்டார்கள் என்று சொன்னால் பொருளுண்டு. ஆனால் அப்படி யாருமே குற்றம் சாட்டவில்லை.

○ மேஜர்தாசன், ஈரோடு.

? முகமூடித் திருடர்களின் அட்டகாசம் எல்லா மாநிலங்களிலும் அதிகமாக இருக்கிறதே....?

! நான் அதைவிட அதிகமாகக் கவலைப் படுவது முகமூடி அணியாத திருடர் களின் அட்டகாசம் குறித்துத்தான்.

○ குமரேசன், ராசிபுரம்.

? ஓபிராய் என்பவருக்கு உலக மனிதர் Man of the world என்ற பட்டம் தரப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் படத்துடன் பார்த்தேன். அவர் என்ன சாதித்தார்?

! இன்றைக்குப் பாகிஸ்தானில் உள்ளசிறிய கிராமத்தில் 83 வருஷங்களுக்கு முன் னால் பிறந்தவர் ஓபிராய். கல்யாணத் துக்குப் பிறகு அவர் கிராமத்தில் பிளேக் நோய் பரவியதால் இருபத்தைந்து ரூபா யுடன் ஸிம்லா வந்து சேர்ந்தார். அங்கே ஸிஸில் ஹோட்டலில் ரிஸப்ஷன் குமாஸ்தாவாக வேலைக்குச் சேர்ந்தார். ஹோட்டல் தொழிலின் எல்லா அம்சங் களையும் அனுபவத்தில் கற்றார். 1934—ல் ஸிம்லாவில் கிளார்க்ஸ் ஹோட்டலைத் தமது சொத்தையும், மனைவியின் நகை களையும் விற்று மேற்கொண்டு கடனும் பெற்று வாங்கினார். காலராவால் பாதிக்கப்பட்ட கல்கத்தாவில் கிராண்ட் ஹோட்டலை மூடும்படியாயிற்று. இதைத் தெரிந்து கொண்டு 1938—ல் அதையும் மலிவாக வாங்கினார் ஓபிராய். அதன் பிறகு அவரது நிர்வாகத் திறனும் ஆற்றலும் சுயக்கட்டுப்பாடும் விடா முயற்சியும் அவரை ஹோட்டல் தொழில் மன்னனாக உருவாக்கின. இன்று இந்தியாவின் பிரதான நகரங் களிலும் அயல் நாட்டு நகரங்கள் பலவற் றிலும் ஓபிராய் ஹோட்டல்கள் வான ளாவ எழுந்து ஒரு தனி மனிதன் விடாமுயற்சியால் என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்று உலகுக்கு உணர்த்தி வருகின்றன. ஆக அவர் உலக மனிதர் எனப் போற்றப்படுவதில் வியப்பென்ன?

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

எம். வடிகநாதன்,
பயத்தவரன்காடு
-அகஸ்தியன் பள்ளி (அஞ்சல்),
வேதாரண்யம்-614 810.

ரூ.100 அபராதம் அல்லது மூன்று மாத சிறை

நாங்கள் கேட்டவை



○ காமராஜ்

கேள்வி:– உங்கள் கல்லூரிக்கு 'சுய ஆட்சி' (அடானமி) தரப்பட்டதால் நீங்கள் அனுபவிக்கிற அதிகப்படிக் கஷ்டங்கள் என்னென்ன?

பதில்:– கஷ்டங்கள்தானே! சொல்கிறோம், என்று அடுக்கடுக்காய்ச் சொன்னார்கள் லயோலா கல்லூரி மாணவர் யூனியன் தலைவரான **காமராஜ்** செயலாளர் **அந்தோணி அமலராஜ்** இருவரும். முதல் பாயிண்ட் கட்டாயமான அட்டன்டென்ஸ். எழுபத்தைந்து சதவீத அட்டன்டென்ஸ் கட்டாயம். அதற்குமேல் வந்தால் போனஸ் மார்க்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். இரண்டாவது எப்படியும் சராசரியாக வாரம் ஒரு டெஸ்ட்டாவது இருக்கும். ஒரு டெஸ்ட்டை எழுதி, அப்பாடா என்று நிமிர்ந்து பார்த்தால், அடுத்த டெஸ்ட் வந்துவிடும். மூன்றாவது மாணவர்கள் பல்வேறு பாட சம்பந்தப்பட்ட தலைப்புகளில் பேசவேண்டும். இதற்காகப் பாடப் புத்தகங்கள் தவிர அதிகப்படியான புத்தகங்கள் நிறைய வகுப்பு நேரத்துக்குப் பிறகும் நூல் நிலையங்களுக்குச் சென்று படிக்க வேண்டும். நான்காவது அசைன்மென்ட்ஸ். இதற்கும் மார்க் உண்டு. ஐந்தாவது, எங்களுடைய தேர்வில் மார்க்குகளுக்குப் பதிலாக 'கிரேடுகள்' O, A, B, C,.... என்று வழங்கப்படுகிறது. உதாரணமாக கணக்கில் 85 மார்க் வாங்கினாலும் சரி, நூற்றுக்கு நூறு வாங்கினாலும் சரி, கொடுக்கப்படும் கிரேடு 'ஓ!' இதனால் மாணவர்களின் தனித்தன்மை தெரியாமல் போகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக 50 மார்க் இன்டர்னல் அஸெஸ்மென்ட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், பொதுவாகவே மாணவர்களுக்குக் கல்லூரி நிர்வாகத்திடம் ஒருவித பய உணர்வு இருக்கிறது. ஆனாலும் ஒரு விதத்தில் சந்தோஷம். எல்லாம் எங்கள் நன்மைக்குத்தானே?

எப். பாலசந்திரன்

சென்னை நகர துணை போலீஸ் கமிஷனர்

கேள்வி:– தியேட்டர்களில் கள்ள மார்க்கெட் டிக்கெட் விற்பதில் தியேட்டர்காரர்களும் உடந்தையாமே?

பதில்:– இது நிஜமில்லை என்று முற்றிலும் மறுக்க முடியாதுதான். ஆனால் தியேட்டர்களில் இப்போது கள்ள டிக்கெட் விற்பனை குறைந்திருக்கிறது என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியும். வேலை இல்லாத சிலர் தியேட்டரில் டிக்கெட் கொடுப்பவர் கையைச் சரிக் கட்டி, ஒவ்வொரு காட்சிக்கும்



○ பாலசந்திரன்

இத்தனை டிக்கெட் என்று வாங்கி விற்கிறார்கள். ஆனால் தியேட்டர் உரிமையாளர், நிர்வாகிகள் இவர்களுக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு என்று சொல்ல முடியாது.

தியேட்டரில் கள்ள மார்க்கெட் டிக்கெட் விற்று மாட்டிக் கொண்டால், அதிகபட்சம் 100 ரூபாய் அபராதம், அல்லது மூன்று மாத சிறை தண்டனை. சென்னை போலீஸ் சராசரியாக வாரம் ஒன்றுக்கு 50 கேஸ்கள் பிடிக்கிறோம். பிளாக்கில் டிக்கெட் விற்பதைப் பார்த்தால் உடனே 845058 என்ற எண்ணுக்குப் போன் செய்து செய்தி தெரிவிக்கவும். போலீஸார் தியேட்டருக்கு விரைவார்கள்.

பேட்டி: என் சந்திரமௌலி
போட்டோ: ஜெய்மோகன்

உற்சவமூர்த்தி
காளஹஸ்தி அம்மன்
வண்ணப்படம்: ஹரலிங்கம்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka